இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 77 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 29, சனிக்கிழமை 11.02.2017

## நிர்ணய விலையில் அரிசி விற்க முடியும்

### இறக்குமதியாளர்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 11
அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள நிர்ணய விலைக்கு அமைய அரிசியை விநியோகிக்க முடியும் என்று அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் நிகால் செனவிரத்ன >> 24

## கிழக்கிலும் நேற்று எழுக தமிழ் ஊர்வலம்




மட்டக்களப்பு,பெப்.11
மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற எழுக தமிழ் ஊர்வலத்தில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். மட்டக்களப்பு கல்லடி மணிக் கூட்டு கோபுரத்துக்கு அருகில் இருந்து ஊர்வலம் ஆரம்பமானது. நாவற்குடா விவேகானந்தா விளையாட்டு மைதானத்தை ஊர்வலம் வந்த டைந்ததும் எழுக தமிழ் நிகழ்வுகள் அங்கு நடைபெற்றன. (வ-5)

(செய்திகள் பக்கம் 2)

# 11ஆவது நாள்

# பிலக்குடியிருப்பு மக்கள் போராட்டம் வலுக்கிறது

### பல்வேறு தரப்புக்களும் பேராதரவு

யாழ்ப்பாணம், பெப். 11
11 நாள்களாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள முல்லைத்தீவு - பிலக்குடியிருப்பு மக்களுக்கு பேராதரவு பெருகி வருகின்றது. பல்வேறு அமைப்புக்களும், நிறுவனங்களும், பிலக்குடியிருப்பு மக்களுக்காக போராட்டங் >> 24



## தோட்டக் காணி கிணற்றிலிருந்து வெடிகுண்டுகள் நேற்று மீட்பு

யாழ்ப்பாணம், பெப். 11
இராணுவத்தினர் பயன்படுத்திக் கைவிட்டுச் சென்ற காணியின் கிணற்றிலிருந்து பெருமளவு வெடி குண்டுகள் நேற்று மீட்கப்பட்டன. விவசாயத்துக்காகக் கிணற்றைத் துப்புரவு செய்தபோது அவை வெளிப்பட்டன என்று பொலிஸார் தெரிவித் தனர்.
இந்தச் சம்பவம் நேற்று சரசாலை தெற்குப் பகுதியில் உள்ள பொன்னையா சிவபாக்கியம் என்பவரின் காணியில் இடம்பெற்றது.
இந்தக் காணியில் >> 24

# பன்றிக் காய்ச்சல் தொற்று வடக்கில்

### 3 சிறார்களுக்கு வைத்தியசாலை தனிப் பிரிவில் சிகிச்சை

கிளிநொச்சி, பெப்ரவரி 11
வன்னியில் 3 சிறார்களுக்கு பன்றிக் காய்ச்சல் (இன்புளுவென்சா குடும்பத்தில் எச்1என்1 வைரஸ்) நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களுக்கு வைத்தியசாலைத் தனிப் பிரிவில் வைத்துச் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. இந்த நோய்த் தொற்று அச்சுறுத்தல் வடக்கு மாகாணம் முழுவதும் உள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
2008ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் பன்றிக் காய்ச்சல் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் இது பற்றிய எச்சரிக்கைத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் இந்த நோய்த் தொற்றுக்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும். காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களுடன் வருபவர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி, சம்புக்குளம், முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு, றெட்பானா மற்றும் மாங்குளம் ஆகிய பிரதேசங்களில் 5 வயதுக்குட்பட்ட 3 பேர் காய்ச்சலி >> 22

### காணிகளை விடுவிக்கத் தவறின்

# வடக்கு முழுவதும் பாடசாலை முடக்கம்

### தமிழர் ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

முல்லைத்தீவு, பெப். 11
முல்லைத்தீவு, பிலக்குடியிருப்பு மக்களுடைய போராட்டம் சில தினங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவரும் வகையில் காணிகளை விடுவிக்க வேண்டும். தவறின் வடக்கு மாகாணம் முழுவதும் ஆசிரியர்களும் மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபடுவர்.
இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் பிலக்குடியிருப்பில் வைத்து நேற்று அறிவித்தது. >> 24



### தமிழக ஆளுநர் அதிரடி

## ஆட்சி அமைப்பதற்கு சசிகலாவை அழைக்க மறுத்துவிட்டார்

சென்னை, பெப்.11
தற்போதைய சூழலில் சசிகலாவை ஆட்சி அமைக்க அழைக்க முடியாது என்று புதுடில்லி >> 04

## தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

### அனைத்துப் பல்கலை. மாணவர்களும் ஆதரவு

முல்லைத்தீவு, பெப். 11
பிலக்குடியிருப்பு காணி உரிமையாளர்களுக்குத் தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் முற்றுப் பெறாது என்று முல்லைத்தீவு மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்தது. மக்களுடன் இணைந்து மாணவர் ஒன்றியத்தினரும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். >> 24



## காணிகளுக்குள் செல்லும்வரை நகரமாட்டோம்

### புதுக்குடியிருப்பு மக்கள் உறுதி

முல்லைத்தீவு, பெப். 11
'இராணுவத்தை வெளியேற்றி எங்களுடைய காணிகளுக்குள் செல்லும் வரை நாங்கள் இங்கிருந்து நகரவே மாட்டோம்' என்று புதுக்குடியிருப்பு >> 24

## காதலிப்பதாகக் கூறி இளம் பெண்ணிடம் ரூ. 43 லட்சம் மோசடி

### பதுளையில் நைஜீரிய இளைஞன் கைது

கொழும்பு, பெப். 11
முகநூல் மூலம் பதுளையைச் சேர்ந்த இளம்பெண்ணிடம் பணமோசடி செய்த நைஜீரிய இளைஞன் கைதுசெய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 22ஆம் திகதி >> 24

முச்சந்தி முரளி



அவரின்ர உதவி இல்லாம இப்பிடி தண்ணி காட்ட முடியுமோ பாருங்கோ...

### ஈ.பி.டி.பி. செலுத்தாத மின் கட்டண நிலுவை

## இரகசியமாக வைத்திருந்தால் நடவடிக்கை எடுக்கப்படுமாம்

### யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் மின்சக்தி அமைச்சர்.

யாழ்ப்பாணம், பெப். 11
ஈ.பி.டி.பி.யின் ஸ்ரீதர் தியேட்டருக்கான மின்கட்டண நிலுவை 85 லட்சம் ரூபா செலுத்தப் படாமை தொடர்பான தகவலை இரகசியமாக வழங்குங்கள். நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார் மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் >> 24

## 11 தமிழர்களைக் கடத்தியோரை கைது செய்ய நீதிமன்று உத்தரவு

கொழும்பு, பெப். 11
2008ஆம் ஆண்டில் 11 தமிழர்கள் கொழும்பில் காணாமற்போகச் செய்யப்பட்ட சம்பவங் களுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்யுமாறு, கொழும்பு கோட்டை >> 24

## ஹெல உறுமய கட்சிதான் மகிந்தவை போருக்குள் தள்ளி புலிகளை ஒழித்தது

### இப்படிச் சொல்கிறார் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, பெப். 11
மகிந்த புலிகளுடன் போரிடுவதற்கு இணங்கவில்லை. டிரான் அலசின் ஊடாகப் புலிகளுக்குப் பணம் அனுப்பி அவர்களைப் பேச்சுக்கு அழைக்கும் வேலையைத்தான் அவர் >> 24

## 2016ஆம் ஆண்டு எய்ட்ஸ் நோயால் 47 பேர் சாவு

கொழும்பு, பெப். 11
கடந்த வருடத்தில் மாத்திரம் நாடு முழுவதும் 47 பேர் எய்ட்ஸ் நோயால் உயிரிழந்தனர் என்று தேசிய எய்ட்ஸ் ஒழிப்புத் திட்டம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
2015இல் 31 நோயா >> 24



# இலங்கைக்கு கால நீடிப்பை வழங்கக் கூடாது

## மட்டு. எழுக தமிழ் பிரகடனத்தில் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், பெப். 11
ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கை அரசுக்கு மேலதிக கால நீடிப்பு எதனையும் வழங்கக் கூடாது.

இவ்வாறு மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற 'எழுக தமிழ்' ஊர்வலத் தின்பிரகடனத்தில்வலியுறுத்தப்பட்டது. யாழ்ப்பாணத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி நடைபெற்ற 'எழுக தமிழ்' ஊர்வலத் தின் முடிவில், வெளியிடப்பட்ட பிரகடனத் தில் சொல் லப்பட்ட விடயங்களே, மட்டக்களப்பு பிரகடனத்திலும் தெரி விக்கப்பட்டது.

தமிழ் இனப் படுகொலைக்கான நீதித் தேடலில் - உள்ளகப் பொறி முறை பயனற்ற - சாத்தியமற்ற - ஒன்று எனத் தமிழ் மக்கள் தொடர்ச் சியாக நிராகரித்து வருகின்றனர். ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் செப்ரெம்பர் 2015ஆம் ஆண்டு அறிக்கை மிகத் தெளிவாக இலங் கையின் நீதித்துறை போரின் போது இழைக்கப்பட்ட குற்றங்க ளுக்கு நீதி வழங்க தகைமையற்றது எனக் கூறியது. இருப்பினும் ஐ.நா வின் அங்கத்துவ நாடுகள் இணைந்து கலப்பு பொறிமுறை ஒன்றே இலங் கைக்குப் பொருத்த மானது என தமது செப்ரெம்பர் 2015 பிரேரணை மூலம் விதந் துரைத்தனர். அதனை ஆரம்பத் தில் ஏற்றுக் கொண்ட இலங்கை அரசு தற்போது வெளிநாட்டு நீதிபதி களை உள்ள டக்க முடியாது எனத் தெளிவாக அறிவித்துவிட்டது.

கலப்பு பொறிமுறையை நிராகரித்து மீள உள்ள கப் பொறிமுறையை மட்டுமே முன்வைக்கின்றது. அத் தோடு, அதனைச் செய்வதற்கு ஏற் கெனவே வழங்கப்பட்ட கால அவகாசத்தை மேலும் நீடித் துத் தருமாறும் தற்போது கோரி நிற் கின்றது. இந்தப் பின்னணியில், இலங்கை அரசுக்கு எத்தகைய கால நீடிப்பும் வழங்கப்படக் கூடாது என வலியுறுத் துவதோடு, தமிழ் இனப் படுகொலைக்கான பன் னாட்டு விசாரணையை மட்டுமே தமிழ் மக்களின் ஏகோபித்த நிலைப் பாடாக வலியுறுத்துவதாகப் பிர கடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.
(வ-5)

# இராணுவத்தை திரும்ப அழைத்துவிட்டு பொலிஸாரை இரட்டிப்பாக்கவேண்டும்

## மட்டு. எழுக தமிழ் ஊர்வலத்தில் முதலமைச்சர் விக்கி யோசனை

யாழ்ப்பாணம், பெப். 11
வடக்கு, கிழக்கில் நிலைகொண் டுள்ள இராணுவத்தினரை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திரும்ப அழைக்க வேண்டும். தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்ற, மனிதா பிமானத்துடன் பக்கச்சார்பின்றி போருக்குப் பின்னரான மக்களின் பாதிப்புக்களை உணர்ந்து செயற் படக்கூடிய பொலிஸாரை வடக்கு, கிழக்கில் இரட்டிப்பாக நிலை நிறுத்த வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற எழுக தமிழ் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
69 வருடங்களுக்கும் மேலாக நாங் கள் எங்கள் குறைகளைக் கூறிக் கொண்டு வருகின்றோம். ஆனால் செவிடன் காதில் மகுடி இசைத்த கதை யாகவே இருந்து வருகின்றது. இதற் குக் காரணம் உறங்குபவனை எழுப்பலாம். உறங்குவது போல் பாசாங்கு செய்பவனை எழுப்புவது மிகச் சிரமம். ஒரு வேளை பச்சைத் தண்ணீர் கொண்டு முகத்தில் தெளித் தால் அவன் எழும்பக் கூடும். உறங் குபவர்கள் போலக் காண்பவரை உசுப்பி எழுப்பவே இந்த எழுக தமிழ் நடை பெறுகின்றது.

### அரசுதான் காரணம்

13ஆவது திருத்தச் சட்டம் தந்தோம் அல்லவா என்கின்றார்கள் சில சிங் களத் தலை வர்கள். நீங்கள் எங்கே தந்தீர்கள்? அது இந்தியாவின் அனுசரணையால் கிடைத்தது. அதுவும் இந்தியர்களுக்குத் தெரி யாமல் சட்டத்தைப் பலமற்றதாக மாற்றிய பின்னரே தரப்பட்டது. தரு வதற்கு உங்களுக்கு மனமிருந் தால் நாங்கள் கேட்காமலே தந்தி ருப்பீர்களே! இந்த யதார்த்தத்தைத் தான் தமிழர் விடுதலைக் கூட்டணி யின் முன்னாள் தலைவர்கள் அம ரர் அமிர்தலிங்கம், அமரர் சிவ சிதம்பரம் ஆகியோரும் தற் போதைய தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா.சம்பந் தனும் 1987ஆம் ஆண்டு முன் னாள் இந்தியத் தலைமை அமைச் சர் ராஜீவ்காந்திக்கு அனுப்பிய கடிதத்தில் வெகு விவரமாக எழுதி அவருடைய தலை யீட்டை எதிர் பார்த்திருந்தனர். ஆனால் அது நடைபெறவில்லை.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் உங் களை எவ்வளவு நம்பினார்? 2016 இல் கட்டாயம் தருவார்கள் என்று எதிர்பார்த்தார். தந்தீர்களா? உங்களுக்குத் தர மன மில்லை என்பது உலகறிந்த விட யம். எனவே நாங்கள் கூட்டம் கூடிக் கேட்க வேண்டிய நிலைக்கு எங் களைத் தள்ளியது நீங்களே என்று அரசைப் பார்த்துக் குறை கூறு கின்றேன். எங்கள் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தியதும் உங்களா லேயே என்று குற்றம் சாட்டுகின் றேன்.

### தொடர்பில்லாதது

அரசமைப்பு உருவாக்கத்தின் நிமித் தம் போர்க்குற்ற விசாரணை தேவை யில்லை என்று சந்திரிகா அம்மை யார் கூறியுள் ளார். இவை இரண் டுக்கும் தொடர்பே இல்லை. ஒன்று நடந்து முடிந்தது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். பாதிக் கப்பட்டவர் களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும். மற்றையது இன்னும் நடைபெறாதது. அர சியல் சம்பந்தமான எமக்கிருக்கும் உரித்துக்களைத் தர, எம்மிடம் இருந்து பறித் தெடுத்த உரித்துக் களைத் தர, பாதிக்கப்பட்ட எம்மக் களின் நலனையும் உரிமைகளை யும் விலைபேசப் பார்க்கின்றாரா சந்திரிகா அம்மையார்?

### முன்னேற்றம் இல்லை

இந்த அரசில் அங்கம் வகிக்கின்ற இரு பெரும்பான்மை அரசுக் கட்சி களும் இந்த நாட்டின் அரசமைப்பு ஒற்றையாட்சிக்கு அமை வாகவே தொடரும் என்றும் நாட்டில் கூட் டாட்சி அரசமைப்புக்கு இடமில்லை எனவும் இந்த நாடு மத சார்பற்ற நாடாக மாறாது என்றும் உரக்கக் கூறுவதை நாம் காண்கின்றோம். அதற்கும் மேலாக ஓர் அரசியல் தலைவர் 13ஆவது அரசமைப்புத் திட்டத்தில் வழங்கப்பட்ட அதிகாரங் களுக்கு மேலே மாகா ணங்களுக்கு அதிகாரங்களை வழங்குவது பற்றி சிந்திக்கின்ற தருணம் இதுவல்ல என்று கண்டி மாநகரில் வைத்து தெரிவித்திருப்பது கவனிக்கப்படல் வேண்டும்.

இவற்றையெல்லாம் பார்க்கின்ற போது அர சமைப்புத் திருத்தத்தில் இப்போது இருக் கின்ற நிலையை விட ஒரு சிறு முன்னேற்றங் கூட ஏற்படும் என்று எண்ணத் தோன்ற வில்லை. இது எமக்கு ஒரு புதிய வெளிச்சத்தைக் காட்டியுள்ளது. யாழ்ப்பாணத்தில் நடந்த முதலா வது 'எழுக தமிழ்' நிகழ்ச்சியை யும் விட உறுதியாகவும் ஆக்ரோசமாக வும் எமது கோரிக்கைகளை முன் வைக்க வேண்டிய தேவை இப்போது ஏற்பட்டுள்ளது.

### முஸ்லிம் - தமிழ் உறவு

தமிழ் - முஸ்லிம்களுக்கு இடையி லான சில சம்பவங்கள் எம்மிடை யில் ஆறாத வடுக் களை ஏற்படுத்தி யுள்ளன என்பதை மறுக்க முடி யாது. இருந்த போதிலும் தமிழ்த் தாயின் புதல்வர்கள் என்ற முறை யில் முன்னர் எவ்வாறு எப்படி ஒற்று மையை நிலைநாட்டினோமோ அவ்வாறே இன்றும் வேறுபாடுக ளைக் களைந்து எமது உரிமைகள் ஆட்சியாளர்களால் உதாசீனம் செய்யப்பட்டு பறிக் கப்படும் போது நாம் ஒன்றுசேர்ந்து ஏகோபித்த குரலோடு எமது கோரிக்கைகளை முன்னெடுக்கவும் வென்றெடுக்க வும் முன்வர வேண்டும் - என்றார்.
(வ-5)

### ஐ.தே. க. - சு.க. மோதல் உச்சம்

# மைத்திரியின் அதிகாரத்தை ரணில் கையிலெடுப்பதாகக் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 11
முழு நாட்டு மக்களாலும் தெரிவு செய்யப் பட்ட அரச தலைவரின் அதிகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டு கொழும்பு மாவட்ட மக்களால் மாத்திரம் தெரிவு செய்யப்பட்ட தலைமை அமைச்சர் ரணிலால் எப்படி நாட்டை ஆட்சி செய்ய முடியும்? இது தொடர் பில் அரச தலைவர் ஒரு முடிவை எடுக்க வேண்டும்.

இவ்வாறு இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:
மகிந்த அணியினரால் நுகேகொடையில் நடத்தப்பட்ட அரச எதிர்ப்புக் கூட்டத்துக்கு என்னை அழைக்காத போதிலும், ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்னை அந்தக் கூட்டத்துக்குப் போகுமாறு கூறினர். ஐக்கிய தேசிய கட்சி, சுதந்திரக் கட்சியை அடக்கி ஆள்வதற்கு நான் தடையாக இருப்பதால்தான் இவ்வாறு கூறி னார்கள். நுகேகொடை கூட்டத்துக்கு மக்கள் செல் வதற்கு பாதை அமைத்துக் கொடுத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர்தான். சுதந்திரக் கட்சியை கட்டுப்படுத்துவதற்கு அவர்கள் எடுக்கும் நடவடிக்கை மற்றும் மக்கள் விரோத செயற்பாடுகளுமே இந்த நிலமைக் குக் காரணம்.

மைத்திரியை பின்தள்ளிவிட்டு ரணில்தான் நாட்டை ஆட்சி செய்வதற்கு முற்படுகின்றார். முழு நாட்டு மக்களாலும் தெரிவு செய்யப் பட்ட அரச தலைவரின் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு கொழும்பு மாவட்ட மக்களால் மாத்திரம் தெரிவு செய்யப்பட்ட தலைமை அமைச்சர் ரணிலால் எப்படி நாட்டை ஆட்சி செய்ய முடியும்? இது தொடர் பில் அரச தலைவர் ஒரு முடிவை எடுக்க வேண்டும். தலைமை அமைச்சர் என்பவர் பியோன் போன்றவர் என்று ஜே.ஆர். ஜயவர்தன தெரிவித்துள்ளார். அப்படி இருக்க வேண்டும் என்று நாம் கூறவில்லை. மக்கள் வழங்கிய அதிகாரத்துக்கு ஏற்பவே செயற்பட வேண்டும் என்றே நாம் சொல் கிறோம்.

மைத்திரியின் அதிகாரத்தை ரணில் கையில் எடுத்துக் கொண்டாரா என்று மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கியுள்ளனர்.மக்கள் குழம் பிப் போயுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் இவ்வாறான செயற்பாடுகளால் அரச எதிர்ப்பு இனவாதக் கும்பலுக்கு வாய்ப்புக் கிட்டி யுள்ளது - என்றார்.
(வ-5-3)

# முல்லை. தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை

யாழ்ப்பாணம், பெப். 11
முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரி மையாளர் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு முல்லைத் தீவு மாவட்ட செயலகத்தின் மாநாட்டு மண்ட பத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட தனியார் பேருந்து உரி மையாளர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் 89 உரி மையாளர்களும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் கேட்டுள்ளார்.

பொதுக்கூட்டத்தில் நீண்டகாலமாக உள்ள சில தற்காலிக வழித்தட அனுமதிப்பத்திரங்கள் தொடர் பாகவும் ஏனைய பல போக்குவரத்து ஒழுங்கு படுத்தல்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்ப டும் என்று தெரிவிக்கப்பட்டது.
(வ-4)



# ஒன்றிணைந்த மின்சக்தி நிலையம் எழுவைதீவில்

யாழ்ப்பாணம், பெப்.11
இலங்கையின் முதலாவது ஒன்றிணைந்த மின்சக்திநிலையம் நேற்று எழுவைதீவில் ஆரம்பிக் கப்பட்டது.
ஆசிய அபிவிருத்தி வங்கியும், இலங்கை அரசும் இணைந்து இந்த மின்சக்தி நிலையத்தை அமைத்துள்ளன.
187 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த மின்சக்தி நிலையத்தை அமைச்சர் ரஞ்சித் சிம்பலாப்பிட்டிய, பிரதி அமைச்சர் அஜித் பெரேரா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ. அங்கஜன் ஆகியோர் இணைந்து திறந்தனர்.
நிகழ்வில் யாழ். மாவட்ட செயலாளர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், இந்து கிறிஸ்தவ மத குருமார், இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய முகாமையாளர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-106)

# பிலக்குடியிருப்பு மக்களுடைய காணியை விடுவிக்க வேண்டும்

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றம்

முல்லைத்தீவு,பெப.11
முல்லைத்தீவு, பிலக்குடியிருப்பு மற்றும் கேப்பாபிலவு போன்ற பிரதேசங்களில் பாதுகாப்புத் தரப்பால் கையகப்படுத்தப்பட்டுள்ள மக்களின் குடியிருப்புக் காணிகள் விடுவிக்கப்பட்டு, உரியவர்களிடம் தாமதமின்றிக் கையளிக்கப்பட வேண்டும்.
இவ்வாறு அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் நிறைவேற்றியது.
அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் முல்லைத்தீவு மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இரு விசேட பொதுக் கூட்டங்கள் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றன. கரைதுறைப்பற்று பிரதேச சபை மண்டபம், புதுக்குடியிருப்பு பிரதேசசபை மண்டபம் என்பவற்றில் நடைபெற்ற சங்கத்தின் இரு வேறு விசேட கூட்டங்களிலும் சங்க உறுப்பினர்களான தொழிலாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி மீட்புக்காக மக்கள் அகிம்சைப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டம் பல நாள்கள் கடந்தும் அரசு பாராமுகமாகவே இருந்து வருவது கண்டிக்கத்தக்கது. மக்களின் காணிகள் இன்னும் தாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டும்.
உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை அரசு இன்னும் பிற்போடாது உடன் நடத்தி மக்கள் பிரதிநிதிகளின் நிர்வாகத்தில் உள்ளூராட்சி சபைகளைக் கொண்டுவர வேண்டும்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் கடற்றொழில் புரிவோர் தமது தொழிலை முடித்துக் கொண்டு கரைதிரும்பும்போது துறைகள் தெரியாது அவதியுறுகின்றனர். முல்லைத்தீவு கரையோரங்களில் உரிய துறைகள் சார்ந்து வெளிச்சவீடுகள் அமைக்கப்பட வேண்டும்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியேற்றம் நடைபெற்று சுமார் ஏழுவருடங்களாகியும் நகரில் பேருந்து நிலையம் அமைக்கப் படவில்லை. முல்லைத்தீவு மாவட்டத்துக்கான மத்திய பேருந்து நிலையமொன்று நவீன வசதிகளுடன் அமைக்கப்பட வேண்டும்.
முல்லைத்தீவு பிரதேச சபை நகரசபையாகத் தரமுயர்த்தப்படுவதுடன் ஒட்டுசுட்டானுக்கு தனிப் பிரதேச சபை உருவாக்கப்பட வேண்டும் போன்ற தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (ற-30)

# கடத்தப்பட்ட தமிழர்கள் இருவர் படுகொலை; தடயத்தை அழிக்க முயன்றது இராணுவம்!

## நீதிமன்றில் அறிக்கையிட்டது குற்றப் புலனாய்வுப் பிரிவு

கொழும்பு, பெப்.11
2009ஆம் ஆண்டு கொழும்பில் கடத்தப்பட்டு காணாமற் போயிருந்த தமிழர்கள் இருவரும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அதை மறைக்க அவர்கள் பயணித்த வாகனத்தை வெலிசறை கடற்படை முகாமுக்குள் வைத்து துண்டு துண்டாக வெட்டியுள்ளனர்.
இவ்வாறு நீதிமன்றுக்கு அறிக்கையிட்டது குற்றப் புலனாய்வுப் பிரிவு.
2009 ஆம் ஆண்டு கொழும்பு கொட்டாஞ்சேனையிலிருந்து வெல்லம்பிட்டியவை நோக்கி வாகனத்தில் சென்ற வடிவேல் பக்கிரிசாமி லோகநாதனும், இரத்தினசாமி பரமானந்தனும் கடத்தப்பட்டனர். அது தொடர்பான வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் ஜெயராம் டொஸ்கி முன்னிலையில் நேற்று முன்தினம் எடுக்கப்பட்டது. குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர்.
2008 ஆம் ஆண்டு கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த ஜோன் ரீட் என்பவர் வாகனத்துடன் கடத்தப்பட்டுள்ளார். அவரது வாகனம் இலக்கத் தகடு மாற்றப்பட்டு திருகோணமலை கடற்படை முகாமில் பயன்படுத்தப்பட்டது. 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அந்த வாகனத்தை நாம் கைப்பற்றினோம். இந்த வாகனத்தின் கதவுகள் வெலிசறை கடற்படை முகாமின் உளவுப் பிரிவுக்குச் சொந்தமான இரகசிய அறையில் உள்ளன என்று தகவல் கிடைத்தது. நீதிமன்ற உத்தரவைப் பெற்று அங்கு தேடுதல் நடத்தப்பட்டது.
கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் நாம் மேற்கொண்ட சோதனையில் 72 துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட வாகனப் பாகங்கள் மீட்கப்பட்டன. ஒரு வாகனப் பாகத்தில் இருந்த செஸி இலக்கம் இரசாயன பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. 2009 ஆம் ஆண்டு வெல்லம்பிட்டியவை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது கடத்தப்பட்ட லோகநாதனின் வாகனமே அது என்பது கண்டறியப்பட்டது.
லோகநாதனுடன் பயணித்த இரத்தினசாமி பயன்படுத்திய அலைபேசி வேறு 'சிம் அட்டை' உட்செலுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டமை எமி இலக்கம் ஊடாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இரத்தினசாமியின் அலைபேசியை பேருந்து ஒன்றில் இருந்து எடுத்தேன் என்று கூறி கடற்படை சிப்பாய் ஒருவர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவில் கையளித் தார்.
லெப்டினன் கொமாண்டர் தயாநந்தவே வேறு 'சிம் அட்டையைப்' பயன்படுத்தி இரத்தினசாமியின் அலைபேசியைப் பயன்படுத்தினார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெறாது மூடி மறைக்கப்பட்டமை புலனாய்வுப் பிரிவால் கண்டுபிடிக்கப்பட்டது. கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரின் ஆரம்ப விசாரணைகள் உரிய முறையில் நடத்தப்படவில்லை. அவர்கள் பொறுப்பற்றுச் செயற்பட்டு, தகவல்களை மறைத்துள்ளனர்.
லோகநாதனின் அலை பேசியை வெலிசறை முகாமில் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய லெப்டினன் கொமாண்டர் தொன் சுமேத கண்டெடுத்துக் கொடுத்தார். அவருக்கும் அவ ரது குழுவுக்கும் தெரிந்தே இந்தக் கடத்தல் இடம்பெற்றுள்ளமை புலனாய்வாளர்களால் கண்டறியப்பட்டது.
காணாமற்போனவரின் அலைபேசியை பொலிஸாரிடம் ஒப்படைத்தவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் போது கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவின் பணிப்பாளராக இருந்த அதிகாரியால் அதற்கு முட்டுக்கட்டை ஏற்படுத்தப்பட்டு ஒரு கட்டத்தில் ஆராய வேண்டாம் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.
எமது விசாரணைகள் அதன் பின்னர் தீவிரமாகின. லோகநாதனின் வாகனத்தை 72 துண்டுகளாக வெட்டினார் என்று நம்பப்படும் சந்தேக நபரான கடற்படைச் சிப்பாயைக் கைது செய்தோம். அவர் வாகனத்தைத் தாம் துண்டு துண்டாக வெட்டியதை ஒப்புக் கொண்டார். வெலிசறை முகாமுக்கு முன்பாக அந்த வாகனம் நிறுத் தப்பட்டிருந்தது என்றும், கப்டன் குருகே அதில் குண்டு உள்ளது என்று கூறி சோதனையிடச் சொன்னார். அதற்காகவே வாகனம் துண்டுகளாக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.
வாகனத்தில் குண்டு இருந்தது என்று கூறப்படுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். அதில் குண்டு இருந்ததா என்று பரிசோதிக்க முகாமுக்கு வெளியில் இருந்த வாகனத்தை முகாமுக்குள் கொண்டு சென்றுள்ளனர். இது முற்றிலும் வேடிக்கையானது. இது குறித்து எவருக்கும் அறிவிக்கவில்லை. குண்டு இருந்திருப்பின் அதனை கொண்டுவந்தவர்களை 8 வருடங்களாகியும் தேடவில்லை.
கடத்தியவர்களைக் கொலைசெய்துவிட்டு அதை மறைக்கவே வாகனத்தை முகாமுக்குள் எடுத்துத் துண்டு துண்டாக வெட்டியுள்ளனர். கடத்தப்பட்டவர்களது உடைமைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. அலைபேசிகள் கடற்படையினர் பலரால் பயன்படுத்தப்பட்டுள்ளன. தங்க நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன. சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படுவார்கள். - என்று மன்றில் சமர்பிக்கப்பட்ட அறிக்கையில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (ற-5)

# வீட்டுக்குள் புகுந்த இராணுவச் சிப்பாய் கைது

## கிளி. ஊற்றுப்புலத்தில் சம்பவம்

இரவுவேளை வீடொன்றுக்குள் புகுந்தார் என்று குற்றஞ்சாட்டப்படும் இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டார். பொது மக்கள் வழங்கிய தகவ லின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் நடந்துள்ளது.
குறித்த சிப்பாய் தொடர்பாக பொதுமக்கள் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு அறிவித்தனர். பொலிஸார் ஊற்றுப்புலத்தில் உள்ள இராணுவத்தினருக்கு அறிவித்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற இராணுவத்தினர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரின் உதவியுடன் அந்தச் சிப்பாயைக் கைது செய்தனர். மு.ப. 10 மணி யளவில் சிப்பாய் இராணுவப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று இராணுவத்தினர் தெரிவித்தனர்.
என்னுடன் இருந் தவர் எனது கணவர். விடுமுறையில் செல்வதாகக்கூறி எமது வீட்டில் இருந்தார் என்று கூறியே எனது கணவரை இராணுவத்தினர் பிடித்துச் சென்றனர் என அந்த வீட்டிலுள்ள பெண் தெரிவித்தார். (ற-21)

# அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

மாலபே சைட்டம் நிறுவனத்தை சட்டரீதியானதாக மாற்ற அரசு முயன்றால் அதற்கு எதிராக தேவையான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளத் தாம் தயாராய் உள்ளதாக அரச மருத்து அதிகாரிகள் சங்கம் அரசை எச்சரித்துள்ளது.
நேற்றுமுன்தினம் மாலை நுகேகொடையில் நடைபெற்ற கூட்டத்தில் கருத்துத் தெரிவித்தபோது அந்தச் சங்கத்தின் செயலாளர் நவீன் டி சொய்சா இவ்வாறு தெரிவித்தார். அந்தச் கூட்டத்தில் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம், மக்கள் விடுதலை முன்னணி, கூட்டு எதிர்க்கட்சி என்பவற்றின் உறுப்பின[illegible]கலந்து கொண்டனர். (ற)

தகவல் அறியும் உரிமைச் சட்டம்

## உலகில் மூன்றாவது இடம் இலங்கைக்கு கிடைத்தது

கொழும்பு, பெப். 11
தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் நாடுகளின் வரிசையில் இலங்கைக்கு மூன்றாவது இடம் கிடைக்கப் பெற்றுள்ளது.
கனடாவிலுள்ள சட்டம் மற்றும் ஜனநாயகம் என்பவற்றுக்கான மைய நிலையம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.
இலங்கையின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நிறைவேற்றப்பட்ட போது உலகில் ஏழாவது சிறந்த இடத்தில் அதுகாணப்பட்டது. சிலமாதங்களுக்கு பின்னர் இது 9 ஆவது இடத்தில் காணப்பட்டது. கடந்த வாரம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதன் பின்னர், இலங்கைக்கு 10 புள்ளிகள் அதிகம் கிடைக்கப் பெற்றுள்ளது. இதனால் இலங்கை உலகில் மூன்றாவது இடத்துக்கு உயர்ந்துள்ளதாகவும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (வ-4)

## குருநாகலில் நேற்று ஒருவர் சுட்டுக்கொலை

குருணாகல் கொடவெஹர, நாலகமுவ பிரதேசத்தில் நேற்று மாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்படும் நபர் துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என்று கொடவெஹர பொலிஸார் தெரிவித்தனர். சந்தேநபர் 43 வயதுடைய நாலகமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர். 37 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்தார். பணக் கொடுக்கல் வாங்கல் முரண்பாடு இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு காரணம் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## குடாநாட்டில் 40,000 வீடுகளுக்கு காற்றாலைகள் மூலம் மின்சாரம்

### மின்சக்தி அமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.11
காற்றாலை மூலமாக மின்சாரம் பெறும் திட்டத்துக்கான காற்றாலைகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சங்குப்பிட்டி - கேரதீவுப் பகுதியில் அமையவுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் 40 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் வழங்க முடியும்.
இவ்வாறு மின் சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய தெரிவித்தார்.
இலங்கை மின்சார சபையின் காற்றாலை செயற்திட்ட அலுவலகத்தைச் சாவகச்சேரி தபாலக வீதியில் நேற்று முன்தினம் அமைச்சர் திறந்து வைத்தார். அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கூட்டு அரசு பொது மக்களின் நலனில் அக்கறை கொண்டு பல திட்டங்களை செய்து வருகின்றது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் சாதாரண (நீர்) மின் திட்டத்திலிருந்து இயற்கை காற்றின் மூலமாக- காற்றாலை மூலமாக மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளது.
முன்னர் சாதாரணமாக 23 ரூபாவுக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வந்த நிலையில் இந்தக் காற்றாலை மின் உற்பத்தி மூலமாக பன்னிரண்டு ரூபா இருபத்தொன்பது சதத்துக்கு வழங்கக்கூடியதாக உள்ளது. இதனால் 60 வீதம் குறைவான விலையில் மக்கள் நலத்திட்டத்தை நோக்கமாகக் கொண்டு வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
இந்தத் திட்டத்தில் 10 காற்றுவிசிறிகள் பொருத்தப்பட்டு தலா 2 மெகா வாட்ஸ் அடிப்படையில் 20 மெகாவாட்ஸ் மின்சாரம் உற்பத்தி செய்யப்படவுள்ளது -என்றார்.
'இந்தத் திட்டம் சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி உப அலுவலகப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த வேலைகள் துரிதமாக இந்தமாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தப் பணிகள் ஆரம்பிக்கும் நிலையில் மின்மார்க்க உயரழுத்தக் கம்பிகள் கேரதீவு சங்குப்பிட்டிப் பகுதியிலிருந்து சாவகச்சேரி மற்றும் நாவற்குழி மற்றும் ஏனைய பகுதிகளுக்கும் விரிவாக்கம் செய்யப்படும் என்று இந்தத் திட்டத்தின் திட்டப் பணிப்பாளர் சமிந்த தெரிவித்தார். (வ-4,9,131)

## ஹெஜிங் மோசடி விசாரணைக்கு தயாராகிறது கோப் குழு

யாழ்ப்பாணம், பெப். 11
ஹெஜிங் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கவனம் செலுத்தியுள்ள கோப் குழு, அது சம்பந்தமாக உயர் மட்ட அதிகாரிகளிடம் விசாரணை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. இன்னும் இரண்டு வாரங்களுக்குள் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடையவர்கள் விசாரணைக்கு அழைக்கப்படவுள்ளனர் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து >> 24

## பொலிஸார் மாறிவிட்டனர் என்கிறார் பூஜித்

பணம், அதிகாரம் மற்றும் அரசியல் என்பவற்றுக்காக பொலிஸார் செயற்பட்ட காலம் முடிவுக்கு வந்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.
இமதுவவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பொலிஸ் நிலையத் திறப்பு விழா நேற்று இடம்பெற்றது. அதில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
லஞ்சம் பெற்றுக் கொள்ளல் மற்றும் பல்வேறு தவறுகளை செய்து வரும் பொலிஸ் அதிகாரிகள் போன்றோருக்கு தன்னிடத்தில் எந்தவொரு மன்னிப்பும் கிடையாது என்றும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (வ-4)

## சைட்டம் சர்ச்சை குறித்து இன்று மைத்திரியுடன் பேச்சு

மாலபே சைட்டம் தனியார் மருத்துவ கல்லூரி தொடர்பில், நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமை குறித்து பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு இன்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை சந்திக்கவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்தது.
அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இன்று காலை 9 மணிக்கு இந்தப் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாக அந்தச் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் சமந்த ஆனந்த தெரிவித்தார். (வ)

## ரஷ்யாவுக்கு பறந்தார் சைட்டம் அதிகாரி

துப்பாக்கி சூட்டில் தப்பிய சைட்டம் மாலபே தனியார் மருத்துவக் கல்லூரியின் முதன்மை நிறைவேற்று அதிகாரி, மருத்துவர் சமீர சேனாரத்ன திடீரென வெளிநாடு சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
அவர் நேற்றுக் காலை ரஷ்யாவுக்குப் புறப்பட்டு சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். கடந்த 6ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கி சூட்டுச் சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் இரசாயனப் பகுப்பாய்வாளர் ஆய்வு செய்தார்.
மேலும் மருத்துவர் சமீர சேனாரத்ன சம்பவம் இடம்பெற்றபோது அணிந்திருந்த ஆடை, பொலிஸ் பாதுகாப்பில் கொண்டுவரப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## வடக்கு ஆசிரியர் பற்றாக்குறையை நிரப்ப நடவடிக்கை

### வடக்கு கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.11
வடக்கு மாகாணப் பாடசாலைகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. விரைவில் ஆயிரம் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்.
இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாண கல்வி அமைச்சால் நடத்தப்படும் மாதாந்தக் கலைவிழா, இம்முறை வவுனியா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. வவுனியா தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணத்தில் இன்னமும் சில பாடசாலைகளில் சில பாடங்களுக்கு ஆசிரியர்கள் பற்றாக்குறை உள்ளது. அவற்றை நிரப்ப நடவடிக்கை எடுத்துள்ளேன்.. தெற்கில் 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் உள்ளார். வடமாகாணத்தில் 15 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் உள்ளார். இருந்தாலும் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது என்று கூறுகின்றனர்.
யாழ்ப்பாணத்தில் வாள் வெட்டில் ஈடுபடும் மாணவர் சமூகம் உருவெடுத்துள்ளது. தென்னிந்தியத் திரைப்படங்களை மாணவர்கள் பார்த்து, அதுபோல் தாம் ஆக வேண்டும் என்று நினைக்கிறார்கள். தென்னிந்தியப் படங்களை பின்பற்றும் மாணவர் சமூகம் உருவாகப் பெற்றோர்கள் இடம் கொடுக்கக் கூடாது.
ஒப்பீட்டளவில் வடமாகாணத்தின் கல்விப்பெறுபேறுகள் வீழ்ச்சியடைந்துள்ளன. 21ஆம் நூற்றாண்டின் வளர்ச்சிக்கு ஏற்ப அறிவுள்ள மாணவர் சமூகம் உருவாக்கப் பாடசாலை அதிபர்கள் சீராக இயங்க வேண்டும். ஒரு பாடசாலையின் மாணவர் கல்வித் தரத்தை உயர்த்த அதிபர்களின் முயற்சி அதிகம் தேவை. அதிபர் சரியாக இருந்தால் கல்வித்தரம் உயரும். ஆசிரியர்களும் அதற்காக உழைக்கவேண்டும்.
முழுநிலாக் கலைவிழாவின் ஊடாக மாணவர்களை வேறு திசையில் செல்லாது, கலைச் சிந்தனை ஊடாக கல்வித்தரத்தை மேம்படுத்துவதே எனது நோக்கு. மாணவர்களுக்குக் கடந்தகால வரலாறுகளை நாம் கற்றுக் கொடுக்க வேண்டும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
வன்னியை ஆண்ட மன்னன் பண்டாரவன்னியனின் சிலையை வன்னியின் பல்வேறு இடங்களில் நிறுவ வடக்கு மாகாணசபை தீர்மானித்துள்ளதை வரவேற்கிறேன். மாணவர்கள் கடந்தகால வரலாற்றை அறிய இது உதவும் – என்றார்.
நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வவுனியா மாவட்ட மேலதிக செயலாளர் திரேஸ்குமார், வவுனியா வடக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் ஸ்ரீஸ்கந்தராஜா, அதிபர்கள், ஆசிரியர்கள், வலயக் கல்வி உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-420)

## கோபுர கலச குடமுழுக்கு

யாழ்ப்பாணம், பெப். 11
பன்னாலை தெல்லிப்பழை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய நுழைவாயிற் கோபுர கலச குட முழுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9. 56 மணி தொடக்கம் மு.ப. 10. 05 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறும் என்று ஆதீனகர்த்தாக்கள் அறிவித்தனர். (வ-10)

## முதியோர் சங்க மாதாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், பெப். 11
கோப்பாய் வடக்கு முதியோர் சங்க மாதாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறும் என்று செயலர் ந.கணலிங்கம் அறிவித்தார். (வ-10)

## ஆட்சி அமைப்பதற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசின் உள்துறை அமைச்சருக்கு தமிழக ஆளுநர் வித்யாசாகர் ராவ் அறிக்கை அனுப்பினார்.
இதுதொடர்பான, தமிழக அரசியல் நிலவரம் குறித்து ஆளுநர், புதுடில்லி உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிற்கு 3 பக்க அறிக்கையை அனுப்பி உள்ளார்.
ஆளுநரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீராக உள்ளது. ஜல்லிக்கட்டு போட்டிகள் தமிழகம் முழுவதும் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. அதிமுகவில் நிலவும் பிரச்சினை உட்கட்சி பிரச்சினைதான்.
சொத்துக் குவிப்பு வழக்கில், உச்ச நீதிமன்றம் சில தினங்களுக்குள் தீர்ப்பு வழங்க உள்ள சூழலில், சசிகலாவை ஆட்சி அமைக்க அழைக்க முடியாது.
அ.தி.மு.க., சட்டமன்ற உறுப்பினர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனரா, அவர்களில் சூழல் என்ன ? என்று விசாரணை நடத்துமாறு தமிழக பொலிஸ் ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளேன். தமிழக அரசியலில் இதுவரை இல்லாத விசித்திரமான அரசியல் சூழல் ஏற்பட்டுள்ளது. மிக விரைவில் தெளிவான ஒரு சூழல் ஏற்படும் என நம்பிக்கை உள்ளது - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (வ)

# அதிபர்களுக்கான சிறப்பு கொடுப்பனவு அதிகரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 11
அதிபர் தரங்களிலுள்ளவர்களுக்கு வழங்கப்படும் சிறப்புக் கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.
அது பற்றிய அமைச்சரவைப் பத்திரம் அமைச் சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு கடந்த புதன்கிழமை அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.
நாடு முழுவதிலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் வெற்றிகரமாக நிர்வகித்துவரும் அதிபர்கள் முகம்கொடுக்கும் துயரங்களைக் கருத்திற் கொண்டு குறித்த கொடுப்பனவை அதிகரிக்குமாறு நாம் கடந்த ஜனவரி 16ஆம் திகதி கல்வி அமைச்சருடன் கலந்துரையாடியிருந்தோம்.
அதன்படி கல்வி அமைச்சரால் அமைச்சரவைக்கு பத்திரம் முன்வைக்கப்பட்டது. அதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.
அதன்படி, 1ஏபி பாடசாலைகளின் அதிபர்களுக்கு இதுவரை காலமும் இருந்த 250 ரூபா கொடுப்பனவு 6 ஆயிரத்து 500 ரூபாவாகவும், 1சி பாடசாலை அதிபர்களுக்கு இருந்த 600 ரூபா கொடுப்பனவு 4 ஆயிரம் ரூபாவாகவும், ரைப் 2 பாடசாலைகளின் அதிபர்களுக்கு இருந்த 450 ரூபா கொடுப்பனவு 3 ஆயிரம் ரூபாவாகவும் ரைப் 3 பாடசாலை அதிபர்களுக்கு இருந்த 300 ரூபா கொடுப்பனவு 2 ஆயிரத்து 500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
விரைவிலேயே அதிபர்களின் கொடுப்பனவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்று அரசு தெரிவித்ததாக பொதுச் செயலாளர் ஸ்ராலின் மேலும் தெரிவித்தார். (வ-4)

## புத்தளம் உட்பட வடக்கில்
# 20 ஆயிரம் லீற்றர் பனம் களியைச் சேமிக்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.11
புத்தளம் உட்பட வடக்கில் இந்த வருடம் சுமார் 20 ஆயிரம் லீற்றர் பனம்களியைச் சேமிப்பதற்கு பனை அபிவிருத்திச் சபை திட்டமிட்டுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் வடக்கின் பனைவளப் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.
பனை அபிவிருத்தி சபையால் கடந்த வருடம் மட்டும் சுமார் 26 ஆயிரம் லீற்றர் வரையிலான பனம் களி சேமிக்கப்பட்டது. இவற்றில் 5 ஆயிரம் லீற்றருக்கு மேற்பட்ட பனம் களி உள்ளூர் உட்பட வெளி மாவட்டங்களுக்கும் சந்தைப்படுத்தப்பட்டன.
இதேவேளை இந்த வருடத்துக்கான போகத்தில் பனம்பழத்தில் இருந்து பெறப்படும் பனம்களியைப் பெற்று, சுமார் 20 ஆயிரம் லீற்றர் வரையிலான பனம் களியைச் சேமிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.
அதனைவிட, ஏனைய பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் பனம்களியும் சேகரிக்கப்படும். இவ்வாறு சேகரிக்கப்படும் பனம் களியை அடுத்த வருடத்தில் பயன்படுத்த முடியும்.
சபையால் சேமிக்கப்படும் பனம் களி ஊடாக பல்வேறுபட்ட உணவுப் பொருள்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஐஸ்கிறீம், யோகட் உட்பட மற்றும் பொருள்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
அத்துடன் இந்த வருடத்தில் பனம்களியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களை மேலும் அதிகரிக்கவும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பனை அபிவிருத்திச் சபை தெரிவித்தது. (ஐ-17)

## தாதிய உத்தியோகத்தர் பொலிஸாரால் விடுவிப்பு

வவுனியா,பெப்.11
வேலை பெற்று தருவதாகக் கூறி, பணம் பெற்றுக் கொண்ட வவுனியா வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தரொருவர், தாம் பெற்றுக்கொண்ட பணத்தை மீள ஒப்படைத்ததால் விடுவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
வவுனியா பொது வைத்தியசாலையின் 4ஆம் இலக்க விடுதியில் தாதிய உத்தியோகத்தராகப் பணியாற்றும் மருதமடுவசெட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த தாதிய உத்தியோகத்தர் ஒருவர், திணைக்களம் ஒன்றில் வேலை பெற்றுத்தருவதாகத் தெரிவித்து நான்கு பேரிடம் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் பணம் பெற்றார்.
பல நாள்களாகியும் அவர் வேலைபெற்றுத்தரவில்லை எனத் தெரிவித்து, பணம் கொடுத்து ஏமாற்றப்பட்டவர்கள் வவுனியா பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு செய்தனர்.
முறைப்பாட்டை அடுத்து பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை குறித்த தாதிய உத்தியோகத்தரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர். பணம் கொடுத்தவர்களையும் அழைத்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.
பணத்தைப் பெற்றுக் கொண்ட தாதிய உத்தியோகத்தர் பணத்தை மீள ஒப்படைப்பதாகத் தெரிவித்ததுடன், தனது தவறுக்கு மன்னிப்பும் கோரினார். அத்தோடு பணத்தையும் திருப்பி வழங்கினார்.
இதனை அடுத்து குறித்த தாதிய உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டார். பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுமுடிவுக்குக் கொண்டு வரப்பட்டது எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ-21)

## அலைமொழி பிரதேச மலருக்கு ஆக்கங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், பெப். 11
ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால் வெளியிடப்படும் பிரதேச மலருக்கான ஆக்கங்கள் கோரப்படுவதாக பிரதேச செயலர் அறிவித்தார்.
தீவகம் வடக்கு பிரதேச செயலகத்தால் ஒவ்வொரு வருடமும் வெளியிடும் அலைமொழி - 2 பிரதேச மலர் இந்த வருடமும் வெளியிடப்படவுள்ளது. இதனால் ஊர்காவற்றுறை பிரதேசத்தின் பண்பாட்டு பாரம்பரியங்கள், கலை, கலாசார, மரபுகள் மற்றும் ஆக்கபூர்வமான விடயங்கள் அடங்கிய கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.
இந்த ஆக்கங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னராக நேரிலோ அல்லது தபால் மூலமோ ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கலாம் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

# எதிர்பார்த்த விளைச்சல் இல்லை ஒட்டுசுட்டான் விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு,பெப்.11
ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கைக்குரிய அறுவடை ஆரம்பித்துள்ளபோதிலும், எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லையென விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
பெரிய நீர்ப்பாசனக் குளமான முத்து ஐயன்கட்டுக் குளத்தின் கீழ் 4000 ஏக்கரில் செய்கை மேற்கொள்ளப்பட்டது. ஒட்டுசுட்டான் கமநலச் சேவை நிலையத்துக்குட்பட்ட சிறுகுளங்களின் கீழும் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. பருவ மழை பொய்த்ததால் பயிர்கள் பாதிக்கப்பட்டபோதிலும், இடையிடையே சில சில காணிகளில் அறுவடை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முத்து ஐயன் கட்டுக் குளத்து நீர் திறந்து விடப்பட்டமையால் 15 சதவீத நெற்செய்கை அரை விளைவைப் பெறக்கூடியதாக உள்ள தாலும், அவற்றையும் அறுவடை செய்ய வேண்டிய நிலையில், தற்போது அறுவடை ஆரம்பமாகி உள்ள போதிலும் எதிர்பார்த்த விளைச்சல் இல்லை எனவும் அறுவடைக் கூலிக்கே பெறப்படும் நெல் போதாத நிலை காணப்படுவதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர். அதே போன்று நிலக்கடலைச் செய்கையும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (சு-500)

## ஆங்கில எழுத்துக் கூட்டல் போட்டி

யாழ்ப்பாணம், பெப். 11
வடக்கு மாகாணத்தில் உள்ள மாணவர்களுக்கான ஆங்கில எழுத்துக் கூட்டல் போட்டி மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடத்தப்படும். அதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினர் அறிவித்தனர்.
காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் வடக்கு மாகாண மாணவர்களின் ஆங்கில அறிவை விருத்திசெய்யும் நோக்கில் கனடாவில் வாழும் ஆங்கில சிறப்புப் பட்டதாரியான சிவராசா பாலராஜாவின் வழிநடத்தலில் ஆங்கில எழுத்துக் கூட்டல் போட்டி மூன்றாவது ஆண்டாக இந்த வருடமும் நடத்தப்படவுள்ளது.
5 வயது தொடக்கம் 7 வயது வரையான மாணவர்கள் ஒரு பிரிவாகவும், 8 வயது தொடக்கம் 10 வயது வரையான மாணவர்கள் ஒரு பிரிவாகவும், 11 வயது தொடக்கம் 13 வயது வரையான மாணவர்கள் ஒரு பிரிவாகவும், 14 வயது தொடக்கம் 16 வயது வரையான மாணவர்கள் ஒரு பிரிவாகவும் என நான்கு பிரிவுகளாக இடம்பெறவுள்ளது.
இந்தப் போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களையும், சொற் தொகுதிகளையும் மறுமலர்ச்சி மன்ற இணையத்தளத்திலோ அல்லது காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரியில் அமைந்துள்ள மன்ற அலுவலகத்தில் இருந்தோ, வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள புத்தக விற்பனை நிலையங்களில் இருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.
சரியாக முழுமை செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர், அவர்கள் கற்கின்ற பாடசாலை அதிபரின் சான்றுப்படுத்தலுடன் மறுமலர்ச்சி மன்றம், காலையடி, பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## இளையோர் மாநாடு இன்று

யாழ்ப்பாணம், பெப். 11
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளையோருக்கான மாநாடு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் என்று யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் அறிவித்தார்.
யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் இடர் முகாமைத்துவ அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பாவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் சாந்த பண்டாரவும், இளைஞர் அணிச் செயலர் எரிக் வீரவர்த்தனவும் கலந்து கொள்வர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-10)

## விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 11
யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் புதிய கல்வியாண்டுக்கான கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று கல்லூரி பணிப்பாளர் எஸ்.முகுந்தன் அறிவித்தார்.
இலத்திரனியல், கைத்தொழில் துறை மின்னியலாளர், வீட்டுப்பாவனை மின் உபகரணங்கள் திருத்துதல், மின்னியலாளர், வெல்டிங் போன்ற கற்கை நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
இந்தக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் தொடர்பு கொண்டு கற்கை நெறிகளுக்கான அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

## காற்றாலை செயற்றிட்டத்தின் பிரதேச அலுவலகம் திறப்பு

தென்மராட்சி பெப் 11.
தென்மராட்சி தெற்கு, கேரதீவு அறுகுவெளியில் காற்றாடிகள் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் சுன்னாகம் காற்றாலைச் செயற்றிட்டத்தின் பிரதேச அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.
சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துக்கு முன்பாக உள்ள தனியார் கட்டடத்தில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டது.
இலங்கை மின்சார சபையின் உதவித் தலைவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மின்சக்தி எரிபொருள் அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய, பிரதி அமைச் சர் அஜித் பெரேரா, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.அங்கஜன், இலங்கை மின் சார சபையின் பிரதிப் பொது முகாமையாளர் டி.கே.எஸ். குண திலக, பிராந்தியம் 1 உதவிப் பொது முகாமையாளர் சுனில் பெரேரா உட்பட இலங்கை மின் சார சபையின் அதிகாரிகளும் காற்றாலை செயற்றிட்டத்தின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.
செயற்றிட்ட அலுவலகத்தை அமைச்சரும் பிரதி அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டாகத் திறந்தனர். (ற 9,131)



## விபத்தில் பெண் காயம்

சாவகச்சேரி,பெப்.11
வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள், வீதி வளைவில் திரும்பிய உழவு இயந்திரத்தின் பெட்டியுடன் மோதியதில், மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற பெண் காயமடைந்ததுடன், உடன் சென்ற சிறுமி காயமின்றித் தப்பிக் கொண்டார்.
இந்தச் சம்பவம் நேற்றுச் சாவகச்சேரிச் சந்தியில் இடம்பெற்றது.
ஏ 9 வீதியில் வந்த உழவு இயந்திரம் தனங்களப்புக்குச் செல்வதற்காக, சந்தியில் உள்ள வீதி வளைவில் திரும்பிய போது, ஏ 9 வீதியில் சாவகச்சேரி நோக்கி மகளுடன் மோட்டார் சைக்கிளில் வந்தவர், உழவு இயந்திரத்துடன் மோதுண்டார் எனச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். (ஐ-9)

## பாதுகாப்புக்குப் பொலிஸார் இல்லை; வீதியைக் கடப்பதற்கு மக்கள் சிரமம்

கிளிநொச்சி,பெப்.11
கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள போக்குவரத்துப் பொலிஸ் காவல் பிரிவில், கடமையில் உள்ள பொலிஸார், வீதிப் பாதுகாப்புக் கடமையைச் சரியாக மேற்கொள்வதில்லை. இதனால் வைத்தியசாலைக்குச் செல்லும் பொதுமக்கள் இந்த வீதியைக் கடப்பதற்குப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வீதிக் கடவைக்கு அருகில் போக்குவரத்துப் பொலிஸார் முன்னர் கடமையில் நின்று, வைத்தியசாலைக்கு வரும் பொதுமக்களுக்காக வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். குறித்த வீதியால் செல்லும் வாகனங்களை மறித்து வீதியைப் பொதுமக்கள் கடப்பதற்கும் வழி செய்தனர். எனினும் தற்போது அவ்வாறான நிலை காணப்படுவதில்லை. இந்தப் பிரதான வீதியில் செல்லும் வாகனங்கள், தமது வேகத்தில் பயணிப்பதால், வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள் காத்திருந்து, வாகனம் சென்று முடிந்த பின்னரே பாதுகாப்புக் கடவையைத் தாண்டிச் செல்ல வேண்டிய நிலை காணப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக கிளிநொச்சி தலைமைப் பொலிஸ் நிலையத்தின் கடமை நேரப் பொறுப்பதிகாரியிடம் கேட்டபோது, இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு போக்குவரத்து நடவடிக்கைகள் சீர் செய்யப்படும்.-என்றார். (ஐ-6)

## புலிகளின் தங்கக் கிடங்கு ஆராய்ச்சி சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்

வவுனியா,பெப்.11
வவுனியா மாவட்ட செட்டி குளம் பொலிஸ் நிலையப் பிரிவில் விடுதலைப் புலிகளின் தங்கக் கிடங்கு தொடர்பாக ஆராய்ச்சி செய்த ஆசிரியர் உள்ளிட்ட நால்வரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு, வவுனியா மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
கடந்த 8 ஆம் திகதி புதன்கிழமை வவுனியாவைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும், தம்புத்தேகமவைச் சேர்ந்த வியாபாரிகள் மூவரும் வவுனியா செட்டிக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்டதாக நம்பப்படும் தங்கக் கிடங்கு தொடர்பாகச் சோதனை முயற்சியில் ஈடுபட்டனர்.

குறித்த நபர்கள் தமது சோதனைகளை முடித்துக்கொண்டு அன்றைய தினம் இரவு, நவீன மோட்டார் காரில் திரும்பும் வழியில், வவுனியா இரட்டைக்குளம் பகுதியில் வீதிப் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யும்போது, குறித்த நபர்களிடம் அதி நவீன ஸ்கேனர் கருவியும் பொலிஸார் கைப்பற்றினர். கைப்பற்றப்பட்ட நவீன ஸ்கேனர் இலத்திரனியல் கருவி 25 அடி ஆழத்தில் இருக்கும்திப்பொருள் களை அடையாளம்காட்டக்கூடியதுஎனவும், 40 இலட்சம் ரூபா பெறுமதியான, இந்த ஸ்கேனர் கருவி, இலங்கை தொல்பொருளியல் ஆராய்ச்சி நிலையத்தில் கூட பாவனையில் இல்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதையடுத்து விசாரணைகளின் பின்னர் நேற்று முன்தினம் தடயப்பொருள்களுடன் சந்தேக நபர்களை வவுனியா நீதிமன்றில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். சந்தேக நபர்களை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ-101)


## கண்ணீர்க் காணிக்கை

எமது பாடசாலையின் ஆசிரியை
**திருமதி இந்துமதி யாதவன்** அவர்களின்
அன்புத் தந்தையார்
**அமரர் செல்லத்துரை இரத்தினதுரை**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்
யா/பன்னாகம் வடக்கு அ.மி.த.க பாடசாலை (J 8044) (14,17,18)

## ஐந்தாம் ஆண்டு நினைவுதினம்



தோற்றம் 30 . 08 . 1945
மறைவு 09 . 02 . 2012

**அமரர் பாலசுப்பிரமணியம் சுகந்தன்**
*திதி: அபரபக்க பிரதமை*

பாரினில் நீ பிறந்து பண்புற வளர்ந்து
இல்லறந் தனில் இணைந்து இன்புற்று வாழ்கையிலே
காலன் உனைக் கவர்ந்து சென்று இன்றோடு
ஆண்டைந்து ஆனதையா! ஆறவில்லை எம் துயரம்

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.
(ஜே/7927)(12.18)
அப்பா, அம்மா, மனைவி (லண்டன்),
மகள், சகோதரர்கள்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 19 . 03 . 1985
ஆண்டவன் அடியில் 11 . 02 . 2007

**அமரர் செல்வன் பத்மகாந்தன் சஞ்ஜீத்**
(பழைய மாணவன் - சாவகச்சேரி இந்துக்கல்லூரி,
S.S.M.Engineering College, - Selam - India)

தவமாய் உமைநாம் பெற்றோம்
தவிக்க வைத்து காலனவன் கவர்ந்தது ஏனோ?
விரைந்து மறைந்தது ஆண்டுகள் பத்து
ஆண்டுகள் எத்தனை ஓடி மறைந்தாலும்
மறையாது எங்கள் அகமெங்கும் உன் நினைவுகள்
கரைந்து இதயம் கனத்தாலும்
கடவுள் இறையடி தொழுகின்றோம்
கண்ணீர்ப் பூக்கள் சொரிகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

'புனித வாசம்',
மீசாலை கிழக்கு,
மீசாலை.
குடும்பத்தினர்.
5-4/3, 42 ஆவது லேன்,
கொழும்பு - 06.
011 205 8686

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 29 . 10 . 1942
இறப்பு 31 . 01 . 2010

**திருமதி கமலாச்சி இராசதுரை**
திதி - தைமாத பூரணை (11.02.2017)

அன்பாலும் பண்பாலும் அரவணைத்த எங்கள் அன்பு அம்மாவே !
உங்களைப் பிரிந்து இன்றுடன் ஏழு ஆண்டுகள் ஓடி மறைந்தனவே !
தேம்பித் தேம்பி அழுதபோதெல்லாம்தாங்கிக்
கொண்டு அரவணைக்கும் அம்மாவே !
தாங்காத வேதனையுடன் எங்கள் கண்களெல்லாம்
கண்ணீராய் பெருகுதம்மா !
கண்ணான அம்மாவே – நீ கலங்காமல்
கண்ணுறங்கு எம்முயிர் வெல்லும்
உங்கள் புகழ் சொல்வதற்காகவேனும்

ஒஸ்காலேன்
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
குடும்பத்தினர்.
(N 256) (14,17,18)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர் தம்பிராசா நல்லம்மா**

கடந்த 14.01.2017
சனிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி
தம்பிராசா நல்லம்மா
அவர்களின் இறுதி நிகழ்வில்
கலந்துகொண்ட அனைவருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும் இத்தருணத்தில் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன் அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (11.02.2017) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருந்திய கிரியைகள் 13.02.2017 திங்கட்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
(c. 262) (13.17)
குடும்பத்தினர்
077 979 7407

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 20.11.1985
விநாயகர் திருவடியில் 25.01.2016

**அமரர் சு.நிருஜன்**
(ஸ்ரீ லங்கா ரெலிகொம். வவுனியா)
திதி: - தை மாதம், திருவ்ண பட்ச பிரதமை

புன்னகை ததும்பும் உன்முகம் கண்டு ஓராண்டு கடந்த விட்டதே
எம் அன்பு நிருஜா
அன்புள்ளம் கொண்டு அரவணைத்து உதவிக்கரம் தந்து
உதிரமும் தானமாய்த்தந்த மாதவப் புதல்வா
வேழமுகத்து விநாயகர் மேல் ஆழ மனம் பதித்த அன்புச் செல்வமே
நாளும் உன்னை நினைத்திருப்போம் நீயமர்ந்த திருப்பாதம் தன்னை
அடையும் வரை நாம்...

15, நாவலர் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.


## ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு நிலுவைகள் வழங்கல்

அச்சுவேலி,பெப்.11
இலங்கை ஆசிரியர் சேவை- இலங்கை அதிபர் சேவைக்கான புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2008-2011 காலப்பகுதியில், ஓய்வுபெற்ற ஆசிரியர், அதிபர்களுக்கான கொடுப்பனவு நிலுவைகளை ஓய்வூதியத் திணைக்களம் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கி வருகின்றது.


இலங்கை ஆசிரியர் சேவை- இலங்கை அதிபர்சேவை ஆகியவற்றுக்கு புதிய சேவை பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2008-2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஓய்வுபெற்ற ஆசிரியர் - அதிபர்களுக்குச் சம்பளப் படிநிலை அதிகரிப்பு வழங்கப்படுகின்றது. இந்தச் சம்பள அதிகரிப்புக்கான ஓய்வூதிய அதிகரிப்பு, திரட்டிய ஓய்வூதியம் 2011 ஜனவரிக்குப்பின்னர் கிடைக்கக்கூடிய நிலுவை என்பவை ஓய்வூதியத் திணைக்களத்தால், அவர்கள் ஓய்வூதியம் பெறும் வங்கிக் கணக்கின் ஊடாகவழங்கப்பட்டு வருகின்றன.

இவர்களுக்குக்கிடைக்கக் கூடிய அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியம் மற்றும் திரட்டிய ஓய்வூதிய விவரங்கள் உள்ளடங்கிய கடிதமும் அனுப்பி வைக்கப்படுகின்றன.

ஓய்வுபெற்ற ஆசிரியர், அதிபர்களின் தகவல்கள், கொடுப்பனவு விவரங்கள் நிரல்படுத்தப்பட்டு கணினி மயப்படுத்தப்படுகின்றன. அவர்களுக்கான திரட்டிய ஓய்வூதியக் கொடுப்பனவு, அதிகரிக்கும் ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் நிலுவைகள், சம்பந்தப்பட்டவர்களின் வங்கிக் கணக்கு ஊடாக வழங்கப்படுகின்றன என்று ஓய்வூதியத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-11)

# நாட்டின் கல்வி முறைமையில் உடனடி மாற்றங்கள் அவசியம்

## நீதியமைச்சர் சுட்டிக்காட்டு



கொழும்பு,பெப்.11

"இலங்கையின் தற்போதைய கல்வி முறைமை பிழையானது. 'மொங்கல்' (முறையற்ற) முறைமையிலான கல்வித் திட்டமே தற்போது நடைமுறையில் உள்ளது. இதில் உடனடி மாற்றங்கள் தேவை. அதனைப் பாலர் பாடசாலையில் இருந்து ஆரம்பித்து, பல்கலைக்கழகம் வரை முன்னெடுக்க வேண்டும்" இவ்வாறு நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் கீழ் ஒழுங்குவிதிகள் சட்டம் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சைட்டம் தனியார் பல்கலைக்கழகம் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு நிதியுதவியும் வழங்கப்பட்டது. இன்று கட்டடங்களை நிர்மாணித்து மாணவர்கள் அங்கு கல்வி பயில்கின்றனர். அன்று இதனை எதிர்க்காது பூனைகளைப்போல் இருந்த அரச மருத்துவர்கள் சங்கத்தினர், இன்றைய கூட்டு அரசில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் சைட்டத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்கின்றனர்.

தனியார் பல்கலைக்கழகங்களை எதிர்க்கும் மருத்துவர்கள், தனியார் மருத்துவமனைகளுக்கு எதிராகப் போராட்டம் நடத்துகிறார்களா?

கல்வித் துறையில் இலங்கையில் எத்தனையோ பிரச்சினைகள் உள்ளன. அவற்றுக்கான போராட்டங்கள் நடத்தப்படுவதில்லை. எதற்காக ஆர்ப்பாட்டங்களை நடத்துகிறோம் எனத் தெரியாமல் பெரும்பாலான பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொள்கின்றனர்.

பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவான, விவசாயிகளது மற்றும் கஷ்டப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளே ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்கின்றனர். உயர்மட்டக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் அவற்றில் கலந்து கொள்வதில்லை. இவ்வாறு பல்கலைக்கழக மாணவர்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியே காலத்தை வீணாக்கி விடுகின்றார்கள். இறுதியில் அவர்கள் கல்வியில் பின்தங்கி விடுகின்றனர்.

எமது நாட்டின் கல்வி முறைமை முற்றிலும் பிழையானது. அது மொங்கலாகத்தான் (முறையற்றவகையில்) உள்ளது. எனவே கல்வித்துறையில் மாற்றங்கள் தேவை. அவற்றைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பிப்பதைக் கைவிட்டு, பாலர் பாடசாலையிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். தேசிய பாடசாலைகள், மாகாண பாடசாலைகள் என்ற முறையும் மாற்றப்பட வேண்டும். இதனால் மாகாண பாடசாலைக்கு அநீதி ஏற்படுகின்றது- என்றார். (ஐ)

## 120 பாடசாலைகளில் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம்

கொழும்பு,பெப்.11

இந்த மாதத்தின் முதல் வாரத்திலேயே கொழும்பு மாவட்டத்துக்குட்பட்ட 120 பாடசாலைகளில் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய அபாயம் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

அவற்றில் 44 பாடசாலைகளில் டெங்கு நுளம்புகளின் முட்டைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2017 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து இன்று வரை நாடு முழுவதிலும் 9 ஆயிரத்து 886 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். இதில் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.(ஐ)

பன்னாலை - தெல்லிப்பழை
திருவருள் மிகு வரத்தலம் கற்பக விநாயகர்
ஆலய நுழைவாயிற் கோபுர கலச
அபிஷேகம் - 12.02.2017
நாளை (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை
காலை கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல்
9.56 மணியிலிருந்து நண்பகல் 12
மணிவரை நுழைவாயில் கோபுர கலச
ஸ்தாபனமும் அபிஷேகமும் நடைபெற்று
தொடர்ந்து மகேஸ்வர பூசையும் (அன்னதானம்)
நடைபெறும்.
கட்டட உபயம்
திரு.இ.பத்மநாதன் குடும்பம்
(லண்டன்)
ஆதீனகர்த்தா
ம.மகேந்திரசர்மா



## விலை நிர்ணயத்தால் அரிசிக்குத் தட்டுப்பாடு

கொழும்பு,பெப்.11

அரிசிக்கான நிர்ணய விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த புதன்கிழமை நள்ளிரவு வெளியிடப்பட்ட நிலையில், நாடு முழுவதிலுமுள்ள பல பிரதேசங்களில் அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தம்புள்ளை, வவுனியா, காலி, மாத்தறை போன்ற மாவட்டங்களிலேயே, பெருமளவில் இந்தத் தட்டுப்பாடு நிலவுவதாகவும், அந்த மாவட்டங்களில் விற்பனை செய்யப்படும் அரிசியும் நிர்ணய விலையில் விற்பனை செய்யப்படாமல், அதிகூடிய விலைக்கே விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரசால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், சம்பா அரிசி ஒரு கிலோகிராம் 80 ரூபா, நாட்டரிசி ஒரு கிலோகிராம் 72 ரூபா, பச்சையரிசி ஒரு கிலோகிராம் 70 ரூபா என்ற அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அரிசியின் விலையைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக, அரசால் அரிசி இறக்குமதிக்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டபோது, பல தரப்பினர், அதனூடாகப் பல மோசடிகளில் ஈடுபடுகின்றனர் என்று பொலன்னறுவை சிறிய மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் குற்றஞ்சாட்டினர். இறக்குமதி செய்யப்படும் அரிசியையும், இலங்கை அரிசி என்ற பெயரில், அதிக விலைக்கு விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கியுள்ளதாகவும், இதற்காக, இறக்குமதி செய்யப்படும் அரிசி இலங்கையில் தயாரிக்கப்படும் சாக்குப்பைகளில் பொதியிடப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் நெல் ஆலை உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆதலால், அரிசி இறக்குமதியைத் தனியார் ஊடாக மேற்கொள்ளாது அரசின் ஊடாக மேற்கொள்ளப்படுமாயின், இவ்வாறான மோசடிகளைத் தடுத்து நிறுத்த முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

பணிப்பெண் தேவை
வீட்டு வேலை செய்வதற்கும், வயதான பெண்ணைப் பராமரிப்பதற்கும் பெண் தேவை.
077 627 7332

வீடு வாடகைக்கு உண்டு
சுன்னாகம் மத்திய நகரப்பகுதியில் NSB வங்கிக்கு அருகில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
077 232 6367 (C/28310) (22)

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



| | |
|---|---|
| மஜெஸ்டிக் பண்டிகை | 10.00 / 1.00 / 4.00 / 7.00 |
| சில்வர் | 10.15 / 1.15 / 4.15 / 7.15 |
| பிரொன்ஸ் | 10.30 / 1.30 / 4.30 / 7.30 |

விசாரணை ☏ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு
பூச்சி அகற்றிய தடுப்பூசி வழங்கப்பட்ட 6 கிழமை வயதுடைய கறுப்பு. ஈரல் நிற குட்டிகள் விற்பனைக்குண்டு.
077 722 2339

வீடு வாடகைக்குண்டு
நல்லூர் கோவிலுக்கு 200m தூரத்தில் 4 Rooms, 2 Bath Rooms, Vechile Parking முற்றிலும் Tile பதித்த வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கும் உகந்தது.
077 707 8577 (AJA/1152) (22)

வீடு வளவு விற்பனைக்கு
இராசபாதை கரந்தன் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாகப் போகும் றோட்டில் இரண்டாவது முடக்கில் கோயிலுக்கு வடக்கே சுற்று மதிலுடன் 3 பரப்புக் காணி புதிய வீட்டுடன் மின்சார வசதி, குழாய்க் கிணறு, பங்காக உரிய வெட்டுக்கிணறு வழிவாய்க்கால் பாவிப்பு உருத்துடன் விற்பனைக்கு உண்டு.
077 978 3206

பழைய சீமெந்து உறைகள்(பாக்) விலைக்கு வாங்கப்படும்
பாவித்தவை கிழிந்தவை. பாவனைக்கு உதவாது என்று வீசியவை எதுவானாலும் எந்த நிலையில் இருந்தாலும் வாங்கப்படும்.
077 208 7365-தயாளன்

வீடு வாடகைக்குண்டு
கோண்டாவில் புகையிரத வீதிக்கு முன்னால் சகல வசதியும் கொண்ட புது வீடு வாடகைக்குண்டு.
076 837 9837

புதிய கார் விற்பனை
Micro Panda Cours - 2013
NP CAO (XXXX)
077 605 2399

வீடு வாடகைக்கு தேவை
யாழ் நகரை, அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்கு தேவை.
077 758 5412, 077 300 1763

விற்பனைக்கு
டிமோ பட்டா புள்பொடி DAC XXXX வாகனம் உடன் விற்பனைக்கு.
077 723 7778

காணி உடன் விற்பனைக்கு
யாழ்ப்பாணம், களவா ஓடை, ஏழாலையில் 6 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தொடர்பு கொள்ளலாம்.
077 303 6850

வவுனியாவில் பகுதிநேர வேலை
சனி, ஞாயிறு மட்டும் காலையில் நான்கு மணித்தியாலங்கள் வவுனியாவிலுள்ள கைகொடுக்கும் நண்பர்களின் அலுவலகத்தில் இருந்தபடி மக்கள் சேவையில் ஈடுபடக்கூடிய தொண்டர் ஒருவர் உடனே தேவை. ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படும். ஓய்வு பெற்றோருக்கும் பொருத்தமானது.
077 565 1122

ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்
முழுமையான ஆங்கிலப் புலமைக்கு ஓர் டிப்ளோமா கற்கைநெறி
Spoken English
Veta Fluency Diploma
ஆங்கிலப் பேச்சுக்கு உத்தரவாதம்



| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| Mon,Wed,Fri 10 :00a.m. Sat, Sun 2.30 p.m. | Mon,Wed,Fri 5:30 p.m Tue, Thu 3.30 a.m. Sat, Sun 2 :30 p.m. | Tue, Thu 10.30 a.m. Tue, Thu 03.30 p.m. Sat, Sun 08.30 a.m. | Mon,Wed,Fri 11:00a.m Sat, Sun 2.30 p.m. Tue,Thu 10 : 00 a.m | Sat, Sun 7.00a.m. |

பல்கலைக்கழகம் செல்லவிருக்கும் மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்
சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்
IELTS | IELTS Life Skills (A1,B1)
திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு 100% சித்தியடைவதற்கான உத்தரவாதம்
DMI COMPUTER EDUCATION
DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்
DMI COMPUTER EDUCATION

| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | M.M.V. வீதி, (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) நெல்லியடி Tel.: 021-226 2470 | No. 174 கண்டி வீதி, HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775 | No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970 | No.19,A9 வீதி, குறுந்தயம் (மத்திய மகா வித்தியாலயம் முன்பாக) கிளிநொச்சி Tel.: 021-228 5655 |
|---|---|---|---|---|

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

முத்தையன்கட்டு இடதுகரையில்

# பால் குளிரூட்டும் நிலையம் திறப்பு



முல்லைத்தீவு,பெப்.11
முத்தையன்கட்டு இடது கரையில் பால் குளிரூட்டும் நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.
யு.எஸ். எயிட் நிறுவனத்தின் 'வாழ்வாதார அபிவிருத்தி உதவி வழங்கும் சந்தர்ப்பங்கள்' என்னும் திட்டத்தினூடாக சுமார் 2.5 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கட்டப்பட்ட பால் குளிரூட்டும் நிலையத்தை, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன், மற்றும் யு.எஸ். எயிட் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் மருத்துவர் டேவிட் டயஸ் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.
பண்ணையாளர்களால் பிற்பகலில் சேகரிக்கப்படும் பாலை, இந்த நிலையத்தின் ஊடாக சந்தைப்படுத்தக்கூடிய வாய்ப்பு பண்ணையாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.
இது குறித்துப் பண்ணையாளர்கள் தெரிவித்ததாவது:
'ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவின் கீழ், அதிகளவான பால் உற்பத்தியைக் கொண்ட கிராமமாக முத்தையன்கட்டு விளங்குகின்ற போதிலும், இங்கு இதுவரையில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படாமையால், எம்மால் காலை வேளையில் சேகரிக்கப்படும் பாலை மட்டுமே சந்தைப்படுத்தக்கூடியதாக இருந்தது. ஆனால் தற்போது இந்தப் பால் குளிரூட்டும் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளமையால், பிற்பகல் வேளையிலும் எம்மால் சேகரிக்கப்படும் பாலைச் சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது - என்றனர்.
திறப்பு விழாவில் உரையாற்றிய மாவட்ட செயலர் "இன்றைய இளம் சமுதாயத்தினர் அரச வேலைக்காகக் காத்திருந்து காலத்தைக் கடத்துவதை விடுத்து, இவ்வாறான வருமானம் நிறைந்த சுய தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட முன்வர வேண்டும்"- என்றார்.
நிகழ்வில் முல்லை மாவட்ட அரச கால்நடை வைத்திய பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் கிரியகலா, ஒட்டுசுட்டான் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி பா.ஜெகஜீவன், முத்தையன்கட்டுகிராமஅலுவலர் வே.அருணோதயம், நெஸ்லே நிறுவன உயர் அதிகாரிகள், மற்றும் பண்ணையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-21,102)




## டெங்கு நோயை இல்லாது ஒழிப்போம்...

உடலை நன்றாக மூடும்படியான ஆடைகளை அணிவோம்.
நுளம்பு விரட்டிகளைப் பாவிப்போம்.
டெங்குநோய் என சந்தேகிக்கும் நோயாளிகளை நுளம்பு வலைகளின் கீழ் ஓய்வெடுக்கச் செய்வோம்.

"வருமுன் காப்போம்; வளமாக வாழ்வோம்"
தகவல் – சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை – யாழ். மாநகரசபை


நிதி ஒதுக்கீடுகள் கிடைத்த போதும்

## பாடசாலைகளின் அடிப்படை தேவைகள் பூர்த்தியாகவில்லை

அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,பெப்.11
கல்விக்காகப் பல்வேறு ஒதுக்கீடுகள் செய்யப்பட்ட போதிலும், பாடசாலைகளில் நிலவும் அடிப்படைத் தேவைகள் இன்னமும் நிறைவு செய்யப்படாதிருப்பது பாரதூரமான பிரச்சினையாகும். இதற்கான நிதியொதுக்கீடுகளைச் செய்வதற்கு, முன்னுரிமைத் தேவைகளை இனங்காண்பதற்கு, கல்வி அமைச்சு தலையீடு செய்ய வேண்டும் - இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
கொழும்பு டீ.எஸ்.சேனநாயக்கா கல்லூரியின் பொன்விழா நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த வருடத்தின் மாகாண சபைகளுக்கானநிதி,தேவைக்கு அதிகமானது என்பதால், அதனை வேறு விடயங்களுக்கு மாற்றுவதற்கு சில மாகாணக் கல்வி அமைச்சர்கள் கோரிக்கை விடுத்தனர்.
அந்தளவுக்கு நிதி கிடைத்திருந்தும் பெரும்பாலான மாகாணப் பாடசாலைகளில் கழிப்பறைகள்,தளபாடத்தேவைகள் முழுமைப்படுத்தப்படவில்லை.
சகல இனங்களையும், மதங்களையும் சேர்ந்த பிள்ளைகள் சமமாகக் கல்வி பெறக் கூடிய மற்றும் சிங்கள, தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கல்வி பெறக் கூடிய முதன்மை ஆண்கள் பாடசாலையான டீ.எஸ்.சேனநாயக்கா கல்லூரி இன, மத நல்லிணக்கத்தின் முன்னுதாரணமான கல்வி நிறுவனமாகும் - என்றார்.
இந்தநிகழ்வில்கல்வி அமைச்சின் நிதியொதுக்கீட்டில் டீ.எஸ்.சேனநாயக்கா கல்லூரியில்நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டத்தின் நினைவுப் பலகையை அரச தலைவர் திறந்து வைத்தார். பொன் விழாவுக்காக வெளியிடப்படும் ஞாபகார்த்த முத்திரை மற்றும் முதல்நாள் தபாலுறைத் தபால் என்பவை தபால் சேவை கள் மற்றும் முஸ்லிம் சமயவிவகாரஅமைச்சர்அப்துல் ஹலீமால், அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டன. (ஐ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.11
காணாமல் ஆக்கப்பட்டோருக்கான கலந்துரையாடல் கிளிநொச்சி புனித திரேசா மறைக்கல்வி மன்றத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறும் என்று கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோருக்கான குடும்ப சங்கத்தின் இணைப்பாளர் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்ப உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான சகல ஆவணங்களுடன் வந்து இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-10)

## இலங்கைக்கு வருகை தரும் சீனர்கள் அதிகரிப்பு

கொழும்பு,பெப்.11
இலங்கைக்கு வருகை தரும் சீனச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அடுத்துவரும் 5 முதல் 10 வருடங்களில், வருடந்தோறும் பத்துலட்சத்தால் அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக இலங்கைக்கான சீனத்தூதுவர் யீ ஸியாங்லியாங் தெரிவித்தார்.இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவின் 60ஆவது ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு கொழும்பில் புதன் கிழமையன்று ஆரம்பமான சீன கலாசார விழாவின்போது உரையாற்றுகையிலேயே அவர் இந்த எதிர்பார்ப்பை வெளியிட்டார். கடந்த வருடத்தில் இலங்கைக்கு வருகை தந்த சீனச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை முதன் முறையாக இரண்டு மில்லியன் எண்ணிக்கையை தாண்டியிருந்தது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஐ)

## பதிவுகள் பிற்போடல்

யாழ்ப்பாணம், பெப். 11
இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் யாழ்ப்பாண பிராந்திய நிலையமூடாக எந்திரவியல் கற்கை நெறிக்காகப் பதிவு செய்த மாணவர்களுக்கு புதிய பதிவுகள் பிற்போடப்பட்டதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்தார்.
இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த புதிய பதிவுகள் யாவும் எதிர்வரும் 14ஆம் திகதி, 15ஆம் திகதி மற்றும் 16ஆம் திகதி ஆகிய தினங்களில் நடைபெறும் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

### மரண அறிவித்தல்

**திருமதி பத்மாவதி கனகலிங்கம்**
(தங்கோடை, காரைநகர்). (Brampton. கனடா)



தோற்றம் 22.10.1934 மறைவு 09.02.2017

யாழ்ப்பாணம். காரைநகர். தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton தற்போது வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மாவதி கனகலிங்கம் 09.02.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னார் 2016.12.10 ஆம் திகதி அன்று கனடா Brampton இல் காலஞ்சென்ற முருகேசு கனகலிங்கம் (பாணந்துறை முன்னாள் பிரபல வர்த்தகர்) அவர்களின் ஆருயிர் மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு (சிறாப்பர்) - செல்லம்மா தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்ற முருகேசு (SKM - பிரபல பாணந்துறை வர்த்தகர்) - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், குலேந்திரன் (லண்டன்). யசோதா(நியூசிலாந்து. கனடா). பாலேந்திரன் (கனடா). ராஜேந்திரன் (லண்டன்). சுபத்திரா (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நந்தினி (லண்டன்). பாலச்சந்திரன் (நியூசிலாந்து. கனடா). அல்லி (கனடா). அனுஷா (லண்டன்). உருத்திரசிவம் (நியூ சிலாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் மைதிலி(கனடா). பைரவி (கனடா). துஷ்யந்தி (லண்டன்). இந்திரஜித் (ஆஸ்திரேலியா). Dr. சயந்தன் (ஆஸ்திரேலியா). Dr. அஜந்தன் (ஆஸ்திரேலியா). நிரோஷா (ஆஸ்திரேலியா). சஹானா (கனடா). விஸ்ணு (லண்டன்). சத்திஷ் (கனடா). துளசி (லண்டன்). Dr. ராஜீவ் (லண்டன்). பிரஷானா (கனடா). முரளி (கனடா). அகல்யா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஸுருதி (கனடா). ஆர்த்திகா (லண்டன்). ஹரிஷ் (கனடா). இராகவி (கனடா). கௌதம் (லண்டன்). இஷானி (கனடா). மஹதி (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி. சிவபாக்கியம். பரமலிங்கம் மற்றும் அன்னலட்சுமி (லண்டன்). புஷ்பலீலா (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்றவர்களான கிளாக்கர் கந்தையா. தம்பிராசா.Dr. தாமோதரம்பிள்ளை மற்றும் வேலாயுதபிள்ளை(கனடா). கிருஷ்ண வேணி (கீதா - கனடா) ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நாளை (12.02.2017) ஞாயிற்றுக் கிழமை மாலை 6 -9 Pm வரையும் St.Johns Dixie Cemetery & Crematorium 737, Dunds St E, Mississauga, ON L4Y 2B5 பார்வைக்காக வைக்கப்பட்டு 13.02.2017 திங்கட்கிழமை காலை அதே இடத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார்.உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

80, RYEGRASS CRES
BRAMPTON ON L7A 3J9
0016 476 926 338

47/12, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி
021 221 6784

### மரண அறிவித்தல்



**திருமதி தவமணி சபாரத்தினம்**

காரைநகர். பலகாட்டைப் பிறப்பிடமாகவும். கச்சாய் வீதி. சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி சபாரத்தினம் 10.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு புதல்வியும். காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற கந்தையா சபாரத்தினத்தின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற சிவபாக்கியம். சவுந்தரம் மற்றும் சரஸ்வதி, அன்னபூரணம் ஆகியோரின் அன்பு சகோதரியும். சத்தியநாதன். சத்தியதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும். பழனி ஆனந்தனின் (லம்போ) சிறிய தாயும். சந்திரிக்கா. ஞானசங்கர். நந்தினி ஆகியோரின் மாமியாரும். விதுரன். விசாலினி. கோபிகா. ஹீதப்பிரியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். சிவகுருவின் ( PPS ) சம்பந்தியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கச்சாய் வீதி, சாவகச்சேரி. குடும்பத்தினர்.
(C/261)
(11,17)
021 227 0124

# காணி மீட்புப் போராட்டத்தால் கற்றல் பாதிப்படையக்கூடாது

## பிலக்குடியிருப்பில் போராடும் மக்களிடம் முல்லை. மாவட்டச் செயலர் வேண்டுகோள்

முல்லைத்தீவு, பெப்.11
"தொடர்ச்சியாக நடத்தப்படும் போராட்டத்தால் பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் தடைப்படக்கூடாது. அவர்களைப் பாடசாலைகளுக்கு அனுப்புங்கள்".

இவ்வாறு பிலக்குடியிருப்பு மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன்.

இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வற்புறுத்தி பிலக்குடியிருப்பு மக்கள் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக தொடர் போராட்டம் நடத்துகின்றனர். இராணுவ முகாமுக்கு முன்பாக தகரக் கொட்டகை அமைத்து அவர்கள் அங்கேயே தங்கியுள்ளனர்.

பாடசாலை செல்லும் 75க்கு மேற்பட்ட பிள்ளைகளும் தமது பெற்றோருடன் போராட்டம் நடக்கும் இடத்திலேயே தங்கியுள்ளனர். பிலக்குடியிருப்பில் இருந்து வற்றாப்பளை மகா வித்தியாலயம், கேப்பாப்பிலவு பாடசாலைகளுக்கு 6 கிலோமீற்றர் செல்ல வேண்டும். போக்குவரத்து வசதிகள் இன்மையால் மாணவர்கள் பாடசாலை செல்லவில்லை.

நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் முல்லைத்தீவு மாவட்டச் செயலரும், கரைதுறைப்பற்று பிரதேச செயலரும் கேப்பாப்பிலவுக்குச் சென்றனர். பெற்றோருடனும், ஆசிரியர்களுடனும் கலந்துரையாடினர். "பிள்ளைகளின் கல்விச் செயற்பாடுகள் தடைப்படாதிருக்க அவர்களைப் பாடசாலைக்கு அனுப்புங்கள்" என்று பிலக்குடியிருப்பு மக்களிடம் மாவட்ட செய லாளர் வேண்டுகோள் விடுத்தார்.

அதேவேளை முல்லைத்தீவு கல்வி வலய ஆசிரியர்கள் சிலர் பாடசாலை செல்லாதிருக்கும் பிலக்குடியிருப்பு மாணவர்களுக்கு மாலை நேரங்களில் மாணவர்களுக்கான கற்பித்தலை மேற்கொள்கின்றனர். மகிழ்வூட்டல் செயற்பாடுகளையும் முன்னெடுக்கின்றனர்.

மக்கள் போராட்டம் நடைபெறும் இடத்துக்கு நேற்றுமுன்தினம் காலை சிவன் அறக்கட்டளை நிறு வத்தினர் சென்றனர். அவர்கள் மக்களுக்குத் தேவையான உதவிகள் இன்று வழங்கப்படும் என்று உறுதியளித்தனர்.

வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர் வாழ்வுச் சங்கத்தின் தலைவர் குணபாலசிங்கமும் பிலக்குடியிருப்பு மக்களை நேற்றுமுன்தினம் சந்தித்தார். அவர்களுக்கு தமது ஆதரவு உண்டு என்று தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் அரச சார்பற்ற நிறு வனங்களின் இணைப்பாளர் ந.சுகிர்தராஜும், யாழ். மாவட்ட பிரசைகள் குழுவினரும் போராட்டத்தில் ஈடுபடும் மக்களை நேற்று முன்தினம் சந்தித்துத் தமது ஆதரவைத் தெரிவித்தனர். (ற-21,7)

# பலாலி ஓடுபாதைக்காக கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கு இழப்பீடு

## சிறப்புக் கலந்துரையாடலில் முடிவு

யாழ்ப்பாணம், பெப்.11
பலாலி விமானத்தள விரிவாக்கத்துக்காகக் கையகப்படுத்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு நட்ட ஈடு வழங்கப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

பலாலி இராணுவத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது. அதில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

பலாலி விமானத்தள ஓடுபாதை அமைப்பதற்காக 1950ஆம் ஆண்டும், 1983 ஆம் ஆண்டும் காணிகள் கையகப்படுத்தப்பட்டன. முதற்கட்டமாக 1950ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளது.

மக்களுக்கு நட்டஈடு வழங்குவது தொடர்பாக காணி அமைச்சுக்கு அனுப்பிய கடிதத்துக்கு பதில் கிடைக்கவில்லை- என்று வலி.வடக்குப் பிரதேச சபைச் செயலாளர் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டினார்.

இந்தப் பிரச்சினையை உடனடியாக ஆராய்ந்து கையகப்படுத்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும். இரண்டாம் கட்டமாக 1983ஆம் ஆண்டு கையகப்படுத்தப்பட்ட காணிகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் என்று கலந்துரை யாடலில் முடிவு எட்டப்பட்டது. (ற-5)

# கிளிநொச்சியில் பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்.பெப்.11
இலவச பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை முகாமும், அறுவைச் சிகிச்சையும் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

பிரிட்டனில் இருந்து வரும் பிளாஸ்ரிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்களால் எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் 24 ஆம் திகதி வரை இந்த முகாம் நடத்தப்படவுள்ளது. 'அன்பு இல்லம்' என்ற அறக்கட்டளை இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது. இவ்வாறான முகாம் 2011 ஆம் ஆண்டும், 2013ஆம் ஆண்டும் வவுனியாவில் நடைபெற்றது. இந்த முறை கிளிநொச்சி, மன்னார் முல்லைத்தீவு மக்களின் நலன்கருதி கிளிநொச்சி வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 0777743638 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ற-ரி)

# கேப்பாப்பிலவு மக்களுக்கான போராட்டத்துக்கு முழு ஆதரவு

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.11
கேப்பாப்பிலவு மக்களின் நில மீட்புப் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ். இளைஞர்கள் நடத்த வுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்துக்கு சமூக நீதிக்கான வெகு ஜன அமைப்பு ஆதரவு தெரி வித்தது.

அந்த அமைப்பின் இணைச் செயலாளர் ச.தனுசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ் வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் உள்ளதாவது:
கேப்பாப்பிலவு மக்களின் நில மீட்புப் போராட்டத்துக்கு ஆதரவாக இன்று சனிக்கிழமை யாழ். மத்திய பேருந்து நிலையத் தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

மு.ப. 9 மணி முதல் மு.ப. 11 மணிவரை அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படும். அதன்பின்னர் கேப்பாப்பிலவு சென்று அங்கு போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு ஆதரவு வெளிப்படுத்தப்படும்.

சமூக வலைத்தள இளைஞர்களின் இந்தப் போராட்டத்துக்கு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு தனது ஆதரவை வழங்கிப் போராட்டத்தில் கலந்து கொள்ளும்.

நில மீட்புக்காகப் போராடும் மக்களுக்கு ஆதரவாக அமைப்புகள், தனிநபர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் அணிதிரள வேண்டும் என்று கோருகின்றோம் - என்றுள்ளது. (ற-21)

# காணி மீட்பு போராட்டத்துக்கு ஆதரவு

## மன்னார் பிரசைகள் குழு அறிவிப்பு

மன்னார், பெப்.11
"முல்லைத்தீவு மாவட்டத்தில் பிலக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு மக்கள் காணிகளை விடுவிக்கக் கோரி நடத்தும் போராட்டங்களுக்கு எமது ஆதரவைத் தெரிவிக்கின்றோம்". இவ்வாறு மன்னார் மாவட்ட பிரசைகள் குழு தெரிவித்தது.

அவர்கள் அனுப்பியுள்ள அறிக்கையி லேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது: பிலக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பில் மக்களின் காணிகள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை மீட்பதற்காக மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டம் நடத்து கின்றனர். அவர்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும். அவர்களின் போராட் டத்துக்கு நாம் ஆதரவு வழங்குகின்றோம்- என்றுள்ளது. (ற-56)



வவுனியா, ஓமந்தை புதிய வேலர் சின்னக்குளம் வயல் ஒன்றில் இருந்து வெடிக்காத நிலையில் ஆர்.பி.ஜி. ரகக் குண்டொன்று மீட்கப்பட்டு செயலி ழக்கச் செய்யப்பட்டது. புலிகளின் காலத் தில் அது பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர். வயலைத் துப்புரவாக்கும் போதே குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. சிறப்பு அதிரடிப்படை அதைச் செயலிழக் கச் செய்தது. (ற-21)


# மரண அறிவித்தல்

மண்ணில்
1968 . 09 . 26



விண்ணில்
2017 . 01 . 09

## திருநாவுக்கரசு தவராசசிங்கம்

யாழ்.கீரிமலை நகுலேஸ்வர வீதியைப் பிறப்பிடமாகவும் இத்தாலி Rapallo வை வதிவிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு தவராசசிங்கம் 09.01.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு - மகேஸ்வரி தம்பதிகளின் தவப்புதல்வரும் காலஞ்சென்ற சக்திவேல் - பூபதியம்மா தம்பதிகளின் அருமை மருமகனும் செல்வரதி (கொழும்பு) அவர்களின் ஆருயிர்க் கணவரும் துவாரகாவின் பாசமிகு தந்தையும் தவமலர் (சாந்தி - இத்தாலி), மதிவதனி (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வநாயகம் (ரவி - இத்தாலி), சந்தியசீலன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சிவராசா (வவுனியா), செல்வராணி (வவுனியா), செல்வமலர் (சுவிஸ்), தவராசா (சுவிஸ்), செல்வரஞ்சி (யாழ்ப்பாணம்), லிங்கேஸ்வரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கேமமாலா, இராமநாதன், இராசரத்தினம், சாந்தினி, நாகதீபன், பார்த்தீபன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை இத்தாலியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நகுலேஸ்வராவீதி,
கருகம்பானை,
கீரிமலை.

தகவல்:
சகோதரி - மதிவதனி
மாமன் - ஆனந்தன்

தொடர்பு: 076 977 1127

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# வருடாந்த இடமாற்றலை ஏற்க அரச அலுவலர்களுக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், பெப்.11
வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய அலுவலர்கள் வழங்கப்பட்ட இடமாற்றலை ஏற்று உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமையேற்க வேண்டும். அவர்களை தற்போதுள்ள சேவை நிலையங்களில் இருந்து விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோன் அனைத்துத் திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார்.

அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது-

2017 ஆம் ஆண்டுக்கான அரச சேவையில் வருடாந்த இடமாற்றங்கள் தற்போது உரிய அமைச்சு திணைக்களங்கள் ஊடாக தயாரிக்கப்பட்டுள்ளன. அது தொடர்பாக தற்போது உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய மேன் முறையீடுகளை அந்தந்த அமைச்சு திணைக்களங்களில் மீளாய்வு சபை ஆய்வு செய்தது. மீளாய்வு சபைகளின் தீர்ப்புகள் மற்றும் தீர்மானங்கள் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவிடமும் மேன்முறையீடுகள் சமர்ப்பிக்கப்பட்டன. பொதுச் சேவைகள் ஆணைக்குழு மூலமும் இந்த மேன்முறையீடுகள் கருத்தில் கொள்ளப்பட்டு உரிய தீர்மானங்களை வெளிப்படுத்தி உள்ளது என்று என்னிடம் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

இடமாற்றங்கள் உத்தேசிக்கப்பட்ட வண்ணம் நடைமுறைப்படுத்தப்படுவது கட்டாயம். அது தொடர்பான மேன்முறையீட்டு முறைமை தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளது. மீண்டும் மீளாய்வு செய்யும் தேவை காணப்படவில்லை. வருடாந்த இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உரிய உத்தியோகத்தர்கள் உரிய திகதியில் புதிய சேவை நிலையத்தில் கடமையேற்பதற்காக சேவை நிலையத்திலிருந்து விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறியத் தருகின்றேன்.

ஒரு சேவை நிலையத்தில் நீண்ட காலம் தங்கியிருப்பதால் உத்தியோகத்தருக்கு மற்றும் சேவை நிலையத்தின் வளர்ச்சிக்கு காரணங்கள் அமையாது. அனைத்து அரச சேவையின் வினைத்திறமைக்கும் இதனால் தாக்கம் ஏற்பட முடியும் என்பதை ஜனாதிபதி அவர்களதும் கருத்து என்பதை தயவாக கருத்தில் கொள்ளவும் - என்றுள்ளது.

(ற-9)

# இராணுவத்தின் அனுமதி பெற்றே இறந்தோரை தகனம் செய்யும் அவலம்

## இறம்பைக்குளம் மக்கள் விசனம்



வவுனியா, பெப்.11
வவுனியா, இறம்பைக்குளம் மயானத்தில் உடல்களைத் தகனம் செய்வதற்கு விமானப் படையினரின் அனுமதி பெற வேண்டியுள்ளது. இறந்தவர்களை தகனம் செய்யவும் இராணுவத்தினரின் அனுமதியை எதிர் பார்க்கும் துர்ப்பாக்கிய நிலையில் வாழ்கின்றோம்.

இவ்வாறு பிரதேச மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வவுனியா நகரசபைக்குட்பட்டது இறம்பைக்குளம் மயானம். இந்த மயானம் 35 ஆண்டுகளுக்கு மேலாக விமானப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்த மயானத்தில் உடல்களைத் தகனம் செய்வதாயின் அவர்களின் அனுமதி பெற வேண்டும்.

மயானத்துக்கு இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணி ஊடாக செல்ல வேண்டியுள்ளது. அந்தக் காணியும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டது. பாடசாலைக் காணியைச் சுற்றி பாடசாலை நிர்வாகத்தினர் வேலி அமைத்துள்ளனர். மயானத்துக்குச் செல்வதில் இடர்பாடுகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மயானத்துக்குச் செல்வதற்கு மக்கள் தற்போது தனிப்பாதை அமைத்துள்ளனர். அந்தப் பாதை சீராக இல்லை. பாதையைச் சீர்செய்து தருமாறு கேட்டால் காணி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்று நகர சபையினர் கூறுகின்றனர். இறந்தவர்களைத் தகனம் செய்வதில் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றோம்.

பலத்த எதிர்பார்ப்புடன் வாக்களித்த மக்கள் இப்போது போராட்டத்தின் மூலமே தமது உரிமைகளைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நிலங்களை விடுவிக்கக் கோரி பல இடங்களில் மக்கள் போராட்டம் நடத்துகின்றனர். இந்த விடயத்திலும் அவ்வாறான நிலைமைதான் ஏற்படுமோ என்ற எண்ணம் எமக்கு எழுந்துள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இறம்பைக்குளம் இந்து, கிறிஸ்தவ மயானங்கள் இரண்டும் செயற்படுகின்றன. கடந்த ஆண்டின் பிற்பகுதியில் இறம்பைக் குளம் மகளிர் மகா வித்தியாலயத்தின் மைதானத்தை இராணுவம் விடுவித்தது. மைதானத்துக்கு வேலி அமைக்கப்பட்டதால் மைதானம் ஊடாகப் பயன்படுத்தப்பட்ட மயானத்துக்கான பாதை தற்போது மூடப்பட் டுள்ளது.

மக்கள் தற்போது பாதை ஒன்றை அமைத்துப் பயன்படுத்துகின்றனர். அதைச் சீரமைப்பது என்றால் இராணுவத்தினரிடம் அனுமதி பெற வேண்டும். நகர சபைக்குரிய மைதானத்தை இராணுவத்தினர் எம்மிடம் ஒப்படைத்தால் மட்டுமே நாம் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் - என்று நகர சபைச் செயலாளர் ஆர்.தயாபரன் தெரிவித்தார்.

(ற-21)

# தேசிய இளைஞர் விருதுப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.11
2017ஆம் ஆண்டுக்கான 39 ஆவது தேசிய இளைஞர் விருதுப் போட்டிக்கான விண்ணப்பங்கள் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் கோரப்பட்டுள்ளன. இந்தப் போட்டி பிரதேசம், மாவட்டம், தேசியம் என மூன்று மட்டங்களில் நடத்தப்படவுள்ளது. 13 தொடக்கம் 29 வயதுக்குட்பட்டவர்கள் போட்டியில் கலந்து கொள்ளலாம்..

நாடகப் போட்டியில் 15 வயது தொடக்கம் 35 வயதுக்குட்பட்டவர்கள் கலந்து கொள்ளலாம். தமிழ், ஆங்கில மொழியில் அறிவிப்பாளர், பேச்சு, இளம்பாடகர் என்பனவும், கிராமிய பாடல், கிராமிய நடனம், புத்தாக்க நடனம், பரத நாட்டியம், அபிநயம், சாஸ்திரிய இசைக்குழு கருவிகள் இசைத்தல் என்பன நடைபெறவுள்ளன. நிரந்தர வதிவிடப் பிரதேச பிரிவில் மட்டுமே போட்டியாளர்கள் பங்குகொள்ள முடியும். எதிர்வரும் 28 ஆம் திகதி விண்ணப்ப முடிவு திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை அறிவதற்கு இல-28, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக் குளி எனும் முகவரியிலுள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அலுவலகத்தைத் தொடர்புகொள்ளலாம். பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரிகளிடமும் விவரங்களை பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-10)

# கால்நடை வளர்ப்பு டிப்ளோமாவுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப். 11
கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் ஊடாக நடத்தப்படுகின்ற இரண்டு வருட கால்நடை வளர்ப்பு டிப்ளோமா பாடநெறிக்கு 2017/2019 ஆம் கல்வி ஆண்டின் பொருட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிங்களம் அல்லது தமிழ்மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் போன்ற பாடங்கள் மூன்றில் திறமைச் சித்தியும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் (இதற்கு அமைய நான்கு திறமைச் சித்திகள் இருத்தல் வேண்டும்) இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் ஆறு பாடங்களுடன் ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். ஒரே தடவையில் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஆகக் குறைந்தது ஐந்து பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு இரசாயனவியல், பௌதிக விஞ்ஞானம் விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும். அல்லது ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் பாடங்களை மேற்கொண்டு இரசாயனவியல், பௌதிக விஞ்ஞானம், விவசாயம், உயிரியல் விஞ்ஞானம் போன்ற பாடங்களில் இரண்டு பாடங்களில் சித்தியடைய வேண்டும்.

மேலதிக விவரங்களை இந்த மாதம் 3 ஆம் திகதி அரச வர்த்தமானியில் தெரிந்து கொள்ளலாம் - என்றார்.

(ற-10)

# மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 01 . 1930

இறப்பு 09 . 02 . 2017

## இளையதம்பி இரத்தினம்

வேலணை கிழக்கு, முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட இளையதம்பி இரத்தினம் 09.02.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பேரம்பலம் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சரஸ்வதியின் பாசமிகு கணவரும், சௌந்தரநாயகி (மலர் - ஆசிரியை ஒஸ்மானியா கல்லூரி), பாசமிகு தந்தையும், சுபாஸ்கரனின் (மருந்தாளர், மாநகரசபை ஆயுர்வேதம்), அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கனகசபை, செல்லத்துரை, மனோன்மணி மற்றும் கண்மணி (சுவிஸ்), நாகராஜாவின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, மயில்வாகனம், பராசக்தி, சண்முகரட்ணம், சுப்பையா மற்றும் சிவசுப்பிரமணியம் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, அன்னம்மா, சேனாதிராசா, திருநாவுக்கரசு மற்றும் பாக்கியலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், தர்ஷாத், விதுர்ஷன் (பொறியியல் இறுதிவருட மாணவன் - மொறட்டுவ), காருஜாவின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.09, கலட்டி,
அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(ஜே.8054) (13)

# மார்ச் இறுதிக்குள் நாய்களை பதிவு செய்யுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.11
வளர்ப்பு நாய்களை அடுத்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யப்படாத நாய்களை தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் மூலம் பிடிக்க நடவடிக்கைகளை முன்னெடுக்கவும்.

இவ்வாறு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் அனைத்து உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

உரிய விண்ணப்பப்படிவத்தை வழங்கி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் அனுசரணையுடன் விலங்கு விசர் தடுப்பு மருந்து ஏற்ற வேண்டும். பதிவு செய்யப்பட்ட நாய்களுக்கு உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பகிரங்க அறிவித்தல் விடுக்கப்பட்டு கிராமங்கள் ரீதியாக இதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அடுத்த மாதம் ( மார்ச் ) 31ஆம் திகதிக்குப் பின்னர் வீதிகளில் திரியும் நாய்கள் பிடிக்கப்பட்டு இனவிருத்தித் தடைச் சிகிச்சை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த வேலைத் திட்டத்துக்கு தேர்ச்சிபெற்ற பணியாளர்களைப் பயன்படுத்த வேண்டும்.- என்று அவர் உள்ளூராட்சிச் சபைகளின் செயலாளர்களுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ற-9)

# மலையகம் எங்கள் கோட்டை எவராலும் அசைக்க முடியாது

## மனோ கணேசன் கூறுகிறார்



கொழும்பு,பெப்.11
வடக்கு கிழக்குக்கு வெளியே வாழும் 16 இலட்சம் தமிழ் மக்களில், 10 இலட்சம் வாக்குகள் எங்களுக்கு உரித்தானவை. மலையகம் எங்களது கோட்டை. இங்கே எங்களை எவராலும் அசைக்க முடியாது-

இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் தலவாக்கலையில், மலையக மக்களுக்கான காணிச்சீர்திருத்த ஆணைக் குழுவின் சட்டபூர்வ காணி - வீடு உறுதி வழங்கல் நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு காலகட்டங்களில் இந்திய நிலப்பரப்பில் இருந்து இங்கே வந்துள்ளோம். நாட்டில் இன்று வாழும் 16 இலட்சம் மலையக தமிழர்களில், சுமார் 6 இலட்சம் பேர் தோட்டங்களில் வாழ்கிறார்கள். இரண்டு இலட்சம் பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுடன், அவர்களது குடும்ப உறுப்பினர்களுமாகத் தோட்டங்களில் வாழ் கிறார்கள்.

நாட்டின் தேசிய மனித அபி விருத்திப் புள்ளி விவரங்கள் வளர்ச்சியடைந்த நிலையில் இருக்கின்றன. ஆனால் தோட்ட மக்களின் வளர்ச்சி வீதம் மாத்திரம் பின்தங்கியுள்ளது.

கல்வி, சுகாதாரம், போசாக்கு, சிசு இறப்பு, வீடமைப்பு, காணியுரிமை ஆகிய துறைகளில் பின்தங்கிய நிலைமைகள் காணப்படுகின்றன.

இதில் மிக முக்கியமான வீடமைப்பு, காணியுரிமை தொடர்பில் ஒரு வரலாற்று மைல் கல்லை நடவே நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள். இது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தேர்தல் வாக்குறுதி. இன்று இங்கே கடந்த காலங்களிலிருந்து வேறுபட்டு, காணி சீர்திருத்த ஆணைக்குழுவினது சட்ட உரிமை கொண்ட காணியுறுதிப் பத்திரம் வழங்கப் படுகின்றது. அதை நினைவுகூரும் முகமாக ஒரு முத்திரையும் வெளி யிடப்படுகிறது. இதுவே இங்கே வரலாற்று மைல்கல். இதுவே எமது அரசின் வெற்றி. இதுவே எங்கள் தமிழ் முற்போக்கு கூட்ட ணியின் வெற்றி.

தம்பி திகா காணி உறுதி வழங்கி வீடு கட்டுகிறார். அண்ணன் ராதா கல்விக் கண்ணைத் திறக்கப் பாட சாலை கட்டுகிறார். நான் தேசிய தலைமையை வழங்கி, தேசிய நீரோட்டத் தில் எமக்குரிய பங்கையும், அந்தஸ்த்தையும் உறுதி செய்கி றேன். எங்கள் மக்களது பணிகளைப் பிரித்துக் கொண்டு நாம் ஒற்றுமையாகச் செயற்படுகிறோம்.

1978 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை சுமார் 40 ஆண் டுகள், மாறி மாறி வந்த அனைத்து பச்சை, நீலம் என்ற எல்லா அரசு களிலும் பங்காளியாக இருந்த கட்சியல்ல, எமது கூட்டணி. நாம் 2015 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் தேர்தலுக்குப் பிறகே ஆட்சியில் முழுமையான பங்காளி ஆனோம். எமது தமிழ் முற்போக்குக் கூட்டணியின் காலம் ஒன்றரை வருடம் தான். இதற்குள்தான் இத் தனையையும் அமைதியாக படிப்படியாக செய்து வருகிறோம். இதை மலையக மக்களும், நாட்டு மக்களும் புரிந்துக் கொண்டுள்ளார்கள். தேர்தலின் போது மகிந்தவுக்கு வால் பிடித்துவிட்டு, இப்போது ஓடோடி வந்து மைத்திரியின் காலடியில் நாம் விழவில்லை. -என்றார். (ஐ)

# ஹக்கீம் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டை விசாரிக்குக

## உலமாக் கட்சி கோரிக்கை

கொழும்பு,பெப்.11
முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மீதும், கட்சியின் தலைமையகமான தாருஸ்ஸலாம் தொடர்பாகவும், அந்தக் கட்சியின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும்,

இவ்வாறு கட்சியின் மசூரா சபை மௌலவிமாரிடம் உலமாக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் உலமாக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

உலமாக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல், மிக அதிகமாக முஸ்லிம் காங்கிரஸையே விமர்சித்தது. இந்தக் கட்சியின் தலைமை, முஸ்லிம் சமூகத்தை பச்சையாக ஏமாற்றுகிறது என் றும், முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளை விற்று அனை வரும் சுகபோகம் அனுப விக்கிறார்கள் என்றும், பல தடவைகள் குற்றம் சாட்டி னோம். இப்போது அவை யாவும் அந்தக் கட்சிக் காரர்களாலேயே உறுதிப்படுத்தப்பட்டது. முஸ்லிம் காங்கிரஸ் பற்றிய விமர்சனங்களை இறைவன் எம் மூலம் பேச வைத்துள்ளான் என்பதே உண்மை.

மு.கா. மீது மது, மாது, கோடி என பல குற்றச்சாட்டுக்களை பசீர் சேகுதாவூத் முன் வைத்துள்ளார். அந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் மு.கா.வின் மசூரா சபையில் உள்ள மௌலவிமார் விசாரணைகளை நடத்த வேண்டும். பசீர் சேகுதாவூத் தனது தலைவரைக் காட்டிக் கொடுத்து விட்டார் என்று சிலர் குற்றஞ்சாட்டுவதன் மூலம், மேலும் தலைமையினதும், உயர்ப்பீட உறுப்பினர்களினதும் சமூக விரோதச் செயல்களுக்கே துணை கிடைக்கின்றது.

பசீரால் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் முதல் கடமை அந்தக் கட்சியின் உயர்பீட மௌலவிமார்களுக்கு உண்டு. குற்றச்சாட்டுக்கள் பகிரங்கத்துக்கு வந்தால், அவற்றைப் பகிரங்கமாக விசாரிப்பதே நபி வழி என்ப தால், உடனடியாக விசா ரணை செய்து, சமூகத்தின் மானம் காக்க முன்வரவேண்டும். -என்றுள்ளது. (ஐ)

# ஜாலியவுக்கு சிகிச்சை வழங்குமாறு உத்தரவு

அமெரிக்காவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரியவுக்கு முறையான மருத்துவ சிகிச்சைகளை வழங்குமாறு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி நிஸங்க பந்துல கருணாரத்ன நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

ஜாலிய விக்கிரமசூரிய அமெரிக்காவின் வொஷிங்டனில், இலங்கைத் தூதரகத்துக்காக கட்டடமொன்றைக் கொள்வனவு செய்த போது, 332,000 அமெரிக்க டொலர் களை மோசடி செய்து, அரசுக்கு நட்டத்தை ஏற்படுத் தினார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந் தது.

பொதுச் சொத்துக்கள் கட்டளைச் சட் டத்தின் கீழ், நிதிக்குற்றப் புல னாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட ஜாலிய விக்கிரமசூரிய விளக்க மறி யலில் வைக்கப்பட்டிருந்தார்.

ஜாலிய கடந்த வருடம் நவம்பர் மாதம் 17ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேற முயன்ற போது, கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத் துக் கைது செய்யப்பட்டார். அவர் தற்போது விளக்க மறிய லில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# சந்திரிகாவின் நீண்ட நாள் கனவு நனவாகி விட்டதாம்



கொழும்பு,பெப்.11
"மலையக மக்களின் தனி வீட்டுத்திட்டம் எனது வாழ்நாளில் நான் கண்ட நீண்ட நாள் கனவு, அந்தக்கனவு இன்று நனவாகியுள்ளது'.

-இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா குமாரணதுங்க தெரிவித்தார்.

அக்கரப்பத்தனை ஊட்டு வள்ளி கிராமமும், காணி உறுதி பத்திரமும் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"பெருந்தோட்டப் பகுதிகளுக்கு வந்த போதெல்லாம், பெருந்தோட்ட மக்கள் எதிர்நோக் கும் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் தோன்றியது. லயன் அறைகளில் மூன்று நான்கு குடும்பங்கள் ஒன்றாக வாழும் பெருந் தோட்ட மக்களின் அவ லத்தை மாற்ற வேண்டும் என்ற நோக்கில், நான் அரச தலைவராக இருந்த காலத்தில், தோட்ட உட்கட்ட மைப்பு அமைச்சை உருவாக்கினேன். அன்று நான் உரு வாக்கிய அமைச்சு, இன்று சிறந்த முறையிலான வேலைத் திட்டங்களை முன் னெடுத்து வருகிறது.

ஊட்டு வள்ளி கிராமம் அமைத்து காணி உறுதி வழங்கும் நிகழ் வில் கலந்து கொண்டமையானது, எனது வாழ்நாளில் நான் கண்ட கனவு நனவாகிய நாள் ஆகும். நாட்டில் தற்போது மூவின மக் களும் சமமான உரிமை யுடன் இலங்கையராக வாழும் சூழல் உருவாக் கப்பட்டுள்ளது.

தொடர்ந்து உங்களின் ஒத்துழைப்பின் ஊடாக பெருந்தோட்டத்தில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் போன்ற அபிவிருத் தித் திட்டங்களை முன்னெடுக்க முடியும்' என்றார். (ஐ)

நெஞ்சை விட்டகலாத
முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
19 . 12 . 1939

ஆண்டவன் அடியில்
25 . 01 . 2016

அமரர் சீனித்தம்பி கமலநாதன்
திதி: பிரதமை

ஆண்டொன்று சென்றதப்பா எமைப் பிரிந்து
ஆறுமோ நம் துயரம்
உறவுகள் பல இருந்தென்ன
ஆற்றுவார் யார் எமை ! ஆண்டுகள் பல சென்றாலும்
ஆறாது நம் துயரம் – காலங்கள் ஓடி மறையலாம்
எம் அப்பாவின் நினைவலைகள் என்றும் மாறவே மாறாது
உங்களுக்கு ஈடு இணை இனி எங்களுக்கு யார் ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

சாந்திநிஹேதன்
அல்வாய் தெற்கு,
வதிரி.

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## ஒரே சூலில் மூன்று சிசுக்கள் உதிப்பு



கண்டி,பெப்.11
டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் பெண்ணொருவர் ஒரே சூலில் மூன்று ஆண் சிசுக்களைப் பிரசவித்தார் என்று டிக்கோயா வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

மஸ்கெலியா சாமிலை - ஸ்டொக்கம் சின்ன சோலங் கந்த பகுதியை சேர்ந்த புஸ்பலதா (வயது 31) என்பவர் கடந்த புதன்கிழமை பிற்பகல் 2 மணி யளவில் மூன்று சிசுக்களையும் பிரசவித்தார்.

பிரசவத்துக்காக டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவர், சத்திரசிகிச்சை மூலமாக ஒரே சூலில் இருந்து மூன்று ஆண் சிசுக்களும் எடுக்கப்பட்டன. தாயும், குழந்தைகளும் ஆரோக்கியமாக இருக்கின்றனர் என வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

தோட்டத் தொழிலாளியின் மனைவியான குறித்த பெண்ணுக்கு 11 வயதுடைய ஆண் குழந்தையும், 7 மற்றும் 5 வயதுடைய பெண் குழந்தைகளும் உள்ளனர்.

தற்போது, மூன்று ஆண் குழந்தைகளை பிரசவித்துள்ள நிலையில் குழந்தைகளை வளர்ப்பதில் சிரமங்களை எதிர்கொள்கின்றோம் என்றும் குழந்தைகளை வளர்க்க இயன்றவர்களின் உதவியை எதிர்பார்க்கின்றோம் அந்தப் பெண் தெரிவித்தார். டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையின் வரலாற்றில் இந்தச் சம்பவம் நடைபெற்றமை இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# இலங்கையராக ஒன்றுபடுவோம்

## அரச தலைவர் அழைப்பு



கொழும்பு,பெப்.11
மாகாண, பிரதேச, மொழி, அரசியல் என்ற ரீதியாகப் பிரிந்து நிற்பதை விடுத்து நாட்டு மக்கள் என்ற ரீதியில் இலங்கையராக அனைவரும் ஒன்றுபடுவோம்–

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வேண்டுகோள் விடுத்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பின் பேரில், கொட்டகலை சீ.எல்.எப் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு அரச தலைவர் நேற்று முன்தினம் சென்றார். அங்கு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அரச தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
"நாடு என்ற ரீதியில் அனைவருக்கும் சரிசமமான அபிவிருத்தி வேலைத்திட்டங்களையே நான் மேற்கொள்கின்றேன். தொண்டமான் உள்ளிட்ட காங்கிரஸின் மக்கள் பிரதிநிதிகள், என்னுடன் தொடர்பு கொண்டு, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவார்கள்.

வறுமை ஒழிப்பு வருடமாகவே இந்த வருடத்தை நாம் முன்னெடுக்கின்றோம்.

வறுமைக்கு பிரதான காரணங்களில் ஒன்றாக போதைப் பொருள் பாவனை காணப்படுகின்றது. அதைக் கட்டுப்படுத்த நட வடிக்கை முன்னெடுத்து வரு கின்றேன். எதிர்காலத்திலும் மலையகம் தழுவிய சகல மக்களின் அபிவிருத்தியிலும் கவனம் செலுத்துவேன். அரசியல் ரீதியாகவும், மாகாண ரீதியாகவும், இன ரீதியாகவும் பிரிந்து நிற்பதை விடுத்து இலங்கையர் என்ற வகையில் அனை வரும் ஒன்றிணைந்து செயற் பட முன்வரவேண்டும்". என் றார். (ஐ)

31 ஆம் நாள் நினைவஞ்சலி





கனகசபை சண்முகநாதன்
(வேவி)

தோற்றம்
10.07.1948

மறைவு
10.01.2017

திதி: திரயோதசி

அன்பில் தெய்வமாய் ஆருயிர்க் கணவனாய்
அன்பு நிறை அப்பாவாய் அறிவிலே ஆசானாய்
பண்பின் இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய் எம்மை வழிப்படுத்தி
இன்பமாய் நாம் வாழ எல்லாம் எமக்கு அளித்து
பதைபதைப்பு ஏதும் இல்லாமல் பக்குவமாய் இறைவனடி
சேர்ந்தனையே அப்பா! நெஞ்சிருக்கும்வரை
நாம் மறவோம் உம் நினைவால் வாழ்ந்திருப்போம்
நீங்கா நினைவுகளுடன் அப்பா நீங்கள் இல்லாத
எங்கள் இல்லம் வெறிச்சோடி கிடக்கின்றது
எண்ணங்கள் எதுவும் இயங்காது நின்று விட்டது
அப்பா! எங்களைவிட்டு பிரிந்து மாதமொன்றானாலும்
எங்களுடன் இருக்கிறீர்கள் என்ற நினைப்புடன்
அப்பா உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்

உங்கள் நினைவுடன் வாழும்:

குடும்பத்தினர்.
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.

(57988) (45.3.7)

# வெறிச்சோடியது புதிய பேருந்து நிலையம்

வவுனியா, பெப்.11

வவுனியாவில் அமைக்கப்பட்ட புதிய பேருந்து நிலையத்தில் சேவை வழங்குவதை தனியார் பேருந்துகளும் நிறுத்திக் கொண்டன. 195 மில்லியன் ரூபா செலவில் அமைக் கப்பட்ட பேருந்து நிலையம் ஆள்நடமாட்டம் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

வடக்கு முதலமைச்சரின் செயலாளரது வேண்டுகோளுக்கு அமையவே தனியார் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்தில் சேவைகளை வழங்குவதை நிறுத்தியுள் ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை வட பிராந்தியப் பணியாளர்கள் கடந்த வாரம் பணிப் புறக்கணிப்பை நடத்தினர். அதில் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சரின் உருவப் பொம்மைகளை எரித்தனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வட பிராந்திய தனியார் போக்குவரத்துத் துறையினர் நேற்றுமுன்தினம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவை வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் கையளித்தனர். அதன் போதே முதலமைச்சரின் செயலாளர் தனியார் பஸ் உரிமையாளர்களிடம் புதிய பேருந்து நிலையத்தில் சேவைகளை மேற்கொள்ளவதை இடைநிறுத்துமாறு கேட்டுள்ளார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற உயர்மட்டப் பேச்சில் இணை நேர அட்டவணை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன்படி புதிய பேருந்து நிலையத்தைத் தற்காலிகமாக மூடுவது என்று தீர்மானிக்கப்பட்டது. இரு தரப்பினரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு வரும்வரை ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தனியார் பேருந்துகள் முன்னர் சேவை வழங்கிய இடத்தில் இருந்தே சேவை வழங்க வேண்டும் - என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அதையடுத்து தனியார் பேருந்துகள் புதிய பேருந்து நிலையத்தில் சேவை வழங்குவதை நிறுத்தியுள்ளன.

**இதுவரை நடந்தவை**

புதிய பேருந்து நிலையம் கடந்த மாதம் 16ஆம் திகதி மத்திய பேருக்குவரத்து அமைச்சரால் திறக்கப்பட்டது. ஓரிரு நாள்களில் இலங்கைப்போக்குவரத்துச்சபையினருக்கும், தனியார் பேருந்து சங்கத்தினருக்கும் முரண்பாடுகள் ஏற்பட்டன. இ.போ.ச. சாரதி தாக்கப்பட்டார். அதையடுத்து இலங்கைப் போக்குவரத்துச் சபையினருடைய பேருந்துகள் வழமையான (வவுனியா மத்தியில் உள்ள பேருந்து நிலையம்) இடத்தில் சேவைகளை மேற்கொள்வற்கு அனுமதிக்க வேண்டும் என்று தெரிவித்து வவுனியா சாலைப் பணியாளர்கள் தொடர் போராட்டம் நடத்தினர். வடக்கு போக்குவரத்து அமைச்சரின் உருவப்பொம்மைகளை எரித்தனர்.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இருதரப்பினரும் வழமையான இடத்தில் சேவைகளை மேற்கொள்ள வேண்டும். இணைந்த நேர அட்டவணை தயாரித்ததன் பின்னர் புதிய பேருந்து நிலையத்தில் சேவைகள் இடம்பெறும், இணைந்த நேர அட்டவணையை மீறுவோர் மீது சட்ட நட வடிக்கை எடுக்கப்படும் என்று முடிவெடுக்கப்பட்டது. எனினும் 4ஆம் திகதி தனியார் பேருந்து சங்கத்தினர் புதிய பேருந்து நிலையத்தில் தமது சேவைகளைத் தொடர்ந்தனர். (ற-21)





# பிலக்குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாக கவனவீர்ப்பு

வவுனியா, பெப்.11

முல்லைத்தீவு, பிலக்குடியிருப்பு மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும், அவர்களின் காணிகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் நேற்று வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட் டது.

வவுனியா மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பாக போராட்டம் நடத்தப்பட்டது. சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர், மக்களையும் உள்ளீர்த்துக் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தினர்.

கேப்பாபிலவு மக்களுக்கு நீதி வேண்டும், வேண்டும், வேண்டும், காணி நிலம் வேண்டும், மக்களின் நிலங்களிலிருந்து இராணுவமே வெளியேறு, கேப்பாபிலவு மக்கள் இலங்கையர் இல்லையா?, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பதில் என்ன?, அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய், பயங்கரவாதச் சட்டத்தை இரத்துச் செய், மைத்திரி - ரணில் அரசே அரசியல் வாக்குறுதி என்னாச்சு?, தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு என்ன? நாட்டில் நடப்பது நல்லாட்சியா? அல்லது காட்டாச்சியா? நல்லாட்சியில் மக்களுக்குக் கிடைத்தது என்ன? போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் போராட்டம் நடத்தப் பட்டது.

பிலக்குடி யிருப்பு மக்கள் தங்களுடைய வாழ்வாதாரத்துக்காக காணிகளை விடுவிக்கக் கோரி கேப்பாபிலவு விமானப் படைத் தளத்திற்கு முன்பாக அமர்ந்து பத்தாவது நாளாகத் தொடர்ந்து கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர். தமிழ்மக்களின் வாக்குக்களைப் பெற்றுக் கொண்ட மைத்திரி - ரணில் அரசு ஏன் தமிழ் மக்களுடைய பிரச்சினையைத் தீர்க்க முடியாமல் உள்ளது. இது பற்றி உரிய தரப்புக்கள் வாய் திறந்து கேள்வி எழுப்ப வேண்டும் - என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயூரனும் போராட்டத்தில் கலந்து கொண்டார். (ற-21)

# சாராயம் விற்ற பெண் கைது

வறணியில், தனது வீட்டில் வைத்துச் சாராயம் விற்ற பெண் ஒருவர் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்.

பௌர்ணமி தினமான நேற்றுமுன்தினம் வீட்டில் சாராயம் விற்கப்படுகின்றது என்று தகவல் கிடைத்தது. சிவில் உடையில் சென்ற போது மதுவரித் திணைக்கள அதிகாரி ஒருவருக்கு 180 லீற்றர் சாராயத்தை அந்தப் பெண் விற்றார். அவர் உடனடியாகக் கைது செய்யப்பட்டார். எதிர்வரும் 22ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்-என்று மதுவரித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ற-10,26)

# முல்லைத்தீவில் 23 கிராமங்களுக்கு சமுர்த்தி இல்லை

## வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை

முல்லைத்தீவு, பெப்.11

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை காலமும் 23 கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. அந்தக் கிராமங்களைச் சேர்ந்த தகுதியானவர்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்க வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் சமுர்த்திப் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தில் 23கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு இதுவரை சமுர்த்திக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. 2011ஆம் ஆண்டுசமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்ட போது குறிப் பிட்ட கிராம சேவகர் பிரிவுகளில் மக்கள் மீள்குடியமர்த்தப்படவில்லை என்று காரணம் கூறப்படுகின்றது. 2012ஆம் ஆண்டு அவர்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்ட பின்னரும், சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், மாற்றுவலுவுள்ளோரைக் கொண்ட குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்துக்காகப் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர். கடந்த 5 ஆண்டுகளாகப் பல தரப்புக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் உரிய நட வடிக்கை எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாக சமுர்த்திப் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுத்தேன். இதற்கான தீர்வை நடை முறைப்படுத்த 3 மாத கால அவகாசம் தேவை என்று பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார் - என்றார். (ற-101)

# மரண அறிவித்தல்



## திருமதி புஸ்பவதி உலகநாதன்

புங்குடுதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி உலகநாதன் நேற்று (10.02.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - குழந்தைநாச்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற உலகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான புத்திரகுண்டான், சரஸ்வதி, ராஜரத்தினம் மற்றும் கருணாகரன், திருப்பதி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கைலாயநாதன், நாகநாதி, செல்லம்மா, கண்மணி, சொக்கலிங்கம் ஆகியோரின் மைத்துனியும், சசிகரன் (பிரான்ஸ்), உருத்திரகுமாரன் ( வெள்ளை - தாவடி), தில்லைநாதன் (குட்டி - தாவடி), ரூபகாந்தன் (வவுனியா), காலஞ்சென்ற பாலகுமார், தேனுகா (தாவடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலைச்செல்வி (பிரான்ஸ்), ஜெகதாம்பாள், லோகநாயகி, கமலாதேவி, நிரஞ்சன், ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சன், தர்மிகா, டர்மிளா - கயூரன், தர்சிகன் (பிரான்ஸ்), லதீபா - நிரோசன், லக்ஷிகா - பிரசன்னா, லதுஷன், லதுஷா - கிஷோர், கபில்ராஜ், கமல்ராஜ், விதுர்சனா, ஜர்மிளா, தனுஷன், துபிர்னா, சங்கீதன், பிரதீபன், பார்த்தீபன், கம்சிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும், சரன், அஷ்சனா, அலயா, அத்விதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.59, வன்னியசிங்கம் வீதி,**
**தாவடி வடக்கு.**

(J/8053)(11)

தகவல்:
**குடும்பத்தினர்.**

**சசி - 0033 6298 95776, வெள்ளை - 077 724 2995,**
**குட்டி - 021 205 3140, ரூபன் - 077 668 1306, தேன் -076 862 5894**

## ஜல்லிக்கட்டைப் பார்க்கவந்தேன் மல்லுக்கட்டை பேசவில்லை

### என்கிறார் ஸ்டாலின்

சென்னை, பெப். 11

அலங்காநல்லூரில் நேற்று நடந்த ஜல்லிக்கட்டைப் பார்க்க தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் சென்றார். அவரிடம் அ.தி.மு. கழகத்தில் ஏற்பட்டுள்ள சசிகலா - ஓ.பி.எஸ். பிரச்சினை தொடர்பில் கேட்கப்பட்டது. இதன்போது, "ஜல்லிக்கட்டையே பார்க்க வந்தேன். அ.தி.மு. கழகத்தில் உள்ள மல்லுக்கட்டைப்பற்றிப் பேச வரவில்லை" என்று தெரிவித்தார் என இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன.

"பல ஆண்டுகளுக்கு முன்பு அலங்காநல்லூருக்கு வந்து ஜல்லிக்கட்டைப்பார்த்துள்ளேன். கடந்த 2 ஆண்டுகளாக ஜல்லிக்கட்டு நடைபெறவில்லை. எனவே இந்த ஆண்டு நிச்சயம் ஜல்லிக்கட்டு நடைபெற வேண்டும் என்பதற்காக இளைஞர்கள் பெரும் போராட்டத்தை நடத்தி வெற்றிகண்டனர். அவர்களுக்கும் அவர்களின் வெற்றிக்கும் எனது பாராட்டுக்கள்.

நான் அரசியல்வாதியாக இங்கு வரவில்லை.

அரசியலும் செய்யவில்லை. ஜல்லிக்கட்டு நேரத்தில் அ.தி.மு. கழகத்தில் நடக்கும் மல்லுக்கட்டு குறித்துப் பேச விரும்பவில்லை. ஜல்லிக்கட்டை மட்டுமே பார்க்க வந்தேன்" என மேலும் தெரிவித்தார். (ம-எ)



## விண்வெளிக்குச் செல்லவுள்ள மூன்றாவது இந்தியப் பெண்

புதுடில்லி, பெப். 11

கனடாவில் வசிக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சவ்னா பாண்டியா என்ற பெண் விண்வெளிக்குச் செல்லத் தயாராகி வருகிறார் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

விண்வெளிக்குச் செல்லும் மூன்றாவது இந்தியப் பெண் என்ற பதிவை அவர் ஏற்படுத்தவுள்ளார். 32 வயதுடைய சவ்னா, 3 ஆயிரத்து 200 போட்டியாளர்களிலிருந்து இதற்குத் தெரிவானார். 2018 ஆம் ஆண்டு 8 விண்வெளி வீரர்களுடன் இவரும் பயணிக்கவுள்ளார். (ம-எ)

# அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டு அரங்

# 1,000 காளைகளும் 1,500 வீரர்களும்

சென்னை, பெப். 11

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டு, அலங்காநல்லூரில் நேற்றுக் கோலாகலமாக அரங்கேறியது. ஆயிரம் காளைகள் போட்டியில் கலந்து கொண்டன. அவற்றை அடக்கும் முயற்சியில் ஆயிரத்து 500 வீரர்கள் கலந்துகொண்டனர். மிருக வதையின்கீழ் ஜல்லிக்கட்டு கடந்த சில வருடங்களாக தடை செய்யப்பட்டிருந்தது. கடந்த பொங்கலுக்காவது ஜல்லிக்கட்டு நடைபெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், மத்திய அரசு அதற்கு அனுமதி வழங்கவில்லை. இதனால் இதனால் தமிழக முதல்வர் ஓ.பி.எஸ். அவசர சட்டத்தையும் பின்னர் நிரந்தரச் சட்டத்தையும் இயற்றி ஜல்லிக்கட்டுக்கு இருந்த தடையை இல்லாமல் செய்தார்.


தடை நீக்கப்பட்ட பின்னர் பரவலாக ஜல்லிக்கட்டு நடத்தப்பட்ட போதிலும், உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூரில் நேற்றே அது நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படியே கோலாகலமாக நேற்று அரங்கேறியது ஜல்லிக்கட்டு.











### நேரடி ஒளிபரப்பு

ஜல்லிக்கட்டை தமிழ்நாட்டுத் தொலைக்காட்சி அலைவரிசைகள் பலவும் நேரடியாக ஒளிபரப்புச் செய்தன. கிரிக்கெட், கால்பந்து போன்ற ஆட்டங்களில் சிறப்பு நிகழ்வுகளை மீண்டும் மீண்டும் போட்டுக் காண்பிப்பதைப் போல் சில சம்பவங்கள் மீண்டும் மீண்டும் போட்டுக் காண்பிக்கப்பட்டன. போட்டியின் வர்ணனைகளும் சிறப்பாக அமைந்தன. பார்ப்போருக்கு சலிப்பை ஏற்படுத்தாமல் நகைச்சுவையான பாணியிலும் வர்ணனை அமைந்தது.

தமிழ்நாட்டு அரசு, மத்திய அரசு ஆகியவற்றைக் கண்டித்து அலங்காநல்லூர், மெரீனா ஆகிய இடங்களில் பேரெழுச்சியாகவும், ஏனைய இடங்களில் பரவலாகவும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகப் போராட்டங்கள் நடைபெற்றன. தமிழகமெங்கும் நடைபெற்ற போராட்டங்களில் கிட்டத்தட்ட 25 லட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் பங்கெடுத்தனர் என்று சொல்லப்பட்டது. இந்தப் போராட்டங்களுக்கெல்லாம் வித்திட்டது அலங்காநல்லூரே.

### 3 கோடி ரூபாய் பரிசுமழை

ஜல்லிக்கட்டுக்குப் பல்வேறுபட்ட நிறுவனங்களும் பல பரிசுப் பொருள்களை வழங்கியிருந்தன. அவை அனைத்தும் சேர்த்து இலங்கை மதிப்பில் 3 கோடி ரூபா பெறுமதியுடையவை என்று சொல்லப்பட்டது. சிறந்த மாடு பிடி வீரருக்கு ஒரு கார், 7 மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், 2 பசுமாடுகள், 500

## ரஷ்யப் படைகள் தயார் நிலையில்

### புடினின் கட்டளையை அடுத்து

மொஸ்கோ, பெப். 11

போர் ஒன்றை எதிர்கொள்ளும் நோக்கில், ரஷ்ய ராணுவத்தைத் தயார் நிலையில் இருக்குமாறு புடின் உத்தரவிட்டார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

அமெரிக்க அதிபராக ட்ரம்ப் பதவி ஏற்ற பின்பு பல்வேறு நாடுகள் விழிப்புடன் உள்ளன. ஏனெனில் ட்ரம்ப் எடுக்கும் ஒவ்வொரு முடிவுகளும் ஏதேனும் ஒருநாட்டுக்குப் பாதகமாக வந்து விடுகிறது. குறிப்பாக அமெரிக்கா - சீனா இடையே முறுகல் உச்சம் தொட்டுள்ளது. இதுஓர் உலகப் போரைத் தோற்றுவிக்கும் என்று கருதப்படும் நிலையில் ரஷ்யப் படைகளின் பலத்தை அதிகரிக்க புடின் உத்தரவிட்டார் என்று அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி தெரிவித்தார். ராணுவப் படைகளுக்கு சிறப்புப் பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார். (ம-எ)



## மலேசியாவில் 13 பேர் தொடர்

மலேசியாவில் இருந்து அண்டை
புறப்பட்ட சிறிய படகு ஒன்று கவிழ்ந்தத
தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்ப
அருகில் சென்றுகொண்டிருக்கையி
என்று சொல்லப்படுகிறது. படகில் 15 பேர்
தகவல் சென்றதும் அவர்கள் இருவ
கணவன் மனைவி என்று சொல்ல
வில்லை. அவர்களின் நிலை தொடர்பி

## சசிகலா முதல்வராக

சென்னை, பெப். 11

சசிகலா முதல்வராகக் கூடாது என்று தொடரப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அந்த வழக்கை விசாரிக்க மன்று மறுத்தது.

தான் வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவியில் இருந்து நீக்கப்பட்டேன் என்று கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார் தமிழக முதல்

வர்
மீது
சன
இத
தமி
பன
கிறத
கட
முத
கக்
உச
தொ
இந்

# ...ங்கேற்றம்
# ...் பற்கேற்பு





அலைபேசிகள், தங்க நாணயங்கள், வெள்ளி நாணயங்கள், தளபாடங்கள், மின் சாதனங்கள் எனப் பரிசுப் பொருள்கள் நீண்டு சென்றன. பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

**குவிந்தனர் பிரபலங்கள்**

அலங்காநல்லூர் ஜல்லிக் கட்டை நேரில் காண மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன், தி.மு. கழகத்தின் செயல் தலைவர் ஸ்டாலின் உட்பட பல முக்கியஸ்தர்கள் வந்தனர். மெரீனாவில் நடைபெற்ற மாணவர் போராட்டத்தில் அவர்களுக்கு தனது ஆதரவை வழங்கிய நடிகர் ராகவா லோறன்ஸும் ஏனைய பல நடிகர்களும் கலந்து கொண்டனர். (ம-எ)

## ட்ரம்புக்கு ஆதரவு

வொஷிங்டன், பெப். 11
ட்ரம்பின் நுழைவிசைவுத் தடை நடவடிக்கைக்கு ஐரோப்பியர்களிடம் ஆதரவு உள்ளது என்று கருத்துக் கணிப்பு ஒன்றில் தெரியவந்தது.

அமெரிக்காவுக்குள் ஈரான், ஈராக் மற்றும் சிரியா உள்ளிட்ட 7 முஸ்லிம் நாடுகளை சேர்ந்தவர்கள் நுழைய 90 நாள்களுக்கு அதிபர் ட்ரம்ப் தடை விதித்தார். அவரது இந்த நடவடிக்கை குறித்து ஐரோப்பாக் கண்டத்தின் பிரான்ஸ், ஜேர்மனி, பெல்ஜியம், ஆஸ்திரேலியா, கிரீஸ், ஹங்கேரி, இத்தாலி, போலந்து, ஸ்பெய்ன், பிரிட்டன் உள்ளிட்ட 10 நாடுகளைச் சேர்ந்த 10 ஆயிரம் பேரிடம் இணையத் தளத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. ட்ரம்புக்கு 55 சதவீதம் பேர் ஆதரவு தெரிவித்தனர்.

போலந்தில் 71 சதவீதமும், ஜேர்மனியில் 53 சதவீதமும், இங்கிலாந்து மற்றும் ஸ்பெயினில் 41 சதவீதம் பேரும் ஆதரவு அளித்துள்ளனர். ட்ரம்பின் நடவடிக்கையை இளைஞர்களைவிட முதியவர்கள் ஆதரிக்கின்றனர் என்றும் கருத்துக் கணிப்பின் அடிப்படையில் சொல்லப்பட்டது. (ம-எ)



# மோடி, பிரணாப் ஆகியோருக்கு அறிக்கை தமிழக ஆளுநர் வித்யாசாகர் வழங்கினார்

## தீவிர ஆய்வுக்குப் பின்னரே முடிவு என்றும் தகவல்

சென்னை, பெப். 11
தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், அ.தி.மு. கழகத்தின் பொதுச் செயலாளர் ஆகியோரை நேற்றுமுன்தினம் தனித் தனியாக சந்தித்தார் தமிழக பொறுப்பு ஆளுநர் வித்யாசாகர் ராவ். சந்திப்பின் பின்னர் பிரதமர் மோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி ஆகியோருக்கு தமிழ்நாட்டு அரசியல் குழப்பங்கள் தொடர்பில் அறிக்கை வழங்கினார். தீவிர ஆய்வின் பின்னரே முடிவு எடுக்கப்படும் என்று ஆளுநர் தெரிவித்தார் என இந்திய ஊடகங்கள் நேற்று செய்தி வெளியிட்டன.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அ.தி.மு. கழகத்தின் தலைமைக்கு எதிராக பல விமர்சனங்களை முன்வைத்தார் ஓ.பன்னீர்செல்வம். தான் வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவி விலகினார் என்றும் அவர் குறிப்பிட்டார். இதனையடுத்து கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். சசிகலா - ஓ.பி.எஸ். இடையே தற்போது பெரும் வார்த்தை மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் எவருக்குத் தமது ஆதரவு என்று தெரிவித்துவரும் நிலையில் அவைத்தலைவர் மதுசூதனன் ஓ.பி.எஸ்ஸுக்கு நேற்றுமுன்தினம் தனது ஆதரவைத் தெரிவித்தார்.

மதுசூதனன் தலைமையில் சிலரும், சசிகலா தலைமையில் சிலரும் வித்யாசாகர் ராவை நேற்றுமுன்தினம் தனித்தனியாகச் சந்தித்தனர். வற்புறுத்தலின் அடிப்படையிலேயே தனது பதவி விலகல் அமைந்தது என்று முறையிட்டார் ஓ.பி.எஸ்.

பெரும்பான்மையான உறுப்பினர்களது ஆதரவுக் கடிதத்தை ஒப்படைத்து ஆட்சி அமைக்கும் உரிமையைச் சசிகலா கோரினார். இருதரப்பு நியாயங்களையும் வித்யாசாகர் கேட்டறிந்தார்.

தீவிர ஆலோசனை... பின்னரே இந்த வி... தொடர்பில் மு... எடுக்கப்படும் என்று... நேற்றுத் தெரிவித்த... இந்திய ஊடகங்க... குறிப்பிட்டன.

சசிகலாவுக்கு எதி... தொடரப்பட்ட சொ... குவிப்பு வழக்கின் தீ... நாளை மறுதினம் அல்லது எதிர்வரும் செவ்வாயன்று வெளியாகும் என்றும் கருதப்படுகிறது. இவை அனைத்தும் சேர்ந்து தமிழ்நாட்டு அரசியலில் உச்சக்கட்டப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. (ம-எ)

# நாங்கள் மிகப்பெரும் தவறிழைத்தோம் ஏற்றுக்கொள்கிறார் டொனால்ட் ட்ரம்ப்

வொஷிங்ரன், பெப். 11
அமெரிக்கா, கடந்த காலங்களில் பெரும் தவறை இழைத்தது என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், 'பொக்ஸ் நியூஸ்' தொலைக்காட்சிக்கு வழங்கிய சிறப்புச் செவ்வியில் தெரிவித்தார்.

ட்ரம்ப்பை செவ்வி கண்டவர், ரஷ்யாவுடனான தொடர்பு தொடர்பில் வினவியதுடன் புடின் கொலைகாரரைப் போன்று நடந்து கொள்கிறாரா எனக் கேட்ட கேள்விக்குப் பதில் வழங்குகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எல்லா இடத்திலும் கொலைகாரர்கள் உள்ளனர். நாம் பல கொலைகாரர்களைக் கொண்டுள்ளோம். கடந்த காலங்களில் எமது நாடு தவறு இழைக்காததொன்று என நம்புகிறீரா? சில வருடங்களுக்கு முன்னர் நாம் என்ன செய்தோம் என பின்னோக்கிப் பாரும். பெரும் தவறுகளை இழைத்து விட்டோம்" எனத் தெரிவித்தார்.

ட்ரம்ப்பின் கருத்து ஈராக், சிரியா போரில் அமெரிக்கத் தலையீடு பற்றியே அமைந்துள்ளது என பன்னாட்டு ஊடகங்கள் மற்றும் அரசியல் நோக்கர்கள் கருகின்றனர்.

ரஷ்ய ஜனாதிபதி தொடர்பான செய்தியாளரின் விமர்சனத்துக்கு, ரஷ்யத் தலைமையகம் கண்டனம் தெரிவித்ததுடன் பொக்ஸ் நியூஸ் நிறுவனம் மன்னிப்பு கோர வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது. (ம-எ)

# ...ில் படகு விபத்து ...டர்பில் கவலை

...ண்டை நாடான இந்தோனேசியாவுக்கு ...ழ்ந்ததில் அதில் இருந்த 13 பேரின் நிலை ...க்கப்பட்டது. படகு சாபா என்ற பகுதிக்கு ...கையிலேயே இந்த விபத்து இடம்பெற்றது ... 15 பேர் இருந்தனர். கடலோர மீட்புப் படைக்கு ... இருவரை மீட்டனர். மீட்கப்பட்ட இருவரும் ...ல்லப்பட்டது. ஏனைய 13 பேரைக் காண ...தாடர்பில் அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)

# ...ராகக்கூடாது என்ற வழக்கை விசாரிக்க மன்று மறுப்பு

வர் ஓ.பி.எஸ். கட்சித் தலைமை மீதும் அவர் காரசாரமான விமர்சனத்தை முன்வைத்தார்.

இதனையடுத்து சசிகலாவுக்கு தமிழகத்தில் பரவலாக எதிர்ப்பலை உள்ளது என்று கருதப்படுகிறது.

சட்டப்பஞ்சாயத்து இயக்கம் முதல்வராக சசிகலா பதவியேற்கக்கூடாது என்று தெரிவித்து உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர் பார்க்கப்பட்டது. எனினும், விசாரணைக்கு மன்று மறுத்தது. (ம-எ)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
07 . 04 . 1977




உதிர்வு
24 . 01 . 2016

அளவெட்டி மேற்கு , காட்டுப்புலம்
அமரர் திருமதி திருஞானம் நிர்மலா (மலர்)
(சுகாதாரப் பணி உதவியாளர்)
அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
திதி: அபரபக்க பிரதமை(11.02.2017)

அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்த எம் அன்புத் தெய்வமே !
ஆயிரம் உறவுகள் இருந்தாலும் அம்மா என்றழைக்க நீ இல்லையே அம்மா!
ஓராண்டு கடந்து விட்டதை நாள்கள் சொல்கின்றது
ஈரமாறாத துயரத்தில் எம் இதயமெல்லாம் கலங்குதம்மா

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
அன்புத் தாய், கணவர், பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள், உற்றார், உறவினர்கள்.

# இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் சமூகநலத் திட்டம் ஆரம்பம்





## விபத்துக்களை தவிர்க்கும் முகமாக விழிப்புணர்வு

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளை அலுவலகத்தின் சமூக நலத் திட்டத்தின் கீழான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இரவு நேரத்தில் பயணிக்கும் துவிச்சக்கர வண்டிகளுக்கு ஏற்படும் விபத்து சார் அசம்பாவிதங்களைத் தவிர்க்கும் முகமாகவும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாகவும் 'ஒளி ஸ்ரிக்கர்கள்' ஒட்டும் நடவடிக்கைகள் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் ஓர் அங்கமாக கடந்த 7 ஆம் திகதி யாழ். நகரப் பகுதியில் ஒளி தெறிக்கும் ஸ்ரிக்கர்கள் ஒட்டும் நடவடிக்கைகள் இடம்பெற்றிருந்தன.


# மரண அறிவித்தல்

## அல்பிறட் யூலியன் பற்றிக் (யூஜின்)



ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், சுண்டுக்குளியை வதிவிடமாகவும், தற்பொழுது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அல்பிறட் யூலியன் பற்றிக் (யூஜின்) 05.02.2017 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அல்பிரட் - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், விஜயராணியின் (இளைப்பாறிய தாதிய உத்தியோகத்தர் - யாழ். போதனா வைத்தியசாலை) பாசமிகு கணவரும், செல்ரன் (கனடா), வித்தியா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி - 2005 Batch), தர்சிகா (வேம்படி மகளிர் கல்லூரி - 2006Batch), சுனித்தா (வேம்படி மகளிர் கல்லூரி - 2007 Batch), எரிக்பிரதாப் (புனித பத்திரிசியார் கல்லூரி - 2011 Batch ) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சரோஜா, யூஜினா, சந்திரா, இந்திரா, ஜெறின் மற்றும் அன்ரனி (ஜஸ்ரின் - பிரான்ஸ்), ரொபின் (பிரான்ஸ்), ஜகி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், ஹஸ்வினியின் (திருக்குடும்ப கன்னியர் மடம்) பாசமிகு மாமனாரும், றோச், சவுந்தரம், பாஸ்கரன், சாந்தி, ராதிகா, குலேந்திரன், மதி, பிளேவியன், காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை மற்றும் விஜயலட்சுமி, விஜயராசா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.02.2017) சனிக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கனடாவில் (கனடா நேரப்படி ) நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(J/8014)( 11)

செல்ரன் (மகன் - 416 7280 296),
எரிக் (மகன் - 647 970 4956)



"சில பிரபல்யமான பாடசாலைகளில் அரசியல் வாதிகள், பொறியியலாளர்கள், மருத்துவர் கள், கணக்காளர்கள் போன்ற மேற்தர வர்க்கத்தினர் மற்றும் அந்தப்பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் போன்றவர்களது பிள்ளைகள் இணைக்கலைத்திட்ட நடவடிக்கைகளின் போது எந்தவித நிபந்தனைகளும் இன்றித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

# பாடசாலைகளில் இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகளின் தேவைகள்

சி.இந்திரகுமார்

சிறிய பாடசாலைகளில் அனைவரும் ஏதோ ஒரு இணைபாடவிதானத்தில் பங்கு கொள்ளும்போது பெரிய பாடசாலைகளில் எல்லோரும் இத்தகைய செயற்றிட்டங்களில் பங்கு கொள்வதில்லை. இந்த நிலைமை ஆரோக்கியமானதல்ல. அனைத்து மாணவர்களும் ஏதோ ஒரு இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகளில் பங்ககொள்வதை உறுதிசெய்து சமத்துவத்தைப் பேண வேண்டும்.

சில பிரபல்யமான பாடசாலைகளில் அரசியல்வாதிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், கணக்காளர்கள் போன்ற மேற்தர வர்க்கத்தினர் மற்றும் அந்தப்பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் போன்றவர்களது பிள்ளைகள் இணைக்கலைத்திட்ட நடவடிக்கைகளின்போது எந்தவித நிபந்தனைகளும் இன்றி தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதனால் வசதி வாய்ப்புக்கள் குறைந்த வறிய நடுத்தர வர்க்கத்தின் பிள்ளைகள் பங்கு பெறுவதற்கான சந்தர்ப்பம் இல்லாமற் போய் விடுகிறது. இந்தவிடயம் இணைக் கலைத்திட்டம் மீதான விளைதிறனில் பெரிய தாக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றதெனலாம்.

### மாணவர்கள் அதிக நாட்டம்

இணைக்கலைத்திட்டச்செயற்பாடுகளின்போது மாணவர்கள் சில வகையான செயற்பாடுகளின் மீதே அதிக நாட்டம் கொள்கின்றனர். குறிப்பாக விளையாட்டு நிகழ்வுகள் கல்விச் சுற்றுலா, கண்காட்சி போன்றவற்றைக் குறிப்பிட முடியும். மாறாக சாரணியம், கடேற் படைப்பிரிவு, மன்றச் செயற்பாடுகள், அரங்க நிகழ்வுகள் மீது அவர்கள் அக்கறை காட்டுவது குறைவு. எனவே இந்த நிலைமைகளை மாற்றியமைத்து அனைத்து வகையான இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் மீதும் மாணவர் பங்குபற்றுதலைப் பாடசாலைகள் உறுதி செய்ய வேண்டும்.

சில பாடசாலைகளில் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்படும் ஆசிரியர்களின் பொறுப்பற்ற தன்மை காரணமாக ஒவ்வொரு இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கும் பொருத்தமற்ற ஆசிரியர்களை பாடசாலை நிர்வாகம் தெரிவு செய்தல், அவ் ஆசிரியர்களின் போதிய அக்கறையற்ற செயற்பாடுகள், ஆசிரியர்கள் சிலர் பேச்சுக் கட்டளையிடும் அதிகாரிகளாகக் காணப்படுவதோடு செயற்பாட்டு அதிகாரிகளாகக் காணப்படாத நிலை போன்றவற்றால் இணைபாடவிதான செயற்பாடுகள் கீழ் நிலைக்குத் தள்ளப்படுகின்றதெனலாம்.

மேலும், பெற்றோர்களுக்கு இணைபாடவிதான செயற்பாடுகளின் முக்கியத்துவத்தைப் பற்றி விளக்கமளிப்பதன் மூலம் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவர்களை மேலும் அதிகரித்துக் கொள்ள முடியும். ஏனெனில் தமது பிள்ளைகள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்காது இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுப்பதைப் பெற்றோர்கள் விரும்பமாட்டார்கள். எனவே, பாடவிதானம் மற்றும் இணைபாடவிதானம் எனும் இவ்விரண்டு விடயங்களின் முக்கியத்துவம் தொடர்பில் பெற்றோர்களுக்குப் பாடசாலைச் சமூகம் தெளிவுபடுத்த வேண்டும்.

இவை எல்லாவற்றையும் கடந்து இலங்கையில் பல்வேறு காலப்பகுதிகளில் வெளிவந்த கல்விச் சீர்திருத்த முன்மொழிவுகளிலும் கல்விச்சீர்திருத்தங்களிலும் பாடசாலைகளில் இணைபாடவிதான செயற்பாடுகளின் அவசியத்தன்மை வலியுறுத்தப்பட்டு வந்துள்ளதை நாம் அவதானிக்கலாம். அவையாவன:

### மாணவர்களின் அனுபவமும், வளப்படுத்தலும்

1. 1981ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்த ஆலோசனையில் இணைபாடவிதான செயற்பாடுகள் பாடசாலைச் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக அமைய வேண்டும் என்றும், பிள்ளையின் அனுபவத்தை வளப்படுத்தலிலும் அவனது திறன்களைக் கண்டறிவதற்குரிய வாய்ப்புக்களை அளிப்பதிலும் சில இணைபாடவிதான நடவடிக்கைகள் முறையான பாடவிடயங்கள் விடவும் பெரிய நீடித்து நிலவுகின்ற தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது.
2. 1992ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையில் வாரத்துக்கு ஒரு பாடவேளை, இணைபாடவிதான செயற்பாடுகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் எனவும், எல்லா மாணவர்களும் ஏதோவொரு இணை பாடவிதான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.
3. 1997ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வந்த பொதுக்கல்விச் சீர்திருத்தத்திலும் இணைபாடவிதானசெயற்பாடுகள் பற்றி விதந்துரைக்கப்பட்டுள்ளது. எல்லாப்பாடசாலைகளிலும் இது நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றும், அதன்மூலம் பல்வேறு பண்புகள் கட்டியெழுப்பப்பட வேண்டுமென்றும் மாணவர் பதிவேட்டில் இணைபாடவிதான செயற்பாடுகள் பதியப்பட வேண்டுமென்றும், குறிப்பிடப்பட்டுள்ளது.
4. 2010ஆம் ஆண்டின் கல்வி அமைச்சின் முகாமைத்துவ மற்றும் தர உறுதிப்பாட்டு அலகு வெளியிட்ட பாடசாலைக்கல்வி செயற்பாட்டில் பண்புசார் விருத்தி III எனும் நூலில் குறிப்பிட்டுள்ள பிரதான எட்டுத்தரங்களில் நாலாவதாக இணைபாடவிதானச் செயற்பாட்டை இணைத்துள்ளதுடன், அதற்கான சுட்டிகளையும் வரையறை செய்துள்ளது.

பாடசாலையில் உள்வாரி- வெளிவாரி மதிப்பீட்டை மேற்கொள்ளும் போது இதனையும் கருத்திற்கொண்டு புள்ளியிடலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

இவை எல்லாவற்றையும் விட கல்வி அமைச்சின் பல்வேறு சுற்றறிக்கைகள் இணைபாடவிதான செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நிற்பதுடன், அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய வழிமுறைகள் தொடர்பாகவும் விளக்குகிறது.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட விடயங்கள் யாவற்றையும் அடிப்படையாகக் கொண்டும் நடைமுறைத்தன்மையின் அடிப்படையிலும் நோக்கும்போது பிள்ளையின் முழுமையான விருத்திக்கு இணைக் கலைத்திட்டச் செயற்பாடுகள் இன்றியமையாதன என்பதை மறுப்பதற்கு இடமில்லை. இருந்தும் வகுப்பறைக்கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுக்குப் புறம்பாக அவற்றோடு அணைந்த வகையில் பிறிதொரு நேரத்தில் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் போதிய அக்கறை செலுத்தப்பட வேண்டும்.

இணைப்பாடவிதானநடவடிக்கைகள்பாடவிதான நடவடிக்கைகள் மீது பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் பாடசாலைகளில் முன்னெடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

### இணைப்பாடவிதான செயற்பாட்டின் அவசியம்

இணைபாடவிதான செயற்பாடுகளில் ஓர் பாடசாலை சிறந்து விளங்கவில்லையாயின் அந்தப் பாடசாலை தனியார் கல்வி நிலையத்துக்கு நிகரானதாகும். ஏனெனில் தனியார் கல்வி நிலையமொன்றால் மாணவனொருவனுக்குத் தேவையான அறிவை மட்டுமே வழங்க முடியும். அவனது வாழ்வுக்குத் தேவையான திறன்கள் எதனையும் அங்கு பெறமுடியாது.

கல்வி அறிவால் மட்டும் ஒரு மனிதன் சமநிலை ஆளுமை பொருந்திய மனிதனாக உருவாக முடியாது. ஆளுமை மற்றும் சிறந்த ஆள் தன்மைகள் நிறைந்த எதிர்காலச் சவால்களை வென்றெடுக்கக் கூடிய முழு மனிதன் ஒருவன் உருவாவதற்கு இணைக்கலைத்திட்டச் செயற்பாடுகள் மிகவும் அவசியமானவையாகும். அவற்றைச் சிறப்பாக வளர்த்தெடுக்கக்கூடிய இடம் பாடசாலைகளேயாகும்.

எனவே நவீன விஞ்ஞான தொழில்நுட்ப உலகின் எதிர்காலச் சவால்களை இலகுவாக வென்றெடுப்பதற்கு மாணவர்கள் பாடசாலைக்காலத்தில் பாடவிதானம் இணைபாடவிதானம் உட்பட்ட இரண்டு விடயங்களிலும் தம்மை அர்ப்பணிப்போடு ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம், தங்கள் எதிர்காலம் வாழ்வை ஒளிமயமாக்கிக் கொள்ள முடியும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விவேகம் முக்கியம்!

ஒரு கதை சொல்லப்படுவதுண்டு! கடவுள் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்த மூன்று பேர் மலை உச்சியில் இருந்து குதித்தார்களாம். முதலாமவர் குதித்தபோது, தனது சமயத்தின் கடவுளின் பெயரைச் சொல்லிக்கொண்டே குதித்தாராம். எந்தக் காயங்களும் இன்றி ஆரோக்கியமாக அடிவாரத்தை அடைந்து விட்டாராம். அடுத்தவரும் அதேபோன்றே தனது கடவுளை அழைத்துக்கொண்டே குதித்தாராம். அவரும் பாதுகாப்பாக அடிவாரத்தைச் சேர்ந்துவிட்டாராம். மூன்றாமவர் குதிக்கும்போது, ஒரு கடவுளை அழைத்தாராம். ஆனால் அடிவாரத்தை எட்டுவதற்குள் தான் வணங்கும் அனைத்துக் கடவுள்களையும் அழைத்தாராம். இறுதியில் அடிவாரத்தில் வீழ்ந்து உயிரை விட்டாராம். மற்ற இருவரும் தமது ஒரேயொரு கடவுளை மட்டுமே அழைத்தபோது, அவர்கள் ஓடி வந்து அவர்களைக் காப்பாற்றிவிட்டனர். மூன்றாமவர் எல்லாக் கடவுளரையும் அழைத்தபோது, அவர் காப்பாற்றுவார் தானே என்று இவரும், இவர் காப்பாறுவார்தானே என்று அவரும் எந்த முயற்சியும் எடுக்காமல் விட்டதால் வீழ்ந்து இறந்துபோனாராம்.

இது ஒவ்வொரு மதத்தினரும் தமது மதத்தை உயர்த்தி அடுத்த மதத்தைக் கேலி பேசப் பயன்படுத்தும் கதைதான் என்றாலும் எந்த ஒன்றிலும் பற்றுறுதியான நம்பிக்கை வைக்காமல் நம்பிக்கையீனத்துடன் செயற்பட்டதன் விளைவு உயிரிழப்பு என்கிற பாடத்தையும் சொல்கிறது இந்தக் கதை.

காணாமற்போனோரின் உறவினர்கள் சிலர் கொழும்பில் நடத்திய சந்திப்பில் நடந்துகொண்ட விதத்தைப் பார்க்கும்போது இந்தக் கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது.

காணாமலாக்கப்பட்டவர்களின் ஒட்டுமொத்த உறவினர்களின் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லர் இவர்கள் என்பதும் கவனிக்கத்தக்கது. என்றாலும், காணாமலாக்கப்பட்டவர்கள் பிரச்சினையில் தாம் எவரையும் நம்பவில்லை என்கிறார்கள் அவர்கள். கொழும்பு அரசு மீதும் நம்பிக்கையில்லை என்கிறார்கள். ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் வாக்களித்துத் தேர்ந்தெடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீதும் நம்பிக்கையில்லை என்கிறார்கள். அப்படியானால் எவர் மீது அவர்கள் நம்பிக்கை வைத்துச் செயற்படுகிறார்கள்? இந்த இரு தரப்பினரதும் உதவியின்றித் தாம் வேண்டுவதை இவர்கள் எப்படிச் சாதிக்கப் போகிறார்கள்.

அண்மையில் வவுனியாவில் நடந்த உணவு ஒறுப்புப் போராட்டத்தில் எட்டப்பட்ட இணக்கத்தின் அடிப்படையிலேயே நேற்றுமுன்தினம் அலரி மாளிகையில் கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்டது. எந்த அரசு மீது நம்பிக்கையில்லை என்று அவர்கள் சொல்கிறார்களோ அதே அரசை நடத்திச் செல்லும் ஆட்சியாளர்களுடன் சந்திப்பு என்றதைச் சொல்லித்தான் அன்று போராட்டத்தை முடித்துக்கொண்டார்கள். நம்பிக்கையற்ற அரசுடன் பேசுவதற்காக ஏன் போராட்டத்தை முடித்துக்கொண்டார்கள் என்பது தெரியவில்லை.

பன்னாட்டு விசாரணைதான் வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகிறார்கள். தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்பின்றி அவர்களால் இந்த இலக்கை எப்படி அடைய முடியும்? அதற்கு மாற்று வழி ஏதாவது வைத்திருக்கிறார்களா? தான்தோன்றித்தனமான, முன்யோசனையற்ற இதுபோன்ற கருத்துக்களால் இந்தப் பிரச்சினையிலிருந்து கூட்டமைப்பு ஒதுங்கிப்போனால் நிலமை என்னவாகும்?

தேவையுள்ள மக்கள், போராடும் மக்கள், நிறையச் சிக்கல்களை எதிர்கொள்ளும் மக்கள் அனைத்து அரசியல் தரப்புகளையும் இணைத்துக்கொண்டு தமது நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிப்பதே விவேகமானது. அதைவிடுத்து எடுப்பார் கைப்பிள்ளையாக எவருடையதோ அரசியல் பின்புலத்தோடும், ஊக்குவிப்போடும் நடந்துகொள்வது குட்டையைக் குழப்பும் செயலாக மட்டுமே அமையும். பின்னர் குழம்பிய குட்டைக்குள் மீன்பிடிப்பது கொழும்பு அரசுக்குச் சுலபமாகிவிடும். காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு அதனால் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை.

1998இல் யாழ்ப்பாணத்தில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் காணாமலாக்கப்பட்டதன் பின்னர் எழுந்த, அவர்களின் உறவினர்களின் அமைப்புகளையும் இந்த வேளையில் நினைத்துப் பார்க்கிறோம். இதேபோன்ற அரசியல் விளையாட்டுக்களின் பின்னால் இன்று வரைக்கும் அவர்களுக்கும் நீதி கிடைத்ததில்லை என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. தேவையுடையோர் வேகத்துடன் நடப்பதிலும் பார்க்க விகேத்துடன் நடப்பதே முக்கியம்.

# சாதகமான அரசியல் சூழ்நிலை அரசுக்கு வாய்க்குமா?

■ சேரலாதன்

போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கான கலப்பு நீதிமன்றத்தை அமைப்பதற்கும், காணமற்போனோர் தொடர்பான செயலகத்தை உருவாக்குவதற்கும் தற்போது நாட்டில் காணப்படுகின்ற அரசியல் சூழ்நிலையே தடையாக இருப்பதாகக் கூறியிருக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. மேலும் புதிய அரசமைப்பை உருவாக்கிய பின்னரே, இவை தொடர்பாகக் கவனம் செலுத்த முடியுமெனவும் அவர் கூறியுள்ளார். அரசுத் தலைவரின் இந்தக் கருத்து சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரையில் பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. தற்போதுள்ள நிலையில் புதிய அரசமைப்பை உருவாக்குவதே பெரும் இழுபறிநிலையில் காணப்படுகின்றது. இனவாதிகள் புதிய அரசமைப்பை உருவாக்காமல் தடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

### இனவாதத் தரப்புக்களின் அரசுக்கு எதிரான பரப்புரைகள்

இதற்கு எதிரான பரப்புரைகளும் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்றன. புதிய அரசமைப்பின் மூலமாக நாடு பிளவுபடப்போகின்றது; வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டுத் தமிழர்களின் கரங்கள் வலிமை பெறப் போகின்றன; பெரும்பான்மையின மக்களின் இருப்புக்கு ஆபத்து வரப்போகின்றது எனறெல்லாம் தவறான தகவல்களை வழங்கித் தென்பகுதி மக்களைக் குழப்பி விடுவதில் இனவாதிகள் வெற்றிபெற்று வருகின்றனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தாமொரு முன்னாள் அரசுத் தலைவர் என்பதையும் மறந்து, இனவாதக் கருத்துக்களைத் தொடர்ந்து பரப்பி வருகின்றார். அவர் அண்மையில் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், நாட்டின் தலைவரின் தற்போதைய செயற்பாடுகளைப் பார்க்கும்போது 70ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு நாடு எஞ்சியிருக்குமா என்ற சந்தேகம் உருவாகியுள்ளது; புதிய அரசமைப்பை உருவாக்குவதன் மூலமாக நாட்டைப் பிளவுபடுத்திப் பிராந்திய ஆட்சி நிர்வாகத்தை உருவாக்குவதே அரசின் நோக்கமாகவுள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது, என்றெல்லாம் தெரிவித்துள்ளார். புதிய அரசமைப்பொன்றை உருவாக்க ஆதரவு அளிக்குமாறு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் விடுத்த வேண்டுகோளையும் மகிந்த நிராகரித்துவிட்டமை தெளிவாகத் தெரிகின்றது.

ஆனால் புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாக அரசு மக்களுக்கு விரிவாக எடுத்துரைத்து அவர்களது சந்தேகங்களுக்கு முற்றுப்புள்ளி இடவேண்டும். மக்களைக் குழப்புவதற்கு கூட்டு எதிரணியால் முடியுமென்றால், அவர்களைத் தெளிவுபடுத்துவதற்கு அரசால் முடியாமற் போனது ஏன் என்பது புரியவில்லை.

### அரசியல் என்பதே பிரச்சினைகளின் கலவையே

பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காது எவராலும் ஆட்சியைக் கொண்டு நடத்த முடியாது. அரசியல் என்பதே பிரச்சினைகளால் உருவாக்கப்பட்ட ஒரு கலவையாகும். தற்போதைய ஜனாதிபதி, ஆட்சிக்கு வந்து இரண்டு ஆண்டுகள் கழிந்து விட்டன. இவர் ஆட்சிக்கு வரும்போது போரும் ஓய்ந்து விட்டதால், ஏனைய பிரச்சினைகளில் கவனத்தைச் செலுத்துவதற்கான அவகாசம் நிறையவே வாய்த்திருந்தது. முன்னைய ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற ஊழல் மற்றும் மோசடிகளால் நாட்டின் பொருளாதாரமே படுகுழியில் தள்ளப்பட்டுக் காணப்படுகின்றது. எல்லைமீறிய வகையில் கடன்களைப் பெற்றதால் அதன் சுமை, நாட்டு மக்களின் தலைகளை நெரித்துக் கொண்டிருக்கின்றது. பெற்ற கடனுக்கான வட்டியைச் செலுத்துவதற்கே நாட்டின் பொருளாதார நிலை இடம்கொடுக்கவில்லை. ஊழல் மோசடியாளர்கள் இனம் காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால், இழக்கப்பட்ட நிதியில் கணிசமான அளவைத் திரும்பப் பெற்றிருக்க முடியும். ஆனால் இந்த விடயத்தில் அரசின் நடவடிக்கைகள் திருப்தி தரும் வகையில் அமைந்திருக்கவில்லை. ஏதோ பெயருக்குக் கைது செய்வதும், பின்னர் விடுவிப்பதுமான செயற்பாடுகளே தொடர்கின்றன. இதன் காரணமாகவே கூட்டு எதிரணியென ஒன்று உருவாகி, இன்று அரசுக்குப் பெரும் சவாலாக மாறி நிற்கின்றது. மோசடிசெய்து சம்பாதித்த கறுப்புப் பணத்தைக் கொண்டு கூட்டு எதிரணியினர் ஊர்வலங்களையும், போராட்டங்களையும், பொதுக் கூட்டங்களையும் ஏற்பாடு செய்து வருவதாக அரசில் உள்ளவர்கள் குற்றம் சாட்டும் அளவுக்கு நிலைமை மோசமாக மாறிவிட்டது. இதைவிட மகிந்த தரப்பினர் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்போம் என்று வெளிப்படையாகவே கூறிவருகின்றனர். அரசின் சகல நடவடிக்கைகளையும் எதிர்த்துவரும் அவர்கள், இனவாதத்தை ஊக்குவிப்பதன் மூலமாகவும் அரசுக்கு நெருக்கடியைக் கொடுத்து வருகின்றனர்.

தற்போது அரசியல் சூழ்நிலை சரியாக இல்லாததால், சிறுபான்மை மக்கள் தொடர்புடைய விடயங்களில் தம்மால் எதுவுமே செய்ய முடியவில்லை யென ஜனாதிபதி கூறிவிட்டார். இந்தச் சூழ்நிலை என்று மாறும் என்பதை அவரால் தெரிவிக்க முடியுமா என்பது பெரும் கேள்விக்குறியாகவே எழுந்து நிற்கின்றது.

ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்குமா? என்பது தமிழில் உள்ளதொரு கூற்றாகும். இதற்கு ஒத்ததாகவே அரசின் நிலையும் தற்போது காணப்படுகின்றது. பல்வேறு வகையிலும் பாதிக்கப்பட்ட தமிழர்கள், அரசு தமக்குத் தீர்வை வழங்குமென்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். தமிழ்த் தலைமைகளும் அரசை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை என்பது போல நடந்து கொள்கின்றன.

ஆனால் தமிழர்கள் தமது நம்பிக்கையைப் படிப்படியாக இழந்து வருவதைக் காணமுடிகின்றது. தமது தலைமை மீதும் அவர்கள் வெறுப்புக் கொள்ள ஆரம்பித்துவிட்டனர்.

தற்போதைய அரசின் மீது சிறுபான்மை மக்கள் மட்டுமன்றி, பெரும்பான்மையினரும் அதிருப்தி கொள்ள ஆரம்பித்துவிட்டனர். ஆனால் இதற்கான காரணங்கள் வெவ்வேறானவை. எமக்குரிய உரிமைகளைக் கொடுங்கள் என்பது சிறுபான்மையினரின் கோரிக்கை. ஆனால் அவர்களுக்கு எதுவுமே கொடுக்கக் கூடாது என்பதில் பெரும்பான்மையினர் பிடிவாதமாக உள்ளனர்.

அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய காலகட்டம் இதுவே. இதைத் தவறவிட்டால் எல்லாமே தவறிப் போய்விடும்.

# உரிய நீதி கிட்டிடாத குமாரபுரம் படுகொலைகள்!

மு.ஈழத்தமிழ்மணி

திருகோணமலை நகரிலிருந்து சுமார் 110 கிலோ மீற்றர் தூரத்தில், மூதூர் தொகுதியில் இருக்கின்ற அழகிய விவசாயக் கிராமமொன்றான கிளிவெட்டி யிலுள்ள குமாரபுரத்தில், தமிழர் படுகொலை நிகழ்ந்து 21 ஆண்டுகள் இன்றுடன் நிறைவடைகின்றன. 11.02.1996 அன்று குமாரபுரம் குக்கிராமம் மீது இலங்கை இராணுவத்தினர் நடத்திய கொலை வெறியாட்டத்தில் அவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் குழந்தைகள், பெண்கள் உட்பட 26 பேர் கொல்லப்பட்டனர். மேலும் 40 பேர் படுகாயமடைந்தனர்.

திருகோணமலை மாவட்டத் தமிழ் மக்களைப் பேரதிர்ச்சியில் உறைய வைத்த இந்தப் படுகொலை, 11.02.1996 அன்று பிற்பகல் வேளையில் கிளி வெட்டி-மட்டக்களப்பு வீதியில் இடம் பெற்றிருந்தது. அந்த வேளைய ஜனாதிபதியான சந்திரிகா குமாரணதுங்காவின் ஆட்சி யின் போது திருகோணமலை மாவட் டத்தில் உள்ள பல தமிழ்க்கிராமங்களில் வாழ்ந்துவந்த மக்களில் பலர் படுகொலைசெய்யப்பட்டிருந்தனர். இராணுவத்தினரின் அராஜக நடவடிக்கைகள் மோசமாகக் காணப்பட்டன.

### 21 ஆண்டுகளுக்கு முன்னர் நிகழ்த்தப்பட்ட படுபாதகச் செயல்

21 வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற அந்தப் படுகொலைகளுக்கான உரிய நீதி கிட்டும் என்ற நம்பிக்கை கடந்த வருடம் பொய்த்துப் போனது. இராணுவத்தினரைத்தவிர வேறு எவர் இந்தப் படுகொலைகளைச் செய்தனர் என்ற பெரும் கேள்வியோடு குறித்த படுகொலைகளது 21ஆவது ஆண்டு நினைவு நாள் கிளிவெட்டிக் கிராமத்தில் இன்று நினைவு கூரப்படுகின்றது.

11.02.1996 அன்று பகல் வேளையில் கிளிவெட்டிக்கும் தெஹிவத்த சிங்களக் கிராமத்துக்கும் மத்தியில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளது தாக்குதலின் போது ரோந்து சென்ற படையினரில் சிலர் கொல்லப்பட்டதுடன் .சிலர் படுகாயமடைந்தனர். அதனையடுத்துத் தெஹிவத்த இராணுவமுகாமிலிருந்த இராணுவத்தினர் பலர் ஆவேசம்கொண்டு கொலை வெறித்தனத்தோடு கிளிவெட்டிக் கிராமம் நோக்கி ச் சென்றனர்.

கிளிவெட்டியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் சகலரும் இராணுவத்தினரால் தங்களுக்கு இன்னல்கள் ஏற்படுமோ என்ற பயப்பீதி காரணமாக ஓடிஒளிந்து விட்டனர்.

அன்றையதினம் பிற்பகலில் ஏராளமான படையினர் குமாரபுரம் குக்கிராமத்துக்குள் நுழைந்தனர். கிளிவெட்டிப் பாலத்திற்கருகிலும் நிலைகொண்ட இராணுவத்தினர் வீதியால் போவோர் வருவோர் மீது மூர்க்கத்தனமான தாக்குதல்களை ஆரம்பித்திருந்தனர்.

படையினர் அந்தக் கிராமத்து மக்கள் மீது சுமார் ஒரு மணிநேரம் பயங்கரமாகத் தாக்குதல்களை நடத்திக் கொண்டிருந்தனர். அந்தக் கிராமத்தில் சுற்றுப்புறம் நிசப்தத்தில் ஆழ்ந்திருந்தது. அந்தப்பகுதியில் என்ன நடைபெறுகிறது என்று தெரியாமல் மக்கள் அச்சத்தில் ஆழ்ந்திருந்தனர். மாலை இருள் கவ்வத் தொடங்கியிருந்தது. எவருமே அந்தப்பகுதிக்குள் செல்ல முடியாத விதத்தில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுக்குள் கிளிவெட்டிக் கிராமம் கொண்டு வரப்பட்டிருந்தது.

குமாரபுரத்தில் இராணுவத்தினர் நடத்திய கொலை வெறியாட்டத்தில் 26 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். காயமடைந்த அனைவரும் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர். கிளிவெட்டி மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவியான அ.தனலக்சுமி என்பவர் இராணுவத்தினரால் பலவந்தமாக இழுத்துச் செல்லப்பட்டு அருகிலிருந்த பாற்பண்ணைக்கட்டடத்துக்குள் வைத்துப் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டு சுட்டுக் படுகொலை செய்யப்பட்டதாகவும் முறையிடப்பட்டிருந்தது.

குறித்த சம்பவங்களையடுத்து அப்போதிருந்த திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான அ.தங்கத்துரை, அடுத்தநாள் 12ஆம் திகதி காலை நேரடியாக அந்தப் பகுதிகளுக்குச் சென்று நிலமையை அவதானித்ததுடன் அவரது உதவியோடு காயப்பட்டவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். சாவடைந்தவர் களது உடலங்களும் பொறுப்பேற் கப்பட்டு மூதூர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

சம்பவத்தையடுத்து கிளிவெட்டி குமாரபுரம் சோகத்திலும் அதிர்ச்சியிலும் ஆழ்ந்திருந்தது. இந்தப் படுகொலைகள் யாவும் மதுபோதையிலிருந்த இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இராணுவத்தினர் பலர் கைது செய்யப்பட்டனர். இதனடிப் படையில் 8 இராணுவத்தினர் மீது மூதூர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. நேரில் கண்கண்ட சாட்சிகள் மறைமுகமாக அச்சுறுத்தப்பட்டனர்.

### நீண்டகாலம் இழுத்தடிக்கப்பட்ட நீதி விசாரணை

இந்தப் படுகொலைகள் சம்பந்தமான வழக்கு நீண்ட காலம் இழுத்தடிக்கப்பட்டது. படுகொலை செய்யப்பட்ட 24 பேரின் குடும்பங்களுக்கும் நீதி கிடைக்கவில்லை. காயமடைந்தவர்களில் பலர் அதன் வடுக்களையும், பாதிப்புக்களையும் சுமந்து கொண்டுதான் இன்றுவரை வாழ்ந்து வருகின்றனர்.

சந்திரிகா அம்மையார் ஆட்சியின் போது இந்தப் படுகொலைகள் சம்பந்தமாக விசாரணைகளை நடத்தி தீர்ப்பை வழங்கியிருக்க வேண்டும். அவரது ஆட்சியின்போதும், பின்னர் மகிந்த ஆட்சிக்காலத்திலும் குமாரபுரம் படுகொலைகள் சம்பந்தமான வழக்குத் தொடர்பாக எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

1996 ஆம் ஆண்டு மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையில் எட்டு இராணுவத்தினருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதே ஆண்டு மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற இந்த வழக்கு விசாரணையில், இரு இராணுவத்தினர் ஏற்கனவே உயிரிழந்துவிட்ட நிலையில் ஏனைய சந்தேக நபர்களாக ஆறு இராணுவத்தினர் சாட்சிகளினால் அடையாளம் காணப்பட்ட நிலையில் திருகோணமலை மேல் நீதி மன்றத்துக்கு வழக்கு பாரப்படுத்தப்பட்டது.

அன்றைய போர்க்கால சூழ்நிலையைக் காரணம் காட்டி எதிரிகளின் வேண்டுகோளின்படி பாதுகாப்புக் கருதி சட்டமா அதிபரின் ஆலோசனையின்படி குறித்த வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டிருந்தது. நீண்ட காலத்துக்குப் பின்னர் கடந்த ஆண்டு ஜுன்மாதம் குமாரபுரம் படுகொலை வழக்கு விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.


குற்றம் சாட்டப்பட்ட இராணுவத்தினரை நேரில் கண்ட சாட்சிகள் பலரும் அடையாளம் காட்டியிருந்த நிலையில், ஒருமாத காலத்துக்கு மேலாக வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்தன. 107 சாட்சிகளில் பலர் ஏற்கனவே இறந்துவிட்டிருந்தனர். வேறுபலர் வயோதிபம் காரணமாக விசாரணைகளுக்குச் சமுகமளிக்கவில்லை. இருப்பினும் ஏனையவர்களில் பலர் இராணுவத்தினரின் படுகொலைகளுக்கு எதிராக சாட்சியமளிக்க சென்றிருந்தனர்.

வழக்கு விசாரணையின்போது, இந்தப் படுகொலைகளை ஆறு இராணுவத்தினரும் செய்துள்ளமை சாட்சியங்களிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக தனது வாதத்தின்போது கூறிய அரசதரப்பு சிரேஷ்ட சட்டத்தரணியாக சுதர்சன டி சில்வா இந்த 6 இராணுவத்தினருக்கும் சாவுத்தண்டனை வழங்கப்பட வேண்டுமென நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டார்.

6 இராணுவத்தினருக்கும் சாவுத் தண்டனை வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில், அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் 6இராணுவத்தினரும் விடுவிக்கப்பட்டனர். அநுராதபுரமேல் நீதிமன்றத்தில் நீதிபதி மஞ்சுள திலகரட்ண தலைமையில், ஏழுபேர் கொண்ட ஜுரிகள் சபை முன் னிலையில் நடைபெற்ற விசாரணையின் முடிவிலேயே அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

20 ஆண்டுகளுக்குப் பின்னர் குமாரபுரம் படுகொலை வழக்கு முடிவுக்கு வந்திருந்தாலும், படுகொலை செய்யப்பட்டோரது உறவுகளுக்குரிய நீதி கிடைக்கவில்லை. மன உளைச்சலும் ஏமாற்றமும் மட்டுமே அவர்களுக்கு மிஞ்சியது. குற்றம் சாட்டப்பட்ட படையினரை நேரில் கண்ட சாட்சிகள் பலரும் அடையாளம் காட்டியிருந்தனர். ஆனாலும் சாட்சியங்களில் குழப்பங்கள் இருப்பதாகக் கூறி 6 இராணுவத்தினரும் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

20 ஆண்டுகளாக இழுத்தடிக்கப்பட்ட வழக்கில் சந்தேக நபர்களை எத்தனை பேரால் அடையாளம் காணமுடியும்? நடந்ததை எப்படிச் சரியாக நினைவில் வைத்துக் கொள்ள முடியும்? பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி வழங் கப்படாத நிலையில், குற்றவாளி கள் யார்? என்ற கேள்விக்கு இனிமேலும் விடை தேடுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட போதிலும், உண்மையான நீதி நிலைநாட்டப்பட்டதாகக்கொள்ள முடியவில்லை. குமாரபுரம் படுகொலைகளை வெறுமனே வருடாவருடம் நினைவு கூரவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஒன்றுதான் தமிழ் மக்களுக்கு எஞ்சியுள்ளது.



## வாசகர் திருமுகம்

### ஆசிரியர்களின் சம்பள நிலுவைகள் வழங்கப்படுமா?

இன்று பல்வேறு அழுத்தங்களின் மத்தியில் ஆசிரியர்கள் தமது கடமையைச் செய்து கொண்டிருக்கின்றனர் என்பதைக் கல்வி உலகம் நன்கு அறியும்.

அதிலும், குறிப்பாக வடமாகாண கல்வித்துறையில் ஆசிரியர்களின் நிதிக் கொடுப்பனவு விடயங்களில் மாற்றாந் தாய் மனப்பான்மையே நீண்ட காலமாக நிலவி வருகின்றது.

யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு கடந்த ஏழு வருடங்களுக்குரிய சம்பள நிலுவைகள் இதுவரை வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக விசாரித்தறிவதற்குக் கல்வி அலுவலகத்துக்குச் செல்லும் ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட அலுவலகத்தின் நிதிக் கொடுப்பனவுகளுக்குப் பொறுப்பான உயர் அதிகாரியின் "சீறிச் சினத்தலே" நிவாரணமாகக் கிடைக்கின்றது.

அதாவது, வீட்டு முற்றத்தில் நின்று பிச்சை கேட்கும் பிச்சைக்காரர்களுக்கு சில சமயம் கிடைக்கும் மரியாதையே அப்பாவி ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகின்றது.

உதாரணமாக, இறுதியாக நடைபெற்ற பொதுத்தேர்தலின்போது ஆசிரியர்களும் ஏனைய அலுவலர்களும் தேர்தல் கடமையில் ஏககாலத்தில் ஈடுபட்ட போதிலும், யாழ். கல்விவலய உத்தியோகத்தர்களுக்கு தேர்தல் கடமைக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு, ஏறக்குறைய மூன்று மாதங்களின் பின்பே யாழ். கல்வி வலய ஆசிரியர்களுக்குரிய தேர்தல் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

இந்த நீண்ட காலதாமதத்துக்குப் பிரதான காரணம் என்ன? பொறுப்பான அதிகாரிகள் பதில் தருவார்களா? அத்துடன் இங்கு பெயரளவில் இயங்கிக்கொண்டிருக்கும் சில ஆசிரியர் தொழிற்சங்கங்களும் 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்ற நிலையில் மகா நடிகர்களாக சிந்து நடைக்கூத்தை மிகவும் சிறப்பான முறையில் மேடையேற்றிக் கொண்டிருக்கின்றனர்.

எனவே ஏழு வருட தாமதத்தின் பின்பாவது, ஆசிரியர்கள் தமது சம்பள நிலுவையைப் பெறுவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள பொறுப்பானவர்கள் அக்கறை காட்டுவார்களா?

*பாதிக்கப்பட்ட ஆசிரியர்*

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## தமிழில் வெளியாகும்
# லோகன்

எக்ஸ்மேன் சீரிஸுக்கு உலகம் முழுவதும் ரசிகர்கள் இருக்கிறார்கள். தமிழிலும் வால்வரைன் என்ற ஓநாய் மனிதனுக்கு ரசிகர்கள் அதிகம். எக்ஸ்மேன் சீரிஸின் புதிய படம் லோகன். வால்வரைனாக நடிக்கும் ஹ்யூக் ஜாக்மேன் நாயகன். இந்தப் படத்தின் முன்னோட்டத்தை தமிழில் வெளியிட்டிருக்கிறார்கள்.

சமீபமாக ஆங்கிலப்படங்கள் தமிழகத்தில் அதிகம் வசூலிக்கின்றன. படங்களைத் தமிழில் வெளியிடும் போது வசூல் இருமடங்காகிறது. அதனால் லோகனையும் தமிழில் மொழிமாற்றம் செய்து வெளியிடப்போவதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



செவ்வாய் கிரகத்தில் நின்றால் கூட சின்னம்மா ஜெயிப்பார்




அந்த விசக் கிருமியை செவ்வாய் கிரகத்துக்கே அனுப்பிடுங்க



சசிகலாவுக்கு பெங்களூரு சிறையைத் தயார்படுத்த மத்திய அரசு ரகசிய உத்தரவு?



சசிகலா திரும்ப ஜெயிலுக்கு போச்சுன்னா நாம எல்லாரும் வீதிக்கு வந்து வெடி கொளுத்தி அந்த நாளை தீபாவளி மாதிரி கொண்டாடனும்... தயாரா மக்களே!

என்னை விமர்சியுங்கள்... முழு சுதந்திரம் உங்களுக்கு உள்ளது.
மோடி



நேரம் இல்ல...
தமிழக முதல்வர் பிரச்சினையில் மும்முரமாக இருக்கிறம். அப்புறம் பார்க்கலாம்...

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 3 | | 5 | | | |
| | 5 | 2 | | 7 | | 4 | 3 | |
| 7 | | | | | | | | 1 |
| | | 6 | 4 | | 7 | 9 | | |
| | | | 9 | | 3 | | | |
| | | 4 | 8 | | 1 | 7 | | |
| 4 | | | | | | | | 2 |
| | 8 | 3 | | 1 | | 6 | 9 | |
| | | | 5 | | 8 | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 4 | 5 | 6 | 7 | 9 | 3 | 1 |
| 6 | 7 | 1 | 9 | 3 | 8 | 4 | 5 | 2 |
| 5 | 9 | 3 | 4 | 1 | 2 | 6 | 8 | 7 |
| 2 | 6 | 9 | 7 | 8 | 5 | 3 | 1 | 4 |
| 4 | 1 | 8 | 2 | 9 | 3 | 7 | 6 | 5 |
| 7 | 3 | 5 | 1 | 4 | 6 | 8 | 2 | 9 |
| 9 | 5 | 6 | 3 | 2 | 4 | 1 | 7 | 8 |
| 1 | 8 | 7 | 6 | 5 | 9 | 2 | 4 | 3 |
| 3 | 4 | 2 | 8 | 7 | 1 | 5 | 9 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண் டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: விதுரா



**மேடம்:** குடும்ப விடயத்தைப் பிறரிடம் பேசவேண்டாம். நம்பிக்கையுடன் செயற்படுவது நன்மையளிக்கும். தொழில், வியாபாரத்தில் ஓரளவு லாபம் கிடைக்கும். உடல்நலன் சீராக இருக்கும். பிள்ளைகளின் செயற்பாடு நிம்மதிக்கு வழிவகுக்கும்.

**இடபம்:** பிறருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள வருமானம் கிடைக்கும். பெண்கள் கலையம்சம் மிக்க பொருள் வாங்குவர். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தவும்.

**மிதுனம்:** நண்பரின் கருத்தை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மூலதனம் அதிகம் தேவைப்படும். பெண்கள் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தவும்.

**கடகம்:** நண்பரின் அன்பைக் கண்டு மனம் நெகிழ்வீர்கள். எதிர்பார்ப்பு எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வளர்ச்சி உண்டாகும். தாராள வருமானம் கிடைக்கும். பெண்கள் தேவையான பொருள்கள் வாங்குவர்.

**சிங்கம்:** எதிலும் நிதானத்தைப் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற கூடுதல் பணிபுரிவீர்கள். பணவரவு சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்கக் கூடாது.

**கன்னி:** கடந்த நாள்களில் இருந்த சிரமம் விலகும். செயல்களில் உத்திவேகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி இனிதே நிறைவேறும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**துலாம்:** உங்களின் தகுதி, திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப் பணி நிறைவேறும். தாராள அளவில் பணவரவு கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள்.

**விருச்சிகம்:** கௌரவத்துக்காக பணம் செலவழிக்க நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளைச் சரி செய்வது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**தனுசு:** சிலர் உங்களிடம் சுயநல எண்ணத்துடன் அணுகுவர். தொழில், வியாபாரத்தில் இலக்கை அடைய விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் மிதவேகம் நல்லது.

**மகரம்:** பெற்றோரின் அன்பும் ஆசியும் கிடைக்கும். சிறு செயலையும் நேர்த்தியுடன் செய்து முடிப்பீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக் கும். பெண்கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் பங்கேற்பர்.

**கும்பம்:** சமூகப் பணி புரிவதில் ஆர்வம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். நிலுவைப் பணம் வசூலாகும். குடும்பத்தினரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:** நேர்மை எண்ணம் மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் கடந்த கால உழைப்பின் பயன் உண்டாகும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.






மனைவி: என்னங்க இது., ஒருவாரமா தினமும் ஒரு கலண்டர் வாங்கிட்டு வர்றீங்க..?
கணவன்: (கோபமாக) நீதானடி 'டெய்லி கலண்டர்' வாங்கிட்டு வாங்கன்னு சொன்னாய்..!

# 2017 பெப்ரவரி மாத பலன்



## சிம்மம்

துணிச்சலாக எதையும் செய்து வெற்றி பெறும் சிம்ம ராசியினரே! இந்தக் காலகட்டத்தில் ராசிநாதனான சூரியன் ராசிக்கு ஆறாமிடத்தில் மறைந்திருந்தாலும், ராசியில் சஞ்சாரம் செய்யும் ராகுவால் வீண் அலைச்சல் காரியத் தடை ஆகியவை அகலும். ராசிக்கு எட்டில் சஞ்சாரம் செய்யும் சுக்கிரனால் தடை நீங்கி காரியங்கள் நடந்து முடியும். அலைச்சல் ஏற்பட்டாலும் எடுத்த முயற்சி கைகூடும். தேவையான வசதிகள் உண்டாகும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். உடற் சோர்வும், மனக் குழப்பமும் நீங்கும். செலவு கட்டுக்குள் இருக்கும். தொழில் ஸ்தானாதிபதி சுக்கிரன் ராசிக்கு அஷ்டம ஸ்தானத்தில் மறைந்திருந்தாலும் அவரின் உச்ச நிலையால் தொழில், வியாபாரம் எதிர்பார்த்தபடி நடக்கும்.

கூட்டுத் தொழிலில் இருப்பவர்கள் கவனமாக எதையும் செய்வது நன்மையைத் தரும். தேவையான பண உதவியும் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படலாம். முடிவில் எதிர்பார்த்தபடி காரியம் முடியும். சக ஊழியர்களின் ஆதரவும் இருக்கும். குடும்பாதிபதி புதனின் சஞ்சாரத்தின் மூலம் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கணவன், மனைவி இருவரும் மனம் விட்டுப் பேசுவது நல்லது. குடும்ப விடயங்களை அடுத்தவரிடம் கூறி ஆலோசனை கேட்பதைத் தவிர்ப்பது நன்மை தரும். குழந்தைகள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். உறவினர், நண்பர்களிடம் கவனமாகப் பேசிப் பழகுவது நல்லது. பெண்களுக்கு உடற் சோர்வும் திடீர்க் கவலைகளும் ஏற்பட்டு நீங்கும். பணவரத்து திருப்தி தரும். மதிப்பும், மரியாதையும் கூடும்.

கலைத்துறையினருக்கு - வாகனங்களை உபயோகப்படுத்தும்போது கவனம் தேவை. பிரச்சினைகள் மற்றும் விவகாரங்களில் தீர ஆலோசனைகளைச் செய்து பக்குவமான அணுகுமுறையைக் கையாள்வது அவசியம். பணவரத்து அதிகரிக்கும். காரியத் தடங்கல்கள் ஏற்படலாம். மனதில் ஏதாவது ஒரு கவலை உண்டாகும். அர சியல் துறையினருக்கு காரிய அனுகூலம் ஏற்படும். நண்பர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கக் கூடும். புதிய நபர்களின் நட்புக் கிடைக்கும். கவனமாகச் செயல்படுவது நல்லது. மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வீர்கள். சக மாணவர்களின் ஆதரவும் இருக்கும்.

**பரிகாரம்:**
பிரதோச காலத்தில் சிவனை வணங்குவதன் மூலம் எல்லா நன்மைகளும் உண்டாகும். தடைகள் நீங்கும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
ஞாயிறு, செவ்வாய்.

## வரலாற்றில் இன்றைய தினம்

660 கி.மு., பேரரசர் ஜிம்முவால் ஜப்பான் உருவாக்கப்பட்ட மரபுநாள்.

1534 - எட்டாம் ஹென்றி, இங்கிலாந்து திருச்சபையின் தலைவராக அங்கீகரிக்கப்பட்டார்.

1790 - குவாக்கர்ஸ் என அறியப்பட்ட சமய சமூக நண்பர்கள் அமைப்பு அமெரிக்கக் காங்கிரஸிடம் அடிமைத்தனத்தை ஒழிக்க மனுச் செய்தது.

1826 லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரி, லண்டன் பல்கலைக்கழகமானது

1971- அமெரிக்கா, ஐக்கிய ராச்சியம், சோவியத் யூனியன் உள்ளிட்ட 87 நாடுகள் பன்னாட்டு நீர் நிலைகளில் அணு ஆயுதங்களைச் சட்டபூர்வ மற்றதாக்கும் கடற்படுக்கை ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1990 - இருபத்தேழு ஆண்டுகள் அரசியற் கைதியாக தென்ஆபிரிக்க கேப் ரவுணுக்கு வெளியே விக்டர் வெஸ்ரெர் சிறைச்சாலையிலிருந்த நெல்சன் மண்டேலா விடுவிக்கப்பட்டார்.

2011 - எகிப்துப் புரட்சி முதல் அலையின் பதினெட்டு நாள்கள் ஆர்ப்பாட்டத்தின் பின்னர், யஹாஸ்னி முபாரக் பதவி விலகச் செய்ய அதிகாரங்கள் சுப்பிரீம் இராணுவ சபையிடம் கைமாறியது.

2015 - துருக்கியில் தன் மீதான வல்லுறவை எதிர்த்து நின்ற பல்கலைக்கழக மாணவி கொலை செய்யப்பட்டதை அடுத்து நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தது.

2016 - சவூதி அரேபியா ஜிசான் மாகாணத்தில் நபர் ஒருவரால் கல்வி நிலையமொன்றில் வைத்து 6பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

2014- தமிழர் முன்னேற மூன்றாம் தரப்பு வேண்டும் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐ.நா உதவிச் செயலரைச் சந்தித்தபின் கருத்துரைத்தார்.

2014 - இராணுவப் பிரசன்னத்தால் வடக்குப் பெண்கள் பாதிப்பு என அமெரிக்க அதிகாரிக்குப் பெண்கள் அமைப்பு தெரிவிப்பு.

2014 - காணாமற்போனோரின் உறவினர் அச்சத்தில். காணாமற்போனோர் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை கிளிநொச்சியில் முன்னெடுக்கப்படும் நிலையில் உறவினர்கள் ரிஜடியால் விசாரணை,

2014 - காணாமற் போனோர் விசாரணை நம்பிக்கைக்குரியவையாக அமையவில்லையென சிவில் அமைப்புக்கள் குற்றச்சாட்டு, ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவருக்கும் மனு.

2014 - வடக்கு அபிவிருத்திக்கு ஐ.நா.முழுமையாக ஒத்துழைக்கும் என முதலமைச்சரிடம் ஐ.நா உதவிச் செயலாளர் உறுதி.

2014 - டிலுகுறுப்பைச் சேர்ந்த மேலும் நாலுபேர் கைது


2014– புருண்டியில் பரிதாபம்; நிலச்சரிவில் சிக்கி 60 பேர் சாவு

2014 - பாக். முன்னாள் ஜனாதிபதி முஷாரப் மீதான தேசத்துரோக வழக்கு மீண்டும் விசாரணைக்கு

2014 - கிழக்குக்கு 8ஆயிரம் வீடுகள் தேவை என மீள் குடியேற்றப் பிரதியமைச்சர் தெரிவிப்பு.

## நாளை தை-30

ஞாயிற்றுக்கிழமை -12.02.2017
திதி: துதியை பி.இ.06.13
நட்சத்திரம்: மகம் மு.ப.09.55
சுபநேரம்:09.34-11.04 வரை
ராகுகாலம்:05.04-06.34 வரை





## காதலர் பரிசுகள்

காதலர் தினத்தை முன்னிட்டு காதல் மக்குகள் அறிமுகமாகியுள்ளன. காதலுக்குரிய வடிவங்கள் பொறிக்கப்பட்ட இவை 450 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## முருங்கைப் பூ சூப்



**செய்முறை :**
தக்காளியைப் பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
துவரம் பருப்பைச் சிறிதளவு நீரில் கரைத்துக் கொள்ளவும்.
மிளகைச் சொரசொரப்பாக பொடித்துக் கொள்ளவும்.
புளியைச் சிறிதளவு நீரில் கரைத்துக் கொள்ளவும்.
ஒரு பாத்திரத்தில் கரைத்த புளிக் கரைசல், முருங்கைப் பூ, தக்காளி, ரசப்பொடி கலந்து நன்கு அடுப்பில் வைத்துக் கொதிக்க வையுங்கள்.
அடுத்து அதில் பருப்புக் கரைசல், உப்புச் சேர்த்து 5 நிமிடங்கள் கொதிக்க வைக்கவும்.
சட்டியை அடுப்பில் வைத்துச் சூடானதும், தாளிக்க வேண்டிய பொருள்களையும் சேர்த்துத் தாளித்து சூப்பில் சேருங்கள்.
மிக ருசியான முருங்கைப் பூச் சூப் தயார். சளி, இருமலுக்குச் சுவையான மருந்து இது.



முருங்கைப் பூவை உணவில் அடிக்கடி பெண்கள் சேர்த்து கொள்வது நல்லது.

**தேவையான பொருள்கள்**
முருங்கைப் பூ - 2 கைப்பிடி
புளி – சிறிய எலுமிச்சைப் பழ அளவு
தக்காளி – 1
ரசப்பொடி - 2 தேக்கரண்டி
வேகவைத்த துவரம் பருப்பு - 2 தேக்கரண்டி
உப்பு - சுவைக்கு

**தாளிக்க :**
மிளகு - 1 தேக்கரண்டி
சீரகம் - அரைத் தேக்கரண்டி
நெய் - 1 தேக்கரண்டி

## மரண அறிவித்தல்கள்

### செபஸ்ரின் அகுஸ்ரீன்



2 ஆம் வட்டாரம், சரவணை மேற்கு, வேலணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரின் அகுஸ்ரீன் நேற்று (10.02.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் அ. யஸ்தீன் (ஆசிரியர், யா/வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்) அவர்களின் பாசமிகு தந்தை ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2017) சனிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாரந்தனை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2 ஆம் வட்டாரம்,**
**சரவணை மேற்கு, வேலணை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

### திருமதி விஜயலட்சுமி நடராசா



மாதகலைப் பிறப்பிடமாகவும் உடையார் வீதி, அராலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி நடராசா 10.02.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜாவின் (ஓய்வுபெற்ற முகாமையாளர், இலங்கைவங்கி) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம்-ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் ஜெயகாந்தனின் (மாநகரசபை, யாழ்ப்பாணம்) பாசமிகு தாயாரும் தில்லைக்கண்ணனின் அன்புச் சிறிய தாயாரும் தர்சினியின் அன்பு மாமியாரும் விசாலி, ஜிவானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் கந்தராசா (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், தம்பிராசா, இரத்தினசிங்கம், சிவபாக்கியம், இராசமணி மற்றும் அன்னலட்சுமி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2017) சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி, பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**திரு.திருமதி. ஜெயகாந்தன்**
**(மகன்,மருமகள்) 021 790 1794**
**வீ. கந்தராசா**
**(சகோதரன்) 077 448 5906**

**உடையார் வீதி,**
**அராலி தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**

### திருமதி
### சுகிர்தா அழகரட்ணம்



குப்பிழானைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுகிர்தா அழகரட்ணம் 09.02.2017 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-அன்னபூரணம் மற்றும் ஆனந்தம் ஆகியோரின் அன்புமகளும் அழகரட்ணம் (லோகீஸ் ஐஸ்கிறீம்-உரிமையாளர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் (மாத்தளை), அன்ன பூரணம் (மாத்தளை) ஆகியோரின் அன்பு மருமகளும் தேனகா(G.S.M.B), சுஜீபன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சியாமளா(ஆசிரியை-யாழ். பெனடிக்ற் வித்தி யாலயம்) காலஞ்சென்ற சிறிபதி(UK), லதா, தயாளன் (UK), யசோ (UK), லோகன்(இத்தாலி)ஆகியோரின் அன்புச் சகோதரியும் ராணி (UK), இராமச்சந்திரன், ரவீந்திரன் (பகுதித்தலைவர் யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரி), கவிதா(UK), சிவானந்தன்(UK), வத்சலா, மோகனசுந்தரம், மோகன சுந்தரி, லோகேஸ்வரி, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனியும் நிஷா, ராகுலன், தேஜஸ், பிரகா, லோகிஸ், யுகா, மிருதுளா, மிருனன், சாருகா, திலீபன், நிஷா, திவ்வியா ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் தனுஷா, கிரிசன், நிரோஷன், நிதீஸ், கார்த்திகா, விஸ்ணுகா, சப்திகா, காந்தன், உதயகாந், விஜயசாந்தி, கிருபாணி, டிலுசன், சரவின், அரிகரன், பிரபாஷினி, தேவபிரசாந், கோகிலப்பிரசாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 583 2453**

**15/3, புது வீதி,**
**கொய்யாத்தோட்டம்.**

# சட்ட சபையில் வாக்கெடுப்பு

சென்னை, பெப். 11

தமிழகத்தில் தற்போது அரசமைப்பு ரீதியான வெற்றிடம் ஏற்பட்டிருக்கின்றது. உடனடியாகச் சட்டசபையில் வாக்கெடுப்பு நடத்தி புதிய அரசை அமைப்பதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக ஆளுநரைச் சந்தித்து தி.மு.க. செயல் தலைவர் மு.க. ஸ்டாலின், வலியுறுத்தியிருக்கிறார்.

தமிழக ஆளுநர் மாளிகையில் நேற்று மாலை ஆளுநர் வித்யாசாகர் ராவைச் சந்தித்த மு.க. ஸ்டாலின் அவரிடம் மனு ஒன்றை அளித்தார்.

அந்த மனுவில், மறைந்த முதல்வர் ஜெயலலிதா உடல்நலம் குன்றிய பிறகு தமிழகத்தில் ஏற்பட்ட நிலையற்ற தன்மையிலிருந்து இன்னும் விடுபடவில்லை எனக் கூறியிருக்கிறார்.

ஆளும் கட்சியினரின் நிலையற்ற தன்மையால் மாநிலத்தில் நிர்வாகம் சீர்குலைந்து போயிருப்பதாகவும் தற்போது மாநிலத்தில் அரசமைப்பு ரீதியாக வெற்றிடம் ஏற்பட்டிருப்பதாகவும் தி.மு.க. தெரிவித்துள்ளது. (வ)

# அ.தி.மு.கவில் இருந்து மதுசூதனன் நீக்கம்

சென்னை, பெப். 11

அ.தி.மு. கழகத்தின் அவைத் தலைவர் பொறுப்பு உட்பட



அடிப்படை உறுப்பினர் அந்தஸ்தில் இருந்தும் மதுசூதனை நீக்கினார் பொதுச் செயலாளர் சசிகலா.

கடந்த செல்வாய்க்கிழமை இரவு அ.தி.மு. கழகத்தின் தலைமைக்கு எதிராக பல விமர்னங்களை முன்வைத்தார் ஓ.பன்னீர்செல்வம். தான், வற்புறுத்தலின் அடிப்படையிலேயே பதவி விலகினார் என்றும் அவர் குறிப்பிட்டார். இதனையடுத்து கட்சியின் பொருளாளர் பதவியில் இருந்து அவர் நீக்கப்பட்டார். சசிகலா ஓ.பி.எஸ். இடையே தற்போது பெரும் வார்த்தை மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் எவருக்கு தமது ஆதரவு என்று தெரிவித்துவரும் நிலையில் அவைத்தலைவர் மதுசூதனன் ஓ.பி.எஸ்ஸுக்கு நேற்றுமுன்தினம் தனது ஆதரவைத் தெரிவித்தார். இதனை அடுத்தே இந்தப் பதவிநீக்கம் அமைந்தது.

இதற்குக் கருத்துத் தெரிவித்த மதுசூதனன், என்னை நீக்கும் அதிகாரம் எவருக்கும் இல்லை. சசிகலா பொதுச் செயலாளர் அல்ல. அவரைப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நான் ஏற்கனவே நீக்கிவிட்டேன் என்று தெரிவித்தார். (ம)

## பன்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்கள் 3 பேருக்கும் கடந்த ஒரு வாரகாலமாக சிகிச்சை வழங்கப்படுகிறது.

சிறுவர்களின் நோய்த் தொற்றுத் தொடர்பான மேலதிக பரிசோதனைக்கு அவர்களின் குருதி மாதிரிகள் மருத்துவ ஆய்வு நிலையத்துக்கு (எம்.ஆர்.ஐ) அனுப்பிவைக்கப் பட்டன.

ஆய்வு நிலையத்தால் நேற்று அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் 3 சிறார்களும் எச்1என்1 வைரஸ் தொற்றுக்கு உள்ளா கியுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அவர்கள் தனியான பிரிவில் வைத்துச் சிகிச்சை அளிக் கப்பட்டு வருகின்றனர்.

இந்த நோய் காற்று மூலமாகப் பரவும் வாய்ப்பு உள்ளதனால் தனியான பிரிவில் வைத்துச் சிகிச்சை வழங்கப்பட வேண்டும். ஏனையவர்களைவிட கர்ப்பிணிகள் மற்றும் சிறார்களுக்கு இந்தத் தொற்று ஏற்பட்டால் சிறப்புக் கவனம் செலுத் திச் சிகிச்சை வழங்க வேண்டும் என்றும் சுகா தாரத் துறையினர் தெரிவித்தனர்.

'வெள்ளம் வரும்முன் அணைக்கட்ட வேண்டும்' என்பதுபோல இந்த நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாகச் சிகிச்சை பெறவேண்டும்.

காலத்துக் காலம் இவ்வாறான வைரஸ் காய்ச்சல் பரவுவதுண்டு. சிலவேளைகளில் தாக்கு திறன் கூடிய வைரஸ் வகைகள் தொற்றும் போது கடுமையான விளைவுகள் மனிதருக்கு ஏற்படும்.

இது கர்ப்பிணித் தாய்மார், குழந்தை பிரசவித்து சில நாள்களான தாய்மார், இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், 65 வயதுக்கு மேற் பட்ட முதியோர், முட்டுவருத்தம், சலரோகம் உள் ளவர்கள் ஆகியோரை தாக்கும் திறன் அதிகம்.

இந்த நோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்து உரிய நேரத்தில் உரிய சிகிச்சை வழங்கினால் தேவையற்ற தாய் - சேய் உயிரிழப்பைத் தடுக்கலாம்.

சளிக்காய்ச்சல், தடிமன், தொண்டைப் புண், தலையிடி, உடல் வலி என்பன காணப்படுவதோடு, நோயின் அபாய அறிகுறிகளாக அதி கூடிய காய்ச்சல், மூச்சுவிடமுடியாமை, நெஞ்சுநோ, மறதிக்குணம், நெஞ்சுப்படபடப்பு, வலிப்பு, வயிற்றோட்டம் ஆகியவை இருக்கும். இந்த அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அரச வைத்தியசாலையை நாடி உரிய சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சாதாரண வைரஸ் காய்ச்சலிலிருந்து எச்1என்1 வைரஸ் (பன்றிக்காய்ச்சல்) காய்ச்சலை வேறுபிரித்து அறிவது கடினம். தகுந்த ஆய்வுகூட மற்றும் நிபுணத்துவ சேவையும் சிறப்பு மருத்துவ நிபுணர்களது கண்காணிப்பும் இதற்குத் தேவை - என்றார்.

(வ-4-5-101-35)

## மரண அறிவித்தல்கள்

### குமாரசாமி சண்முகரட்ணம்

**(இளைப்பாறிய வருமான மேற்பார்வையாளர், வலிமேற்கு பிரதேச சபை)**




சங்கானையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சண்முகரட்ணம் நேற்று (10.02.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் - புஸ்பராணி (கோண்டாவில் மேற்கு) தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜேஸ்வரி (தேவி)யின் அன்புக்கணவரும் கோகுலன் (ஆசிரியர், சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), இராகுலன் (அர்ச்சனா டிஜிட்டல் பிறிண்டிங்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிரஞ்சலாவின் (கனடா) பாசமிகு மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாரதிவீதி, சங்கானை.**
**077 779 0856**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### ஏரம்பு முருகானந்தராசா



புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு முருகானந்தராசா (10.02.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு (இளைப்பாறிய அதிபர்) - மகேஸ்வரி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் ஜெகதீஸ் வரன், தியாகராசா, சண்முகானந்த ராசா, கணேசானந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஜெகதீஸ்வரி, யோகேஸ்வரி, இராஜேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் கொக்குவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**21/2, புகையிரத வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**
**021 221 2331, 077 857 2428**

**தகவல்:**
**ஏ.தியாகராசா**
**(இளைப்பாறிய ஆசிரியர், யாழ். மத்திய கல்லூரி )**

## தவறிவிட்டது

**த. பிரபாகரன்** என்பவரின் தே.அ.அட்டை (810253290V)சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கிளிகொச்சி-சங்குப்பிட்டி -கைதடி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0718724067, 078 2824067 இலங்கங்களில் ஒன்றுடன் தொடர்புகொண்டு ஒப்படைத்துதவவும்.

# தேர்தல் விரைவில்

சென்னை, பெப். 11
அ.தி.மு.க., பொதுச்செயலர் தேர்தல் மிக விரைவில் அறிவிக்கப்படும்' என்று அ.தி.மு.க. அவை தலைவர் மதுசூதனன் தெரிவித்தார். அ.தி.மு.க.வில் தற்காலிக பொதுச்செயலர் என்ற பதவி கிடையாது. பொதுச்செயலர் தொண்டர்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அ.தி.மு.க. பொதுச் செயலர் தேர்தல் திகதி மிக விரைவில் அறிவிக்கப்படும். தொண்டர்களே தயாராக இருங்கள்.

ஜெயலலிதாவின் சொத்துக்களைப் பராமரிக்க அ.தி.மு.க. சொத்து பாதுகாப்புக் குழு, கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களால் விரைவில் அமைக் கப்படும் என்று அவர் கூறினரர்.

*தேர்தல் ஆணையத்துக்குக் கடிதம்*

முதல்வர் பன்னீர் செல்வம், அவைத் தலைவர் மது சூதனன் ஆகியோர் தேர்தல் ஆணையத்துக்கு கடிதம் எழுதியுள் ளனர். அதில் பொதுச்செயலராக சசிகலா நியமிக்கப்பட்டது செல்லாது என அறிவிக்கக் கோரியுள்ளனர். (வ)










## மரண அறிவித்தல்

### திருமதி கனகம்மா ஆறுமுகம்



மீசாலை கிழக்கைப் பிறப்பிட மாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா ஆறுமுகம் நேற்று (10.02.2017) வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் செல்லமுத்து ஆறுமுகத்தின் அன்புமனைவியும் காலஞ் சென்ற கமலாதேவி மற்றும் சரஸ்வதி, கமலாம்பிகை, நடராச பிள்ளை, துரைசிங்கம், மங்க ளேஸ்வரி, வடிவாம்பாள், ராசாம் பாள், கமலேஸ்வரி, நளாயினி, மாலினி, நந்தினி ஆகியோரின் பாசமிகு தாயும் மகாலிங்கம், சின்னத்தம்பி, அருணாசலம், தவமணி தேவி, மனோரஞ்சினி, சபாரட்ணம் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, இரகுநாதன் மற்றும் தனபாலசிங்கம், சிவசோதிராசா, பிரபாகரன், நடனவடிவேல் ஆகியோரின் அன்புமாமியும் காலஞ்சென்றவர்களான தங்கம்மா, ஆச்சிப்பிள்ளை, சிவகாமிப் பிள்ளை, சின்னம்மா ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.02.2017) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

**த க வ ல் :**
**குடும்பத்தினர்**

**சிற்றம்பலம் வீதி,**
**மீசாலை கிழக்கு, மீசாலை.**

**021 321 2877**

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி கந்தசாமி

(ஆவரங்கால், புத்தூர்)



யாழ். ஆவரங்கால், 10 ஆம் கட்டையைப் பிறப்பிடமாக வும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி கந்தசாமி 08.02.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - புதியாத்தை தம்பதிகளின் அன்பு மருமகளும், கந்தசாமியின் ஆருயிர் மனைவியும், அருள்நங்கை (சுவிஸ்), நவசீலன் (பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (நிதி) வடக்கு மாகாணம்), சத்திய சீலன் (பிரான்ஸ்), ஜீவானந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மணிவண்ணன், தணிகைவதனி, அஜந்தா, செந்தில்வேல் ஆகியோரின் பாசமிகு மாமியா ரும், அபிக்கா, அபித்தா, துமிஸ்கா, அஸ்வினா, அஸ்வித் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

**தோற்றம்:- 01.03.1951**
**மறைவு :- 08.02.2017**

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரதடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**10ஆம் கட்டை,**
**ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால்**

**077 614 6435**

## மரண அறிவித்தல்



**பிறப்பு**
**21.01.1929**

**இறப்பு**
**09.02.2017**

### திருமதி
### இராசம்மா சின்னையா

டச்சு வீதி, சாவகச்சேரி வடக்கு, மீசாலை சோலை அம்மன் கோயிலடி யைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சின்னையா 09.02.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்து சின்னையாவின் அன்பு மனைவியும் லீலாவதி, நாகேஸ்வரி, யோகராசா (ஜேர்மனி), சத்தியயேஸ்வரி, யோகேஸ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற சிவசம்பு, இராமலிங்கம், விசாலாட்சி, சண்முகரத்தினம் மற்றும் நல்லம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் இராசரத்தினம், வடிவேலு, துஷ்யந்தி (ஜேர்மனி), மகேந்திரன், திருலோகநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் கலாரஜனி சிங்கராசா (பிரான்ஸ்), லோகதாஸ் (லண்டன் பாமசி), சுதாஜினி (ஆசிரியர், யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயம்), ஜெயந்தினி-சுரேஸ்குமார், பிரபாவதனி-பவிதராஷ், காலஞ்சென்ற பகீரதி மற்றும் தர்சினி-ஸ்ரீகாந்தன், வினோதினி-சிவாஸ்கரன் (கனடா), மேனகா-குமரதாஸ் (ஜேர்மனி), றேணுகா-அமிர்தவர்ஷன் (ஜேர்மனி), ரேகா-குலதுங்கன் (ஜேர்மனி), யுவபாலினி-வரதராஜன் (சுவிஸ்), ஆதித்தனா, அபினஜா, திவ்யா (ஜேர்மனி), தீவினன் (ஜேர்மனி), திபேதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கிருத்திகா (பிரான்ஸ்) சஸ்வினா (பிரான்ஸ்), கஜானா, அஸ்வின், அபிஷன், அக்ஷயன், சாருஜன், நறோஷன் (பின்லாந்து), நிதர்சனன் (பிரான்ஸ்), பிரணவி, வைஸ்ணவி, சாயுதன் (கனடா), சதுஷன் (கனடா), நிவந்திகா (ஜேர்மனி), சந்தோஷ், நிகிலாஷ் (ஜேர்மனி), றண்ணியா (ஜேர்மனி), ரஜான் (ஜேர்மனி), மனீஷா (ஜேர்மனி), ஜெய்ஷன் (சுவிஸ்), அமீரா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.02.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 713 2949, 077 939 3253**

## நிர்ணய...

தெரிவித்தார்.

அரிசிக்கான நிர்ணய விலை அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் கடந்த 8ஆம் திகதி நள்ளிரவு வெளியிடப் பட்டது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் சம்பா அரிசியின் விலை 80 ரூபா எனவும் நாட்டரிசியின் விலை 72 ரூபா எனவும் அரசு அறிவித்திருந்தது. ஒரு கிலோகிராம் பச்சை அரிசி 70 ரூபா என்று நிர்ணயிக் கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார். (வ-5)

## ஹெஜிங்...

அறிய முடிகின்றது.

2008ஆம் ஆண்டில் எரிபொருள் விலை அதிகரித்துக் காணப்பட்டதால் ஒப்பந்த விலை அடிப்படையில் எரிபொருளைக் கொள்வனவு செய்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் சில வங்கிகளுடன் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தது. 'ஹெஜிங்' என்று அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முறைமையின் ஊடாக எரிபொருளின் விலை குறிப்பிட்ட தொகையை விட அதிகரிக்கும்போது, சந்தை விலைக்கும் ஹெஜிங்விலைக்கும் இடைப்பட்ட தொகையை வங்கி அரசுக்கு வழங்க வேண்டும் எனவும், விலை குறையும் பட்சத்தில் ஹெஜிங் விலைக்கும் சந்தை விலைக்கும் இடைப்பட்ட தொகையை அரசு வங்கிக்கு செலுத்த வேண்டும் எனவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு குறுகிய காலத்துக்குள் உலக சந்தையில் எரிபொருளின் விலை சடுதியாக குறைவடைந்தது. ஹெஜிங் கொடுக்கல் வாங்கல் மூலம் நட்டம் ஏற்படுவதாகத் தெரிவித்து அடிப்படை உரிமை மனு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அதனை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உயர் நீதிமன்றம், உடன்படிக்கையை உடனடியாக நீக்குமாறு உத்தரவிட்டது.

உடன்படிக்கையை நீக்குவதன் மூலம் கிடைக்கும் இலாபத்தால் ஒரு லீற்றர் பெற்றோலை 100 ரூபாவுக்கு வழங்குமாறு நீதிமன்றம் பரிந்துரைத்தது. உயர் நீதிமன்றத்தின் உத்தரவை அப்போதைய அரசு பொருட்படுத்தவில்லை..

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்தாது மத்திய வங்கியின் ஆளுநர், ஹெஜிங் கொடுக்கல் வாங்கல் தொடர்பான கொடுப்பனவுகளை இடைநிறுத்துவதற்கு உத்தரவிட்டார். அதன் பிரதிபலனாக பல வங்கிகள் பன்னாட்டு முறிகள் சபையை நாடின.

நீதிமன்ற உத்தரவைப் பொருட்படுத்தாது செயற்பட்டமையால் நாட்டுக்கு 10 ஆயிரத்து 200 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டது. இவ்வாறானதொரு நிலையிலேயே சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணை இடம்பெறவுள்ளது. (வ-5)

## தீர்வு...

தமிழ் மக்களுக்கு தொடர்ந்து இழைக்கப்பட்டுவரும் அநீதியின் குரலே பிலக்குடியிருப்பு மக்களுடைய அற வழியிலான தொடர் போராட்டம்.

இந்த மக்களுடைய காணிகளை அவர்களிடமே வழங்கப்பட வேண் டும். அது காலத்தின் தேவை. அமைதி வழிப்போராட்டத்துக்கு நாம் முழு ஒத்துழைப்பை வழங்குகிறோம். இந்த மக்களுடைய போராட்டம் அரசியல் சார்ந்த விடயமல்ல. தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து இழைக்கப் பட்டுவரும் அநீதிக்கான குரலே இது. இதற்கு அனைத்துத் தமிழ் உறவுகளும் ஆதரவு வழங்க வேண்டும் என்று ஒன்றியத்தினர் அங்கு மேலும் தெரிவித்தனர். (வ-4,7)

## காணிகளுக்குள்...

பிரதேச செயலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள் தெரிவித்தனர். தலைமை அமைச்சர் ரணிலைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரும் அவர்களது நில மீட்புக்கான போராட்டம் நேற்று 8 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக உள்ள தங்கள் காணி களை விடுவிக்கக் கோரி காணி உரிமையாளர்கள் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றனர். அவர்களது காணிகளிலுள்ள படை முகாமை இடமாற்றிவிட்டு காணி விடுவிக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் தெரிவித்தார். எனினும் காணி விடுவிக்கும் வரை போராட்டம் தொடரும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்களது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து இலங்கைத் தமிழர் ஆசிரி யர் சங்கத்தினர் முல்லைத்தீவுக்கு நேற்று நேரில் சென்று மக்களுக்கு தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

'பிறரது கோடிக்குள் இருக்கிறதை விட இங்கிருந்த என்னுடைய காணியைப் பார்த்துக் கொண்டு இருப்பதே எனக்கு நல்ல சந்தோசமாக இருக்குது. என்னுடைய காணிக்குச் செல்லும் வரை நான் எங்கும் செல்லாது இங்கேயே போராட்டத்தில் இருப்பேன்' என்று கடந்த 8 நாள்களாகப் புதுக் குடியிருப்புப் பிரதேச செயலகத் துக்கு முன்பாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சி. செல்லம்மா தெரிவித்தார். (வ-4,7)

## 2016ஆம் ஆண்டு...

ளிகள் உயிரிழந்தனர். அதனுடன் ஒப் பிடும் போது 2016இல் 16 பேரின் உயிரிழப்பு அதிகரித்துள்ளது. 2016இல் 249 பேர் எயிட்ஸ் நோய்க்கு ஆளாகினர். 2015இல் 234 பேர் இந்த நோய்க்கு ஆளாகியுள்ளனர். அதன்படி 2016இல் தொற்று எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

2015ஆம் ஆண்டு மொத்தமாக 10 இலட்சத்து 21 ஆயிரத்து 663 பேர் எயிட்ஸ் நோய்ப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

பாதுகாப்பற்ற உடலுறவின் மூலமே இந்த நோய் விரைவாகப் பரவி வருகின்றது. அத்துடன், நோயின் ஆரம்ப கட்டத்தில் அதைக் கட்டுப் படுத்துவது சுலபம் என்பதால் இந்த நோயின் குணங்குறிகள் உள்ளவர்கள் உடனடியாக சிகிச்சை பெற் றுக் கொள்ள வேண்டியது அவசியம் எனவும் அந்த அறிக்கையில் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது. (வ-4)

## காதலிப்பதாக...

வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதுளை நீதிவான் மன்றம் உத்தரவிட்டது.

கொழும்பைச் சேர்ந்த மாலபே தனியார் கல்வி நிறுவனமொன்றில் கணினி தொழில்நுட்பப் பாடநெறியைக் கற்றுக்கொண்டிருந்த பென்சன் டேவிட் என்ற 22 வயது நிரம்பிய நைஜீரிய இளைஞனே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் பதுளையைச் சேர்ந்த இளம்பெண் ஒருவருடன் முகநூல் மூலம் நண்பராகி அந்தப் பெண்ணைக் காதலித்து வந்தார். அவ்வேளையில் இளம்பெண்ணிடமிருந்து 43 இலட்சத்து 600 ரூபா பணத்தைப் பெற்று நைஜீரிய இளைஞன் மோசடி செய்துள்ளார்.

பணத்தைப் பெற்ற பின்னர் இளைஞன் தனது முகநூலிலிருந்த காதலியின் தொடர்புகளை முற்றாக அகற்றியுள்ளார். இதனையடுத்து இளம்பெண் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்து பதுளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டையடுத்து பதுளைப் பொலிஸார் குறிப்பிட்ட தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்று இளைஞனைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தினர். (வ-5)

## 11 ஆவது நாள்...

களில் குதித் துள்ளதுடன், அவர்க ளுக்கு ஆதரவும் தெரி வித்து வருகின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பிலக்குடியிருப்பு மக்கள் கடந்த 11 நாள்களாக வான்படை முகாம் முன்பாக படுத்துறங்கி, அங்கேயே தங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மக்களின் இந்தப் போராட்டத்துக்கு நாள்தோறும் பல்வேறு தரப்புக்களிடமிருந்து ஆதரவு வலுத்துக் கொண்டு செல்கின்றது. அரசியல் தரப்புக்களைச் சேர்ந்தவர்களும் மக்களுக்கு உதவி வருகின்றனர்.

யாழ்ப்பாண பல்கலைக் கழக முகாமைத்துவ பீட மாணவர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக அனைத்து மாணவர் ஒன்றியம், வலி. வடக்கு மீள்குடியேற்றக் குழு, வலி. வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் என்பன இதுவரையில் ஆதரவு வழங்கியிருந்தன.

சமூக நீதிக்கான இயக்கம், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம், மன்னார் பிரஜைகள் குழு, அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் என்பன ஆதரவு வழங்குவதாக அறிவித்துள்ளன. (வ-5)

## தோட்டக்...

முன்னர் இராணுவத்தினர் நிலை கொண்டிருந்தனர். அவர்கள் கைவிட்டுச் சென்றதும் தோட்டம் செய்வதற்காக அந்தக் காணியை ஒருவர் குத்தகைக்கு எடுத்தார். காணிக்குள் காணப்பட்ட கிணற்றைஅவர் நேற்று துப்புரவு செய்தார். நீரிறைக்கும் இயந்திரம் மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டு கிணற்றினுள் இறங்கிய ஒருவர் நீரைக் கலக்கி அங்கு காணப்பட்ட சேற்றை வாளியில் அப்புறப்படுத்த அள்ளிக் கொடுத்துள்ளார்.

வாளியில் வந்த சேற்றை நிலத்தில் கொட்டிய போது அதனுள் மிதிவெடி ஒன்று கைக்குண்டு ஒன்று மற்றும் மோட்டார் குண்டு ஒன்றும் காணப்பட்டன.

கிணற்றுக்குள் நின்றவர் உடனடியாக வெளியேற்றப்பட்டுச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது. பொலிஸார் கிணற்றைப் பார்வையிட்ட போது, கிணற்றுக்குள் மேலும் பல வெடிகுண்டுகள் காணப்பட்டன.

யாழ்.பொலிஸ் நிலைய சிறப்பு அதிரடிப் படையினர் மூலம் வெடிகுண்டுகளை மீட்டு செயலிழக்கச் செய்வதற்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் அனுமதி கோரி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இன்று காலை வெடிகுண்டுகள் மீட்கப்பட்டுச் செயலிழக்கச் செய்யப்படும் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (வ-4,10,9,26)

## வடக்கு...

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பெற்றோரின் பிள்ளைகளான மாணவர்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

நில மீட்புக்கான தொடர் போராட்டத்தில் பிலக்குடியிருப்பு மக்கள் ஈடுபட்டுள்ளனர். மக்களின் போராட்ட களத்துக்குச் சென்ற இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினர் அவர்களுடன் போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

இதன்போது சங்கத்தின் பொதுச்செயலாளர் சரா. புவனேஸ்வரன் தெரிவித்ததாவது:

'முல்லைத்தீவு - பிலக்குடியிருப்பில் உள்ள தமது காணிகளை இராணுவம் கையளிக்கும் வரை நகர மாட்டோம் என்று படை முகாம் முன்பாக 11 ஆவது நாளாகக் காணி உரிமையாளர்களான பொதுமக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். அவர்களுடைய பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லவில்லை. மாணவர்களின் மன நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. இத்தகைய பாதிப்புக்கள் எங்களுக்கு மிகக் கவலையாக இருக்கின்றது.

இந்த இடத்தில் இருந்து காட்டுப் பாதையூடாக பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. முல்லைத்தீவுக் கல்வி வலய ஆசிரியர்கள் சிலர் மாலை நேரங்களில் மாணவர்களுக்கு பாடங்கள் எடுக்கின்றார்கள். அதனைச் சற்று விரிவுபடுத்த வேண்டும். இந்த மக்களுடைய போராட்டம் இன்னும் சில நாள்களுக்குள் முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். தவறின், முல்லைத்தீவு ஆசிரியர்களும் அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆசிரியர்களும், வடக்கு மாகாண மாணவர்களும் இந்தப் போராட்டத்துடன் இணைய வேண்டியநிலை ஏற்படும்.

எனவே மக்களின் காணிகளை தற்போதைய அரசு உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் - என்றார். (வ-4,7)

## இரகசியமாக...

சியம்பலாப் பிட்டிய.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்திருந்த அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, எழுவைதீவில் ஒன்றிணைந்த மின் உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வின் பின்னர் பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஈ.பி.டி.பி.யினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஸ்ரீதர் தியேட்டருக்கான மின்கட்டண நிலுவை 85 லட்சம் ரூபா செலுத்தப்படவில்லை. இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றீர்கள் என்று அமைச்சரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில், மின்சாரக் கட்டணம் செலுத்தாமல் இருக்கும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளோம். கட்டணம் செலுத்த முடியாமல் இருப்பதற்கான பின்னணியில் ஏதாவது காரணம் இருக்கின்றதா என்பது தொடர்பில் ஆராய வேண்டும்.

சட்டம் அனைவருக்கும் சமனானது. யாருக்கும் விதி விலக்கு கிடையாது. ஒரு சில சம்பவங்கள் தவறி இருக்கலாம். இவ்வாறான தகவல்களை இப்படியான பகிரங்க இடங்களில் இல்லாமல் இரகசியமாக வழங்குங்கள் - என்றார். (வ-5-101-106)

## ஹெல உறுமய...

செய்து கொண்டிருந்தார். நாம் பொருத்தமான நேரத்தில் மகிந்தவை போருக்குள் தள்ளி புலிகளை அழித்து வெற்றி பெற வைத்தோம்.

இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மூத்த உறுப்பினரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

எனது அரசியல் செயற்பாட்டைப் பார்த்து சிலர் பயப்படுகின்றனர். எனது நற்பெயரைக் கெடுப்பதற்கு அவர்கள் முயற்சி செய்கின்றனர். பத்திரிகையாளர் எக்னெலிகொடவை கொலை செய்தேன் என்றார்கள். ராஜகிரியவில் இளைஞன் ஒருவரை வாகனத்தால் மோதினேன் என்றார்கள்.

இப்போது நான் அடுத்த அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிடவுள்ளேன் என்கிறார்கள். அரச தலைவராகும் கனவு என்னிடம் இல்லை. இது எனக்கும் அரச தலைவருக்கும் இடையில் உள்ள உறவை சிதைக்க முற்படும் செயலாகும்.

அரச தலைவர் ஒருவரைத் தீர்மானிக்கும் சக்தி எம்மிடமே உள்ளது. 2005 இல் ரணில் பலமாக இருந்த நிலையில் நாம் மகிந்தவை ஒற்றையாட்சியை ஏற்கச் செய்து அவரை வெற்றிபெறச் செய்தோம்.

அதேபோல், 2010ஆம் ஆண்டு சரத் பொன்சேகா அரச தலைவருக்கான தேர்தலில் போட்டியிட்டபோது, போர் வெற்றியின் பலாபலன் அவருக்குச் சென்று அவரே வெற்றி பெறுவார் என்று அனைவரும் நினைத்தனர். ஆனால், நாம் வகுத்த வியூகம் காரணமாக 18 லட்சம் வாக்குகளால் மகிந்த மீண்டும் வெற்றி பெற்றார்.

2015ஆம் ஆண்டு அரச தலைவருக்கான தேர்தலில் நாம் மகிந்தவுக்கு எதிராக மைத்திரியை களத்தில் இறக்கி மைத்திரியை வெல்ல வைத்தோம். 2025 வரைக்கும் மகிந்தவே இருப்பார் என்று பலர் நினைத்ததை நாம் பொய்யாக்கினோம்.

நாம் ஆதரவு வழங்கிய வேட்பாளர்களே வெற்றி பெற்றனர். 2020 தேர்தலிலும் யாரை வெல்ல வைப்பது என்று நாமே தீர்மானிப்போம். நாம் ஆதரவு வழங்கும் வேட்பாளர்தான் நிச்சயம் வெற்றி பெறுவார். ஆனால், அரச தலைவராகும் திட்டம் எனக்கில்லை - என்றார். (வ-5)

## 11 தமிழர்களை...

நீதிவான் லங்கா ஜெயரத்ன, குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிக ளுக்கு உத்தரவிட்டார். கொழும்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கடத்தப்பட்டு மாணவர்கள் உள்ளிட்ட 11 பேர் காணாமற்போகச் செய்யப்பட்டனர். இவர்கள் வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை, திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளை வதிவிடமாகக் கொண்டவர்களாவர்.

இது தொடர்பான வழக்கு கோட்டை நீதிவான் மன்றத்தில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.வழக்கை முன்னெடுப்பது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதற்கு ஒரு மாத கால அவகாசத்தை நீதிவான் வழங்கினார்.

கடற்படை புலனாய்வுப் பிரிவில் இருந்த லெப்.கொமாண்டர் நிலந்த சம்பத் முனசிங்க சந்தேக நபர்களில் ஒருவராக பெயரிடப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவு கைது செய்யவுள்ளது. இதற்கே கோட்டை நீதிவான் அனுமதி அளித்தார். (வ-5)




# பறவையும் பாம்பும்

மரக்கிளையின் உச்சியில் இருந்த அந்தச் சிறிய பறவையின் கூட்டில் இரண்டு குஞ்சுகள் இருந்தன. தாய்ப் பறவை எங்கோ சென்று தனது குஞ்சுகளுக்கு இரை தேடிக் கொண்டு திரும்பி வந்த போது திடுக்கிட்டு அலறியது. ஒரு பாம்பு மெதுவாக ஊர்ந்து வந்து கூட்டை நெருங்கியது. அந்தப் பறவைக் குஞ்சுகளை உண்பதே அதன் நோக்கம். தாய்ப் பறவையால் அந்தப் பாம்பை என்ன செய்ய முடியும். "பாம்பண்ணா! பாம்பண்ணா!" என்று அலறியது. பாம்போ பறவையின் அலறலைக் கவனத்தில் கொள்ளவில்லை. "பாம்பண்ணா! ஒரு நிமிடம் நான் சொல்வதைக் கேட்பீர்களா?" என மீண்டும் மீண்டும் தாய்ப் பறவை அலறியது. திரும்பிப் பார்த்த பாம்பு "ஏன் கத்துகிறாய்" என்றது. " நீங்கள் எவ்வளவு பெரியவர். எங்களைப் போல சிறிய உயிர்கள் மேல் இரக்கம் காட்டக் கூடாதா?" என்றது பறவை. "அதுசரி உன் வாயிலே என்ன வைத்திருக்கிறாய்" என்று பாம்பு கேட்க " என் குஞ்சுகளுக்குக் கொஞ்சம் இரை கொண்டு வந்தேன் என்றது" பறவை. "அது என்ன இரை?" என்று கேட்டது. பாம்பு. "சின்னச் சின்னப் புழுக்கள் அண்ணா" என்றது பறவை. "இப்போது சொல் நீ ஏன் அந்தப் புழுக்களுக்கு இரக்கம் காட்டவில்லை? புழுக்களை விட நீ எவ்வளவோ பெரியவள் தானே" என்றது பாம்பு. அந்தக் கேள்விக்கு பறவையால் பதில் எதுவும் சொல்ல முடியவில்லை. "உனக்கு உணவு புழுக்கள், எனக்கு உணவு அவற்றை உண்ணும் நீங்கள். என்ன சரியா?" என்றது பாம்பு. பறவை வாய் திறக்கவேயில்லை. அதன் அலகுகளுக்குள் புழுக்கள் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தன. "ஏய் பறவையே, நீ என்னை அண்ணா என்று பலமுறை அழைத்தமையால் உன் அன் புக்கு நான் கட்டுப்பட்டு என் பசிக்கு இன்று வேறு வழி பார்த்துக் கொள்கிறேன்" என்று கூறிய பாம்பு, மரத்தை விட்டுக் கீழே இறங்கியது. கீழே இறங்கிய பாம்பு மேலே தலையைத் திருப்பி " நீ இப்போது புழுக்களை என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டு விட்டுப்போனது. பாம்பு போன திசையைப் பார்த்தபடி திகைத்து நின்றது பறவை.

**அடுத்தவர் குற்றங்களைக் குறை கூறுபவன், முதலில்தான் குற்றங்களைச் செய்யாதிருக்க வேண்டும். செய்துவிட்டால் மறுபடியும் செய்யாதபடி தன்னைத் திருத்திக்கொள்ள வேண்டும்.**

## கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்களைக் கொண்டு குறுக்கெழுத்துக் கட்டங்களை நிரப்புவோம்




### இடமிருந்து வலம்

1. வீரன் என்பதன் பெண்பாற் சொல்
4. யானை, சிங்கம், கரடி, பாம்பு, பல்லி போன்றவற்றை பொதுப் பெயரால் இப்படியும் கூறலாம்
6. வாழைப் பழச் சீப்புகளின் தொகுதி
7. அச்சம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்

### மேலிருந்து கீழ்


1. நகர்ப் பகுதியின் வீதி ஓரங்களில் இது அதிகமாகக் காணப்படும்
2. இது சிறிதாயினும் காரம் பெரிது என்பது பழமொழி
3. இந்த வேளையில் எல்லோரும் நன்றாக நித்திரை செய்வர்
5. முட்டையின் மேற்பகுதி

விடைகள் 13 ஆம் திகதி திங்கட்கிழமை வெளிவரும்


# உயிர் மெய் எழுத்துக்களின் அகர வரிசை

| க | ச | த |
|---|---|---|
| க - கத்தி | ச - சங்கு | த - தம்பி |
| கா - காலை | சா - சாக்கு | தா - தாகம் |
| கி - கிளி | சி - சிங்கம் | தி - திங்கள் |
| கீ - கீரை | சீ - சீலை | தீ - தீமை |
| கு - குதிரை | சு - சுத்தம் | து - தும்பி |
| கூ - கூடை | சூ - சூரியன் | தூ - தூக்கம் |
| கெ - கெடுதி | செ - செம்பு | தெ - தென்னை |
| கே -கேணி | சே - சேவல் | தே - தேன் |
| கை - கை | சை - சைவம் | தை - தையல் |
| கொ - கொக்கு | சொ - சொண்டு | தொ - தொட்டி |
| கோ - கோவில் | சோ - சோலை | தோ - தோசை |
| கௌ - கௌரவம் | சௌ - சௌக்கியம் | தௌ - தௌவல் (இளம் பருவம்) |

## படங்களுக்கிடையேயான வேறுபாடுகளை இனம் கண்டு வட்டம் இடுவோம்




# ஆமையாரின் வீடு



வீடு நல்ல வீடு
மெல்ல அசையும் வீடு
உடையாதந்த வீடு
உறுதியான வீடு

கதவு யன்னல் இல்லை
காற்றும் ஒளியும் இல்லை
உறவு பேசி யாரும்
உள்ளே வருவதில்லை

தரையில் நடக்கும் வீடு
நதியில் நீந்தும் வீடு
வாலுந் தலையும் நான்கு
காலும் உள்ள வீடு

பெருமை பேசி உள்ளே
ஒருவர் வாழுகின்றார்
அருமையான வீடு
ஆமையாரின் வீடு

# சட்டை ஊசியின் பின்னால் உள்ள கதை

சட்டை ஊசி (பின்) பிறந்தது ஒரு தற்செயல் நிகழ்வே. இதனைக் கண்டு பிடித்தவர் வால்டர் ஹாண்டுக்கே. 1949 ஆம் ஆண்டு நியூயோக் நகரில் வாழ்ந்த இவர், மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். ஒரு சிறிய இரும்புப் பட்டறை வைத்துத் தொழில் நடத்தி வந்தார். ஒரு நாள் நண்பர் ஒருவரிடம் இருந்து கடனாகப் பெற்ற 15 டொலர் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இயலாது அதைப் பற்றி தனிமையில் யோசித்துக் கொண்டிருந்தார். சிந்தனையுடன் இருந்த அவர் கையில் ஒரு பித்தளைக் கம்பி இருந்தது. அவர் சிந்தனையில் இருக்க அவருடைய கைகள் பித்தளைக் கம்பியை அப்படியும் இப்படியுமாக வளைத்துக் கொண்டிருந்தன. ஹாண்டுக்கே பல மணி நேர சிந்தனைக்குப் பின்னும் கடனைத் தீர்க்க வழி தெரியாது நண்பரிடம் சிறிது கால அவகாசம் கேட்கும் எண்ணத்துடன் எழுந்து நடந்தார்.

பாதி வழி வரை சென்ற அவருக்குத் தாம் தமது கையோடு அந்தப் பித்தளைக் கம்பியையும் கொண்டு வந்திருப்பது தெரிந்தது. அந்தக் கம்பியைப் பார்த்ததும் அவர் முகத்தில் ஓர் ஒளி தென்பட்டது. அவசர அவசரமாகத் தனது பட்டறைக்குத் திரும்பினார். அவரது கைகள் சுயமாகவும் வே[illegible]கமாகவும் இயங்கத் தொடங்கின. அந்தக் கம்பியை வளையம் போல வளைத்தார். அதன் ஒரு மு[illegible]னையைக் கொக்கி போலச் செய்தார். மற்றைய முனையைக் கூராக்கி வளைத்துக் கொண்டு வந்[illegible]து அந்தக் கொக்கியில் படிய வைத்தார். அவ்வளவுதான் மூன்றே மூன்று நிமிடத்தில் உலகின் [illegible]தலாவது சட்டை ஊசி உருவாக்கப்பட்டது. வால்டர் ஹாண்டுக்கே அதனை எடுத்துக் கொண்டு ந[illegible]ன் கண்டு பிடிப்புக்களின் உரிமையை விலைக்கு வாங்கும் தொழிற்சாலைக்குச் சென்றார். அங்கு த[illegible]து சட்டை ஊசியின் கண்டு பிடிப்புக்கான உரிமையை விற்று நானூறு டொலர் பணம் பெற்றா[illegible] கடனும் தீர்ந்தது, கவலையும் பறந்தது, புதிய பொருளும் பிறந்தது.

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், பெப். 11

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யங்ஸ்ரார் 'ஏ' அணியை எதிர்த்து ஏ.பி.சி. அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ராரின் ரி-20 தொடர்**

வவுனியா வைரவப் புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் ரி-20 தொடரின் ஆட்டங்கள் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இன்று காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வளர்பிறை பி அணியை எதிர்த்து செவ்வானம் அணி மோதவுள்ளது. நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பிறண்ட்ஸ் அணியை எதிர்த்து சீர்திருத்தம் அணி மோதவுள்ளது.

**நெடுங்கேணி பி.செ. துடுப்பாட்டத் தொடர்**

நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் அரையிறுதிகள் புளியங்குளம் புரட்சி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளன. முதலாவது அரையிறுதியாட்டத்தில் நெடுங்கேணி வடக்கு ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து கனகராயன்குளம் ஐக்கிய அணி மோதவுள்ளது. இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் புளியங்குளம் புரட்சி அணியை எதிர்த்து நெடுங்கேணி தெற்கு மத்திய அணி மோதவுள்ளது.

**தேசியமட்ட துடுப்பாட்டம்**

இலங்கை கிரிக்கெட் சபை, கழகங்களுக்கு இடையில் தேசிய ரீதியில் 50 பந்துப் பரிமாற்றங்களையுடைய துடுப்பாட்டத்தொடரை நடத்தி வருகிறது. தொடரின் ஆட்டமொன்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து குருநாகல் அணி மோதவுள்ளது.

**நெடுங்கேணி பி.செ. வலைப்பந்தாட்டம்**

நெடுங்கேணி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடர், நெடுங்கேணி பொது விளையாட்டு மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ளது. (ம-23)



# சங்கானை பி.செயலகம் சம்பியனானது



யாழ்ப்பாணம், பெப். 11

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான ஹொக்கித் தொடரில் பெண்கள் பிரிவு இறுதியாட்டத்தில் சங்கானை பிரதேச செயலக அணி சம்பியனானது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இறுதியாட்டம் நேற்று நடைபெற்றது. சங்கானை பிரதேச செயலக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி மோதியது.

ஆட்டத்தின் 5 ஆவது நிமிடத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியின் வீராங்கனை டிலக்சனா முதற் கோலைப் பதிவுசெய்தார்.

இரண்டாம் பாதியின் 18ஆவது நிமிடத்தில் சங்கானை பிரதேச செயலக அணியின் வீராங்கனை ஏஞ்சல் தனது அணிக்கான கோலைப் பதிவு செய்து பதிலடி கொடுத்தார்.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது சங்கானை பிரதேச செயலக அணி. (ம-23)

## இல்ல மெய்வன்மை

யாழ்ப்பாணம், பெப். 11

**தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.**

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. பாடசாலை அதிபர் இரா. சிறிநடராசா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்து கொள்வார்.

**வடமராட்சி இந்து மகளிர்**

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. கல்லூரி அதிபர் திருமதி தேவராணி நவரத்தினம் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனும் சிறப்பு விருந்தினராக சிவன் அறக்கட்டளை நிறுவுனர் வேலாயுதம் கணேஸ்வரனும் கலந்துகொள்வர். (ம-108)



## ஐக்கியம் அசத்தல்

யாழ்ப்பாணம், பெப். 11

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்த கழகங்களுக்கு இடையிலான இருபாலாருக்கான சதுரங்கத்தில், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

அண்மையில் நடைபெற்ற இந்தத் தொடரில், பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் இரண்டாமிடத்தை பருத்தித்துறை சென். தோமஸ் அணியும் பெற்றன.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழக மும் இரண்டாமிடத்தை வல்லியானந்தா விளையாட்டுக் கழகமும் தமதாக்கின. (ம-422)



# சென். ஜோன்ஸ் – தெவரவேவா ஆட்டம் சமநிலையில் முடிந்தது

யாழ்ப்பாணம், பெப். 11

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 19 வயதுப் பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடரில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் அம்பாந்தோட்டை தெவரவேவா மத்திய கல்லூரிக்கும் இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

சென். ஜோன்ஸ் கல்லூரியில் நேற்றும் நேற்றுமுன்தினமுமாக இரு தினங்கள் இந்த ஆட்டம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி, 281-9 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக அபினாஸ் 63 ஓட்டங்களையும், தேவபிரசாந் 59 ஓட்டங்களையும், ஜெனிபிளமிங் 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தெவரவேவா மத்திய கல்லூரி அணியின் சார்பில் சந்துர, சுதன் இருவரும் தலா 3 இலக்குகளை வீழ்த்தினர்.

தனது முதலில் இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய தெவரவேவா மத்திய கல்லூரி அணி 201 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக சந்துர 51 ஓட்டங்களையும், செகான் 50 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியின் சார்பில் கபில்ராஜ் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

தனது இரண்டாவது இன்னிங்சிற்காக துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 103-3 என்ற நிலையில் இருந்த போது ஆட்டம் சமநிலை கண்டது. (ம-23)

# இந்திய கிரிக்கெட் சபைக்கு இழப்பு

பன்னாட்டு கிரிக்கெட் சபையின் வருவாய் பகிர்வில், ஏனைய நாடுகளின் கிரிக்கெட் சபைகள் போர்க்கொடி தூக்கியதால் இந்திய கிரிக் கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு இந்திய மதிப்பில் கிட்டத்தட்ட ஆயிரத்து 250 கோடிரூபா வருவாய் இழப்பு ஏற்படும் என்று கருதப்படுகிறது.

பன்னாட்டு கிரிக்கெட் சபைக்கு அதிக வருவாய்களை வழங்கும் சபைகள் என்ற அடிப்படையில் முறையே இந்தியா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் கிரிக்கெட் சபைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. இது பாரபட்சமானது என்று ஏனைய சில சபைகள் போர்க்கொடி தூக்கின. இதனால், பன்னாட்டு கிரிக்கெட் சபையின் அண்மைய கூட்டமொன்றில், சமனான வருவாய் பகிர்வுக்கு ஆதரவாக வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இலங்கை மட்டும் இந்தியாவுக்கு ஆதரவு தெரிவித்தது. ஏனைய சபைகள் ஓரணியில் இருந்தன. இதனால் தற்போதிருக்கும் வருவாய் பகிர்வில் மாற்றம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே செய்துள்ள ஒப்பந்தத்தின்படி 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2023ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இந்தி யாவுக்கு கிடைக்க வேண்டிய ஆயிரத்து 250 கோடி ரூபா இல்லாமல் போகும் எனச் சொல்லப்படுகிறது. (ம)

# ஆரம்ப வீரராக வேண்டும் ஷோன்

## வாக் வலியுறுத்தல்

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக ஷோன் மார்ஷ் களமிறக்கப்பட வேண்டும் என்று முன்னாள் தலைவர் ஸ்ரீவ் வாக் தெரிவித்தார்.

நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடருக்காக ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் செல்லவுள்ளது. புனேயில் எதிர்வரும் 23ஆம் திகதி முதல் ஆட்டம் நடைபெறவுள்ளது. தொடர் இந்தியாவில் நடைபெறுவதால் இந்திய அணியின் ஆதிக்கம் அதிகரித்திருக்கும் என்று கருத்துக்கள் வெளியாகி வருகின்றன. இந்திய அணியின் ஆதிக்கத்தைத் தவிர்க்க ஷோன் மார்ஷ் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக வேண்டும் என்று வாக் தெரிவித்தார்.

ஷோன் மார்ஷ் ஐ.பி.எல். தொடரில் களமிறங்கியுள்ளதால் இந்தியச் சூழ்நிலையை நன்கு அறிந்து வைத்திருப்பார். எனவே விளையாடும் பதினொருவரில் அவர் வேண்டும். ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகவும் அவர் களமிறக்கப்பட வேண்டும் என்று வாக் மேலும் தெரிவித்தார். (ம)



# விராட் கோக்லி உலக சாதனை

இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி, தொடர்ந்து நான்கு டெஸ்ட் தொடர்களில் இரட்டைச் சதம் விளாசிய முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்தார். இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடி வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதல்நாள் முடிவில் அந்த அணி 356-3 என்றிருந்தது. கோக்லி 111 ஓட்டங்களுடன் இரண்டாம் நாளான நேற்றுக் களமிறங்கினார். தனது சதத்தை அவர் இரட்டைச் சதமாக மாற்றினார். 204 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இது கோக்லியின் நான்காவது இரட்டைச் சதமாகவும் அமைந்தது. இந்திய அணி இறுதியாக எதிர்கொண்ட இங்கிலாந்து, நியூசிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கு எதிராகவும் கோக்லி இரட்டைச் சதம் விளாசியிருந்தார். பங்களாதேஷுக்கு எதிரான இரட்டைச் சதம், தொடர்ந்து நான்காவது தொடரில் கோக்லி பதிவுசெய்த இரட்டைச் சதமாக அமைந்தது. இந்த அடைவை நிகழ்த்தியவரென்றால் கிரிக்கெட் வரலாற்றில் அது கோக்லி ஒருவரே. (ம)

# விக்ரம் ராஜன் கங்கு தொடர் நாளை

யாழ்ப்பாணம், பெப். 11

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்த கிண்ணத்துக்கான துடுப்பாட்டத் தொடர் நாளை ஆரம்பமாகிறது.


கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நாளை இடம்பெறும் ஆட்டங்களில், காலை 8.30 மணிக்கு திருநெல்வேலி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்ப்பாண பல்கலைக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம)

# சிறந்த பயிற்சியுடன் உள்ளேன்; நம்பிக்கை தெரிவித்தார் மலிங்க

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ரி-20 தொடரில் சிறப்பாகச் செயற்பட முடியும் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார் மலிங்க.

மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடருக்காக ஆஸ்திரேலியாவுக்குச் செல்லவுள்ளது இலங்கை அணி. இந்த மாதம் 17ஆம், 19ஆம், 22ஆம் திகதிகளில் இந்த ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. கடந்த ஒன்றரை வருடங்களாக காயம் காரணமாக அணியில் இருந்து விலகியிருந்தார் மலிங்க. இந்தத் தொடருக்கான அணியில் அவர் இடம்பிடித்துள்ளார். இதனையடுத்து கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மூன்று தொடக்கம் ஐந்து மாதங்கள் வரை சிறப்பான பயிற்சியை மேற்கொண்டுள்ளேன். சிறந்த திறனில் உள்ளேன் என்றே கருதுகிறேன். எமது அணியின் பந்துவீச்சு வரிசை மிகச் சிறப்பாக உள்ளது. எந்த அணியுடன் விளையாடுகிறோம் என்றல்லாது எதிர் அணியுடன் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினால் நிச்சயம் வெற்றிபெற முடியும் என மலிங்க மேலும் தெரிவித்தார். (ம)



# கூடைப்பந்தாட்டத்தில் ஐக்கியம் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 11

பருத்தித்துறை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஐக்கிய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் பருத்தித்துறை ஐக்கிய அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் அணி மோதியது. ஆட்டத்தில் பலத்த ஆதிக்கத்தைச் செலுத்திய பருத்தித்துறை ஐக்கிய அணி 40:9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ம-422-108)

# இமையாணன் மத்தி கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், பெப். 11


கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவுசெய்த கழகங்களுக்கு இடையிலான எல்லேயில் பெண்கள் பிரிவில் இமையாணன் மத்திய அணி சம்பியனானது.

அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து இமையாணன் மத்திய அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய மனோகரா அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துகளில் 9 இலக்குகளை இழந்து 2 ஓட்டங்களைப் பெற்றது. பிரவீனா, தர்சிகா இருவரும் தலா ஓர் ஓட்டத்தைப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இமையாணன் மத்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 30 பந்துகளில் 12 இலக்குகளை இழந்து 2 ஓட்டங்களைப் பெற்று ஓட்ட எண்ணிக்கையை சமநிலைப்படுத்தினர்.

இதனால் மேலதிகமாக 10 பந்துகள் வழங்கப்பட்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய இமையாணன் மத்திய அணி 6 இலக்குகளை இழந்து ஒரு ஓட்டத்தைப் பெற்றது. மனோகரா அணி ஓட்டமெதனையும் பெறாததை அடுத்து இமையாணன் மத்தி சம்பியனானது. (ம-422)





## இந்திய அனுபவம் வித்தியாசமானது

### அகமட் தெரிவிப்பு

இந்திய ஆடுகளங்களில் பந்து வீசிய அனுபவம் முற்றிலும் வித்தியாசமானது என்று தெரிவித்தார் பங்களாதேஷ் அணியின் வேகப் பந்து வீச்சாளர் அகமட்.

ஹைதராபாத் போன்ற ஆடுகளத்தில் (இந்தியா-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டம் தற்போது நடைபெற்று வரும் ஆடுகளம்) பந்துவீச்சாளர்கள் மிகவும் பொறுமையாக செயற்பட வேண்டும். துடுப்பாட்ட வீரர்களின் தவறுக்காக நீண்டநேரம் காத்திருக்க வேண்டியும் ஏற்படலாம். அவ்வாறான ஒரு சூழ்நிலையையே இந்தியா எமக்குத் தந்தது. இந்திய மண்ணில் பந்துவீசியது எனக்குப் புதிய அனுபவமாக இருந்தது என அகமட் தெரிவித்தார். (ம)

# கோக்லி இரட்டைச்சதம் இந்திய அணி அபாரம்

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத் தின் நேற்றைய இரண்டாம் நாளில் மிகவும் பலம்பெற்றது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித் தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக ராகுல், முரளி விஜய். முதல் பந்துப் பரிமாற்றத் திலேயே ராகுலை போல்ட் செய்து பவிலிய னுக்குத் திருப்பினார் தஸ்கின் அகமட். முரளி விஜய், புஜாரா இணை தடுமாற்றத்தில் இருந்து அணியை சிறப்பாகவே மீட்டெடுத்தது. 83 ஓட்டங்களுடன் புஜாராவும் 108 ஓட்டங் களுடனும் முரளி விஜய்யும் ஆட்டமிழந்த னர். முதல் நாள் முடிவில் இந்திய அணி 356-3 என்றிருந்தது.

கோக்லி 111 ஓட்டங்களுடனும், ரகானே 45 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். அரைச்சதம் கடந் தார் ரகானே. நேற்றும் தொடர்ந்தது கோக்லி, ரகானே இருவரினதும் மிரட்டல். 82 ஓட்டங் களுடன் ரகானே ஆட்டமிழந்தார். மறுமுனை யில் இரட்டைச் சதத்தைப் பதிவுசெய்து முத்திரை பதித்தார் கோக்லி. 204 ஓட்டங்களுடன் கோக்லியை வீழ்த்தினார் தயுல் இஸ்லாம்.

பார்திவ் பட்டேலுக்குப் பதிலாக அணியில் இடம்பிடித்த சகா, சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி தனது தெரிவின் நியாயத்தை நிரூபித்தார். சதம் கடந்தார் சகா. அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 68 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் ஜடேயா. 687-6 என்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது இந்திய அணி. 106 ஓட்டங்களுடன் சகா ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் தயுல் இஸ்லாம் 3 இலக்குகளையும், மிராஸ் 2 இலக்கு களையும், தஸ்கின் அகமட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் 38 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் சர்க்கரை வெளியேற்றினார் யாதவ். நாள் முடிவில் பங்களாதேஷ் 41-1 என்றுள்ளது. தமீம் இக்பால் 24 ஓட்டங்களுடனும், கக்கியூ ஓர் ஓட்டத்துடனும் களத்தில் உள்ளனர். (ம)



## பரிதவித்தது இலங்கை

இலங்கைக்கு எதிரான ஐந்தாவதும் இறுதியானதுமான ஒருநாள் ஆட்டத்திலும் தென்னாபிரிக்க அணி மிகவும் வலுவான நிலையில் இருந்தது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 6 இலக்குகள் இழப்புக்கு 384 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக அம்லா 154 ஓட்டங்களையும், குயின்டன் 109 ஓட்டங்களையும், பிளாசிஸ் 41 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் லக்மல் 3 இலக்குகளையும், மதுசங்க 2 இலக்குகளையும், வண்டர்சே ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இலங்கை அணி 22 பந்துப்பரிமாற்றங்களில் (பத்திரிகை அச்சுக்குப் போகும்போது) 5 இலக்குகளை இழந்து 119 ஓட்டங்களை எடுத்திருந்தது. துடுப்பாட்ட வரிசையின்படி முன்னிலை வீரர்களான டிக்வெல்ல, தரங்க, மெண்டிஸ், வீரக்கொடி, தனஞ்சய டி சில்வா ஆகியோர் ஆட்டமிழந்திருந்தனர். (ம)

## சங்கா, மகேல போன்ற வீரர்களை உருவாக்கல் மிகவும் கடினமானது

### சனத் வெளிப்படை

சங்கா, மகேல போன்ற வீரர் களைப் போன்ற வீரர்களை எதிர்வரும் காலங்களில் உருவாக்குவதென்பது மிகவும் கடினமானது என்று இலங்கை அணியின் தலைமைத் தேர்வாளர் சனத் தெரிவித்தார்.

இலங்கை வீரர்களின் திறமைக்குப் பஞ்சம் என்று நான் எந்தக் காரணம் கொண்டும் சொல்லமாட்டேன். ஆனால் கடந்த காலத்தில் இருந்த சம்பியன் வீரர்களைப் போன்று சிறந்த வீரர்களை நம்மால் தயார் செய்யமுடியவில்லை. பள்ளி மற் றும் உள்ளூர் கட்டமைப்பில் குறைபாடு உள்ளது என்றுநான் நினைக்கவில்லை. ஏனென்றால் கடந்த காலங்களில் சங்கா, மகேல போன்ற சிறந்த வீரர்களை உருவாக்கிய காலத்திலும் இதே கட்டமைப்புத்தான் இருந்தது. ஆகவே, எங்கே பிரச்சினை இருக்கிறது என்பதை ஆராய வேண்டும். பின்னர் அதைச் சரி செய்ய வேண்டும் என சனத் மேலும் தெரிவித்தார். (ம)


## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

உடல் ஆரோக்கியம் உள்ளவராகவும், சுறுசுறுப்பாகவும், அர்ப்பணிப்புடன் வேலை செய்யக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.



இன்று 11.02.2017 நேரில் சமுகம் தரவும்.

உதயன் பணிமனை
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம்



சங்கரத்தையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் 10.02.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சொக்கலிங்கம் அவர்களின் பாசமிகுமனைவியும் சிவானந்தன் (சுவிஸ்), வதனி, வசந்தி (ஜேர்மனி), சண்முகானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் என்றிக்கா, இளமுருகன், தர்மபாலன், ஜெனித்தா ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், சோமசுந்தரம், நல்லம்மா, கனகலிங்கம், கனகம்மா, கார்த்திகேசு, தியாகராசா மற்றும் அன்பு அண்ணா வெள்ளியம்பலம் அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ் சென்ற நாகேஸ்வரி Inspector இராசநாயகம், பாக்கியம் மற்றும் கமலாதேவி, செல்வராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் பிரியங்கா, பிரதீப், ரதீசனா, கிருசனா, ஆரோன், டேவிட் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.


இயக்கச்சியில்... உறுதியுடன்
காணி விற்பனைக்கு
கற்பகவனம்
1 ஏக்கர், 2 ஏக்கர் காணிகள்
A9 இல் இருந்து 1km தூரத்தில்



சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்
078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306
வங்கிக் கடன் வசதி


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.